# வணிக நாதம்

# VANIKA NAATHAM

1991 1992

## வர்த்தக மாணவர் மன்றம்

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

சுன்னாகம்.

வர்த்தக மாணவர் மன்றத்திற்கும்,
வணிக நாதத்திற்கும் எமது வாழ்த்துக்கள்!

# 'கற்பகதரு'

உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் விற்பனவு நிலையம்

**காங்கேசன்துறை வீதி, தாவடிச்சந்தி, கோண்டாவில்.**

★ சகலவிதமான உள்ளூர் உற்பத்திப் பொருட்களையும், மொத்தமாகவும், சில்லறையாகவும் கொள்வனவு செய்ய நாடுங்கள்!!

★ உள்ளூர் மூலவள சிறு கைத்தொழிலில் ஈடுபடுபவர்கள் நமது சங்கத்தின் ஊக்குவிப்புத் திட்டங்களில் பங்குபற்றி பயன்பல பெறுங்கள்!!

★ பனஞ்சீனி, பனைவெல்லம், பனங்கட்டி என்பனவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்!!!

**என அழைக்கின்றோம்.**

**கோண்டாவில்-இணுவில் தெங்கு பனம்பொருள்**

**உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்,** கோண்டாவில்

---

வணிகக்கலை வளர வணிக நாதமே வருக! வருக!

# எடிசன் அக்கடமி

யாழ். இந்துக்கல்லூரி அருகில்

**411/11, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

ஆண்டு 6 முதல் **O/L** வரை திறமைமிகு ஆசிரியர் குழுவால் கற்பிக்கப்படும் முன்னணி நிறுவனம்.

கணிதம்; திரு. பாஸ்கரன்
(யாழ். பல்கலைக்கழகம்)
விஞ்ஞானம்; திரு. J. R. சூரி,
திரு. J. J. கொலின்ஸ்
சமூகக்கல்வி; திரு. K. S. முத்துலிங்கம்
தமிழ் : திரு. தங்கவேல்,
திரு. வாமன்
ஆங்கிலம் : திரு. மனோகரன்
வர்த்தகம் : திரு. ராஜ்
(யாழ். பல்கலைக் கழகம்

**A/L 93, 94**

வகுப்புகள் நடைபெறுகின்றன.

கணக்கியல்: திரு. கார்த்திக்
(யாழ். பல்கலைக்கழகம்)
வர்த்தகமும் நிதியும்; திரு. சாம்ராஜ்
(யாழ். பல்கலைக்கழகம்)

# வணிக நாதம்
# VANIKA NAATHAM

**1991 1992**

**இதழாசிரியர்கள்:**

செல்வன் P. ஜோர்ஜ்
செல்வி T. கோமதி

**வர்த்தக மாணவர் மன்றம்**
**யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி**
**சுன்னாகம்.**

# கல்லூரிக் கீதம்

போற்றிசெய் வோமெங்கள் கல்லூரித் தாயைப்
பொலிவுடன் மாணவர் கூடி ...... (போற்றி)

ஸ்கந்தவ ரோதய எங்கள் கல்லூரி
சந்ததமும் புகழ் கொண்டே
இந்த வுலகினில் நன்கு வளர்ந்திட
ஸ்கந்த அருள்புரி நன்றே . (போற்றி)

ஆங்கில ஞானமும் அருந்தமிழ் ஆரியம்
அவைதரு ஞானமும் நன்றே
ஓங்குவிஞ் ஞானமும் உயர்தரு கலைகளும்
உண்மையில் வளர்தரு மிங்கே (போற்றி)

பிறவிகள் தோறுமே தொடருநற் கல்விப்
பேற்றினை ஈந்தனை அன்னாய்
உறவென்றும் நீயே உண்மையொ டுனக்காய்
உழைத்திடு வோமென்றும் நாமே .... (போற்றி)

எந்தை யெனத்தகு கந்தைய வள்ளலின்
சிந்தையி லெழுந்த கல்லூரி
செந்தண்மை மருத்துவன் சுப்பிர மணியனின்
சேவையில் உயர்ந்த கல்லூரி !

சேவையில் உயர்ந்த கல்லூரி !
சேவையில் உயர்ந்த கல்லூரி !
சேவையில் உயர்ந்த கல்லூரி !

வாழிய வாழிய எங்கள் கல்லூரி
வளமலிந் தோங்கியே என்றும்
வாழ்க ! வாழ்க ! வாழ்க !
வளரிள மதியெனவே
வாழிய எங்கள் கல்லூரி.

# வர்த்தக மாணவர் மன்றச் செயற்குழு

## 1991 - 1992

| | |
|---|---|
| **காப்பாளர்** | திரு. P. விக்னேஸ்வரன் ( அதிபர் ) |
| **பொறுப்பாசிரியர்** | திரு. S. சிவநேஸ்வரன் |
| **உப பொறுப்பாசிரியர்கள்** | திருமதி M. G. ஜெயரட்ணம்<br>திருமதி V. நடராஜா<br>செல்வி T. மாலினி |
| **தலைவர்** | செல்வன் R. விஜயகுமார் |
| **உபதலைவர்** | செல்வன் T. ஸ்ரீகரன் |
| **செயலாளர்** | செல்வன் T. குகதாஸ் |
| **உப செயலாளர்** | செல்வி K. பிரியதர்சினி |
| **பொருளாளர்** | செல்வன் M. பூலோகராஜா |
| **இதழாசிரியர்கள்** | செல்வன் P. ஜோர்ஜ்<br>செல்வி T. கோமதி |
| **கணக்காய்வாளர்** | செல்வன் N. சுசீந்திரராஜா |
| **விளம்பரப் பொறுப்பாளர்கள்** | செல்வன் M. அனந்தகிருஷ்ணன்<br>செல்வன் K. பாலச்சந்திரன் |
| **உதவி நிர்வாக உறுப்பினர்கள்** | செல்வன் K. குகனேந்திரராஜா<br>செல்வி S. குமுதினி<br>செல்வி T. ராஜினி<br>செல்வி S. சரோஜாதேவி<br>செல்வி K. யோகேஸ்வரி |

# அதிபர் ஆசியுரை

ஸ்கந்தா அன்னை தனது நூற்றாண்டு விழா காண்பதற்குக் கால்கொள்ளும் வேளையில் வர்த்தக மாணவர் மன்றத்தின் இம்மலர் அதற்கு அணிசெய்வதாக அமைகின்றது. இருபத்தைந்து வருடகாலத்தொகுதியினை ஒரு தலைமுறை எனக்கணக்கிடும் ஒரு மரபுண்டு. எமது கல்லூரி நான்கு தலைமுறைகளைக் கொண்டு விளங்கும் பெருமையினையுடையது. பல்கலைக்கழகத்திற்குப் பல மாணவர்களை ஆண்டுதோறும் எல்லாத்துறைகட்கும் அனுப்பிக் கல்வி மேம்பாட்டினை உயர்த்தும் வகையில் கல்விமான்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், சட்டத்துறை நிபுணர்கள் என்று இன்னோரன்ன அறிஞர்களை உருவாக்கி வருகின்ற அன்னையின் எழிலை நாமறிவோம்; நாடறியும்; உலகறியும். கிராமப்புறத்திலே அமைந்திருந்த போதிலும் கல்விச்சேவையொன்றினையே கனவிலும் நனவிலும் கருத்திற்கொண்ட நல்லாசான்கள் பலரின் வல்ல நல்ல சேவையினால் வளர்ந்து, ஸ்கந்தா ஈழத்தில் மட்டுமன்றி உலகின் பல்வேறு அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் கூடப் புகழுடன் திகழ்கின்றது.

''உண்மையே உயரறம்'' என்ற உயரியநோக்குடன் மிளிரும் இக்கல்லூரியின் புகழினை மேலும் விளங்கவைப்பதாக வர்த்தக மாணவர் மன்றத்தின் இம்மலர் அமைகின்றது. இம்மலரினை வெளியிடுவதற்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரையும் வாழ்த்தி ஸ்கந்தன் அருளுடன் இம்மன்றத்தின் முயற்சி மேலும் வளம்பெற வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**P. விக்னேஸ்வரன்**
(அதிபர்)

# எங்கள் அதிபர்



**திரு. P. விக்னேஸ்வரன்** *B. Sc (Hons.),*
**Dip-in Ed., S. L. E. A. S., Class III.**



வடமாநிலக் கல்விப் பணிப்பாளரின்

# ஆசியுரை

கல்வியின் சீர்நாதமாக விளங்குவது வணிகக்கலை. இவ்வேளையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வர்த்தக மாணவர் மன்றம் வெளியிடும் 'வணிகநாதம்' தனது ஓசையை இசைபட இயற்றுதல் பொருத்தமானதே. பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் வணிகநாதம் மலர்வது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். ''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றி தாழாதுஞற் றுபவர்'' என்ற வள்ளுவன் கூற்று உங்கள் மகத்தான சாதனைக்கோர் எடுத்துக் காட்டு. கல்விச்சமூகம் விழித்தெழ வேண்டும் அச்செல்வமொன்றே அழியாச் செல்வமாகும்.

இன்றைய உலகில் வணிகத்துறைசார் போட்டிகள், சீரான கருத்தரங்குகள் மாதிரிக்கற்பித்தல் இக்கல்வியை மேலும் வளம்படுத்துவதாகும். மலரும் நாதம் பல்கலைக்கழக வல்லுனர்களின் சிந்தனைகளையும், பிற துறைபோன வல்லுனர்களினதும் ஆற்றல்களையும் தன்னகத்தே கொண்டு பொலிவுறுவது போற்றத்தக்கதே. இம் மலர் மாணவர் கரங்களிலே பெறுமதி மிக்க பேறாக விளங்கப்போவதை எண்ணும்போது கல்விச்சமூகம் களிகொள்ளும். உங்கள் உழைப்பின் விளைவால் ஒலிக்கும் நாதம் எல்லா நல்லிதயங்களையும் உணர்வு பூர்வமாக வசப்படுத்துவதாக இப் பெருமுயற்சி ஆண்டுதோறும் ஆக்கம் பெறுக. எல்லார்க்கும் எல்லாவற்றிற்கும் என் நல்வாழ்த்துக்கள்.


கல்விச் செயலகம்
யாழ்ப்பாணம்.

**இரா. சுந்தரலிங்கம்**
வடமாநிலக் கல்விப்பணிப்பாளர்



உதவிக் கல்விப்பணிப்பாளர் (வர்த்தகம்)

அவர்களின்

# ஆசிச் செய்தி

யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வர்த்தக மாணவர் மன்றம் வெளியிடும் கன்னிமலராகிய ''வணிக நாதம்'' என்ற சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

வர்த்தகப்பாடத்தோடு தொடர்புடைய கல்விமான்களால் ஆக்கப்பட்ட சிந்தனைச் செறிவுள்ள ஆழமான ஆக்கங்கள் இம்மலரில் இடம் பெற்று இருப்பது பாராட்டத்தக்கது. அத்துடன் மாணவர்களின் ஆக்கங்களும் பல இடம் பெற்றுள்ளன. இவ்வாக்கங்கள் மாணவச் செல்வங்களின் அறிவினை வளர்த்திட பெரிதும் உதவுமென எதிர்பார்க்கிறேன்.

இம்முயற்சியினை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் போற்றப்படவேண்டியவர்களாவர். 'வணிகநாதம்' தொடர்ந்தும் இனிய நாதமாக முழங்கிட வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சி. சிவராசா
உதவிக்கல்விப் பணிப்பாளர் (வர்த்தகம்)



பழைய மாணவர் சங்கத் தலைவரின்

## ஆசிச் செய்தி

எமது கல்லூரியின் வர்த்தக மாணவர் மன்றம் வெளியிடும் வணிகநாதம் என்ற சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எமது பாடசாலைகளில் வர்த்தகக் கல்வி இன்று பெரிதும் வளர்ச்சி அடைந்துள்ளது. க. பொ. த. (உ/த) வகுப்பு மாணவர்கள் இத்துறையை விரும்பித் தேர்ந்தெடுக்கின்ற ஒரு போக்கு இன்று காணப்படுகின்றது. முகாமைத்துவம், கணக்கியல். ஆகிய துறைகளில் நிபுணத்துவம் உடையோர் இன்று நாட்டின் தனியார் துறைக்கும் அரசாங்கத் துறைக்கும் தேவைப்படுவதால் வணிகத்துறை பிரபல்யமடைந்துள்ளது. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட வர்த்தமானிப் பட்டம் (சாதாரணம்) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் உயர் தேசிய நாலாண்டு கணக்கியல் டிப்ளோமா (இறுதி) சான்றிதழுக்கும் இலங்கைத் தொழில் நுட்பக்கல்லூரியில் நாலாண்டு உயர் தேசிய வர்த்தகவியல் சான்றிதழுக்கும் சமமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்துள்ளதால் உயர் கல்வி ஸ்தாபனங்களால் வழங்கப்படும் தகைமைச் சான்றிதழ்களுக்கு இடையில் இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் வேலை வாய்ப்பில் இச்சமப்படுத்தலானது பெரிதும் உதவியாக இருக்கும் என நம்புகின்றேன்.

சமீபகாலத்தில் வெளிவந்த க, பொ. த. (உ/த) பரீட்சை முடிவுகளில் பல மாணவர்கள் வர்த்தகத்துறையில் சிறப்பான முடிவுகளைப் பெற்றுள்ளனர். இதற்கு மாணவர்கள் உழைப்பும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்புமே காரணமாகும். இம்மலர் வெளியீடானது இத்துறைக்கு மேலும் மெருகூட்டும் என்பது எனது நம்பிக்கை. மலர் சிறப்புற எனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆ. மகாலிங்கம் B.A., S,L.A.S.,**
பிரதேசச் செயலர்/உ. அ. அ. நல்லூர்

**தரம் நாடுவோர் தவறாமல் நாடும் இடம்!**

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள

**தங்க வைர நகைகளுக்கு**

**சிறந்த ஸ்தாபனம்!**

**22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு**
**உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.**

**லதா நகை மாளிகை**

தங்கப் பவுண் நகைவியாபாரம்

**176, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

---

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள

**தங்க வைர நகைகளுக்கு**

**சிறந்த ஸ்தாபனம்!**

ஓடர் நகைகள் குறித்த காலத்தில்
செய்து கொடுக்கப்படும்.

**நியூ லலிதா ஜுவல்லர்ஸ்**

**தங்கப்பவுண் நகை வியாபாரம்**

**74/1, கஸ்தூரியார் வீதி,**

**யாழ்ப்பாணம்.**



மன்றப் பொறுப்பாசிரியர்

# ஆசிச் செய்தி

இலங்கையில் புகழ் பெற்ற கல்லூரிகளில் ஒன்றாக விளங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி மீண்டும் ஓர் உன்னத நிலையை நோக்கி வீறுநடை போடும் இவ்வேளையில் அதன் வெளிப்பாடாக வர்த்தக மாணவர் மன்றத்தின் வெளியீடான வணிக நாதம் வெளிவருகின்றது. இம் மலர் தொடர்ந்து வெளிவர எல்லாம் வல்ல ஸ்கந்தப் பெருமான் அருள்புரிய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன். அதே வேளையில் இச் சஞ்சிகைக்கு நல்லாசிகள் கூற சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி யடைகின்றேன்.

இன்னல்கள் சூழ்ந்த இந்த வேளையில் எதையும் சவாலாக எடுத்துப் போராடும் என் இன மாணவச் செல்வங்களின் முயற்சியை பாராட்டுகின்றேன். அதேவேளை இம்மலர் வெளியீட்டுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த எமது கல்லூரி அதிபர் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் ஆசிச் செய்திகளை வழங்கிய பெரியார்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

இவ் வணிக நாதமானது வர்த்தக உலகில் ஒரு சிறிய முயற்சியாக இருப்பினும் எதிர்காலத்தில் பல சாதனைகளை நிகழ்த்த இறைவனை அருள் புரியவேண்டுமெனப் பிரார்த்தித்து இந் நாத ஒலி அனைவரையும் சென்றடையவேண்டுமென உளமார வாழ்த்துகின்றேன்.

ச. சிவனேஸ்வரன் B. Com. (Hons.)
M. A. A. T.

*1992 - 04 -14*

# 1990 ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்

**முகாமைத்துவத்துறை**

செல்வன் T. கிரிதரன்

**கலை, வணிகவியற்றுறை**

செல்வன் K. இரவீந்திரன்

செல்வி T. குகவதனா

## அடிப்படைப் புள்ளிகள் பெற்றோர்

T. வசீதரன்
K. நாகேந்திரகுமார்
K. பரமசிவன்
T. சிவதரன்
K. தர்மசீலன்
M. சசிகலா
G. வனஜா
M. ஜெயந்தினி
K. மிதிலா
S. சுமதி
S. சுதர்சனன்

M. தவக்குமார்
T. நளினி
R. வேணி
S. வசந்தகுமாரி
G. கோமளதேவி
K. றஞ்சினி
P. சுமதி
T. மனோகரி
P. மீரா
J. மும்தாஜ்

## நாதத்தின் இனிமையிலே உங்களுடன்....

சிறந்த கல்விச் செல்வத்தை வழங்கும் எமது ஸ்கந்தவரோதயக்கல்லூரியின் வணிகத்துறையின் கன்னி வெளியீடாக ''வணிக நாதம்'' என்னும் மலரை புதுமணத்துடன் உங்கள் கைகளில் அளிப்பதில் பேருவகை கொள்கின்றோம்.

படைத்தல் தொழிலுக்கு ஆதாரம் நாதம். வணிகத்துறை சார்ந்த பல படைப்புக்களைத் தன்னகத்தே கொண்டு வெளிவரும் வணிக நாதமானது மேலும் மேலும் பல புதிய புதிய படைப்புக்களைத் தன்னகத்தே படைக்கும் என்பது எமது அசையாத நம்பிக்கை. உயர் படைப்புக்களை தனது உன்னத இலட்சியமாகக் கொண்டு இயங்கும் வர்த்தக மாணவர் மன்றத்தின் தளரா முயற்சியே இன்றைய இவ்வணிக நாதத்தின் வெளியீடாகும்.

இம்மலர் அறிவுசால் விரிவுரையாளர்கள் எதிர்காலச் சிற்பிகளான மாணவர்கள்ஆகியோரின்.சிந்தனைவெளிப்பாடுகளையும்,ஆராய்வுத்திறனையும் தன்னகத்தே கொண்ட பல கட்டுரைகளைக் கொண்டுள்ளது. இக்கட்டுரைகளின் நாத வெள்ளத்திலே திளைத்து இன்பத்தினை நுகர்ந்து அறிவினைப் பெருக்கிக்கொள்ளுங்கள்.

இந்நாதமானது இனிமையுடன் ஒலிக்க எமது கல்லூரி அதிபர் மன்றக்காப்பாளர், நல்லாசிரியர்கள், ஆசிச் செய்திகள் வழங்கிய பெரியார்கள், கட்டுரைகளை வழங்கிய விரிவுரையாளர்கள், விளம்பரத்தைத் தந்துதவிய நல்லிதயங்கள், அழகாகவும், விரைவாகவும் அச்சிட்டு உதவிய தாசன் அச்சகத்தினர், நிதியுதவியளித்த பழையமாணவர் சங்கம், நன்கொடைகளைத் தந்துதவிய வள்ளல்கள் மற்றும் வர்த்தக மாணவர் மன்ற உறுப்பினர்கள் யாவரும் உறுதுணையாய் இருந்தனர். இவர்கள் யாவர்க்கும் எமது உளமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

ஆண்டு தோறும் வணிகநாதம் ஒலிப்பதற்கு உங்கள் அன்பையும் ஆதரவையும் வேண்டுகின்றோம்.


இதழாசிரியர்கள்

P. ஜோர்ஜ்

T. கோமதி

# நாதஅலைகளில்.......!


| விடயம் | பக்கம் |
|---|---|
| 1) கைத்தொழிற் பிணக்குகளும் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளும் : — திரு. க, தேவராஜன் | 1 |
| 2) தேசிய சேமிப்பு வங்கியின் தோற்றமும் வளர்ச்சியும் : — திரு. சி. சிவராசா | 6 |
| 3) சுற்றுலாக் கைத்தொழில் : — செல்வன் த, குகதாஸ் | 9 |
| 4 மூலதனச் சந்தையும் அதற்குள் அமையும் முக்கியமான நிறுவனங்களும் : — செல்வி S. குமுதினி | 13 |
| 5) வழமையற்ற விடயங்கள் முன்னையகால விடயங்கள் : கணக்கீட்டுக் கொள்கையிலான மாற்றங்கள் என்பவற்றிற் கான கணக்கீடு : — ரதிராணி யோகேந்திரராஜா | 18 |
| 6) பொருளாதார வளர்ச்சியும் பொருளாதார அபிவிருத்தியும் — செல்வன் இ. விஜயகுமார் | 27 |
| 7) சனத்தொகை வளர்ச்சியும் பொருளாதார விளைவுகளும் : — செல்வன் மு, பூலோகராஜா | 30 |
| 8) வர்த்தக வங்கிகளின் நடைமுறைகள் : — செல்வன் மு. அனந்தகிருஷ்ணன் | 39 |
| 9) பொருளியல் - கேள்வி நெகிழ்ச்சி மதிப்பீடு : — திரு, ப. சிவநாதன் | 46 |
| 10) வெளிநாட்டு உதவி : — செல்வன் ந. சுசீந்திரராஜா | 57 |
| 11) விளம்பரம் : — செல்வி த. ராஜினி | 61 |
| 12) விஞ்ஞானமும் விஞ்ஞான முறையும் : — செல்வி த. கோமதி | 65 |
| 13) மூலதனக் குறைப்பு : — செல்வி A. கோமதி | 69 |
| 14) புவியியலில் ஓர் கண்ணோட்டம் : — செல்வி க. பிரியதர்சினி | 77 |
| 15) இதிகாசம் கூறும் சமய மரபு : — செல்வி கா. யோகேஸ்வரி | 81 |



**இருப்பவர்கள்;** திருமதி N. நடராஜா, திரு. A. தற்பரானந்தன் (உப அதிபர்), செல்வன் R. விஜயகுமார் (தலைவர்), திரு. P. விக்னேஸ்வரன் (அதிபர்), திரு. S. சிவநேஸ்வரன் (மன்றப் பொறுப் பாசிரியர்), திரு, புவனேந்திரநாதன் (உப அதிபர்), செல்வன் T, குகதாஸ் (செயலாளர்)

**நிற்பவர்கள் 1-ம் வரிசை:** செல்வி T. கோமதி, செல்வி T. ராஜினி, செல்வி S. சரோஜாதேவி, செல்வி T. மாலினி திருமதி M. G. ஜெயரட்னம், செல்வி K. பிரியதர்சினி, செல்வி S. குமுதினி, செல்வி K, யோகேஸ்வரி,

**நிற்பவர்கள் 2-ம் வரிசை:** செல்வன்கள் T. குகனேந்திரராஜா, T. ஸ்ரீகரன், P. ஜோர்ஜ், N. சுசீந்திரராஜா, M. பூலோகராஜா (பொருளாளர்), K. பாலச்சந்திரன், M. அனந்தகிருஷ்ணன்.

# கைத்தொழிற் பிணக்குகளும் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளும்

**கந்தையா தேவராஜா**
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*வணிகமுகாமைத்துறை, யாழ் பல்கலைக் கழகம்*

## 1.0 அறிமுகம்

தொழில் நிறுவனங்களிலே ஆற்றப்படும் தொழில் தொடர்பாக முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையில் ஏற்படுகின்ற முரண்பாடுகள் எல்லாம் கைத்தொழிற் பிணக்குகள் எனப்படும். தொழில் நிறுவனங்களில் பிணக்குகள் தோன்றுமிடத்து சுமுகமான தொழில்உறவு நிலவ முடியாது. இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகளிலே நிறுவனங்கள் எதிர்நோக்கும்முக்கிய பிரச்சினையாக கைத்தொழிற் பிணக்கே காணப்படுகின்றது. இக் கைத்தொழிற் பிணக்கானது முதலாளிக்கும் தொழிலாளருக்குமிடையே வேலை சம்பந்தமாக அல்லது வேலை கொடுக்காமை சம்பந்தமாக அல்லது வேலை நிபந்தனைகள் சம்பந்தமாக அல்லதுவேலையில்அமர்த்துதல் சம்பந்தமாக அல்லது சேவையை முடிவுக்குக் கொண்டு வருதல் சம்பந்தமாக ஏற்படுகின்ற எல்லாப் பிணக்குகளையும் அடக்கியிருக்கும். இத்தகைக் கைத்தொழிற் பிணக்கு எந்தவொரு நிறுவனத்திலும் கைத்தொழிற் றொடர்பைப் பாதிக்கும் என்பதே முக்கிய விளைவாகும்.

## 2.0 கைத்தொழிற்தொடர்பு [Industrial Relations]

தொழில் நிறுவனங்களிலே முதலாளிக்கும் தொழிலாளருக்கும் இடையில் தொழில் முறை தொடர்பாக உள்ள உறவைக் கைத்தொழிற்றொடர்பு என்பர். எந்தவொரு நிறுவனத்திலும் அது சிறப்பாக இயங்குவதற்கு தொழில்உறவானது சுமுகமாக இருக்கவேண்டுமென்பது கூறாமலே தெளிவாகும். ஒரு நிறுவனத்திலே சிறந்த கைத்தொழிற்றொடர்பு நிலவுவதற்கு பின்வருவன வாய்ப்பாக அமைந்திருக்கும்.

1. சம்பளங்கள், வேலை நிபந்தனைகள் ஆகியவற்றை காலத்துக்குக் காலம் சீர் செய்து கொடுக்கக்கூடிய நடைமுறைகள்.
2. முதலாளி தொழிலாளிக்கிடையில் ஏற்படும் பிணக்குகளை இயலுமானவரை தவிர்ப்பதற்கும் தீர்ப்பதற்குமான ஒழுங்குகள்.
3. தொழிலாளர்களது நலனைப் பேணக்கூடிய சட்டங்களைக் கடைப்பிடித்து வருதல்.
4. முகாமையில் தொழிலாளர் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள்.
5. தொழில் உறவு சம்பந்தமான பயிற்சிகளை முகாமையாளருக்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் வழங்குதல்.

என்பன போன்ற நடவடிக்கைகளை நிறுவனங்கள் கைக்கொள்வதனால் முதலாளி தொழிலாளி நல்லுறவு அதிகரிக்கப்பட முடியும், இத்தகைய நல்லுறவு வளர்க்கப்பட்டுவிடுமாயின் அது கைத்தொழிற் பிணக்குகளை இழிவு நிலைக்குக் கொண்டு வரும் என்பதில் ஐயமில்லை.

## 3.0 கைத்தொழிற் பிணக்குக்கானகாரணங்கள்

தொழில் நிறுவனங்களில் பிணக்குகள் தோன்றுவதற்குப் பல காரணங்கள் முன்வைக்கப்படுவது வழக்கம். இவை அடிப்படையிலே மூன்று பிரிவாக நோக்கப்பட முடியும்

### 1. பொருளாதாரக் காரணம்

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதற்கேற்ப தொழிலாளர்களது சம்பளங்கள் அதிகரிக்கப்படுவதில்லை. இதன் காரணமாக தொழிலாளர்களது வாழ்க்கைத்தரம் பாதிப்படைவது வழக்கம். இதன் காரணமாகவே சம்பள அதிகரிப்புக் கோரிக்கையை அவர்கள் முன்வைப்பதுடன் உபகாரப்பணம், வாழ்க்கைச் செலவுப்படி போன்ற மேலதிக நன்மைகளையும் கோரிவருகின்றனர்.

### 2. உளவியல் காரணம்

தொழிலாளர் என்றும் நல்ல வேலைச் சூழ்நிலையில் பணிபுரிய விரும்புவது வழக்கம் இதன் காரணமாகத் தொழில் நிலையங்களிலே நல்ல பாதுகாப்பு, நல்ல வசதிகள், வேலைநேரம், லீவுநாட்கள் என்பனவற்றை எதிர்பார்ப்பது வழக்கம். எல்லா ஊழியர்களும் வேலைசெய்வதன் ஊடாக சில திருப்திகளைப் பெற்றுக்கொள்வது வழக்கம் என்பதால் அத் திருப்திகள் வழங்கப்படாதபோது பிணக்கு ஏற்பட முடியும்.

### 3. உருவாக்கற்காரணம்

தொழிலாளர்கள் என்றுமே இணைந்து இயங்க விரும்புவதனால் அவர்கள் தொழிற் சங்கம் எனும் சட்ட ரீதியான அமைப்பை உருவாக்க விரும்புவதுண்டு. ஆனாலும் சில முதலாளிமார் தொழிற்சங்கம் உருவாக்கப் படுவதனை விரும்புவதில்லை. தொழிற் சங்கம் முறைசார்ந்த அமைப்பு என்ற வகையிலே தொழிலாளர்களது வலிமையை அதிகரித்துவிடும் எனக்கருதி முதலாளி தொழிற்சங்கத்தின் உருவாக்கத்திற்குக் காட்டும் எதிர்ப்புப் பிணக்காக மாறும்.

## 4.0 தொழிற்பிணக்கினால் ஏற்படும் விளைவுகள்

தொழிற் பிணக்கு ஏற்பட்டுவிடுமாயின் அது முதலாளி தொழிலாளிக்கிடையேயான நல்லுறவைப் பாதிக்கும் இதன் காரணமாக முதலாளிக்குஎதிராகதொழிலாளர் பலஎதிர் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். அதேபோல் தொழிலாளருக்கு எதிராகவும் முதலாளி எதிர் நடவடிக்கை எடுக்க முடியும். தொழிலாளரைப் பொறுத்தவரை

வேலை நிறுத்தம்
ஆறுதல் வேலை
சட்டப்படி வேலை
மறியல்
அடையாள வேலை நிறுத்தம்

போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் அதேபோல் முதாளியைப் பொறுத்தவரை

கதவடைப்பு
சம்பளக் குறைப்பு
பதவிக் குறைப்பு
வேலை இடைநிறுத்தம்
வேலை நீக்கம்

போன்ற நடவடிக்கைகளில் கவனம் செலுத்தமுடியும். இவ்வாறு முதலாளியும் தொழிலாளரும் எதிர் நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவர்களுக்கிடையே மேலும் முரண்பாடுகளை வளர்க்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் காரணமாகவே எந்தவொரு நிறுவனமும் தொழிற் பிணக்குகளை இயலுமானவரை விரைவாகத் தீர்த்துக் கொள்ளல் வேண்டும்.

## 0.5 தொழிற் பிணக்கைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள்

கைத்தொழிற் பிணக்குகள் தொடர்பான விசாரணைகள், தடுப்பதற்கான நடவடிக்கைகள், தீர்வுகள் ஆகியவற்றைப் பற்றிய நடைமுறைகளை அறிமுகப்படுத்தியதே 1950ம் ஆண்டின் தொழிற்பிணக்குகள் சட்டமாகும். தொழிற் பிணக்குகள் நீண்ட காலம் நிறுவனங்களில் இடம் பெற முடியாதென்பதால் எந்தவொரு நிறுவனமும் இயலுமானவரை தொழிற் பிணக்கை விரைவாகத் தீர்த்துவைத்தல் வேண்டும் இதற்காகத் தொழிற்பிணக்குகள் சட்டம் காலத்துக்குக்காலம் திருத்தம்

செய்யப்பட்டு வந்துள்ளது. இத் தொழிற் பிணக்குகள் சட்டத்தின்படி தொழிற் பிணக்குக்கான பின்வரும் நிவாரணங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுட்டுள்ளன. அவை

## 1- கூட்டுப் பேரம் பேசலும் கூட்டு உடன்படிக்கையும்

முதலாளியும் தொழிலாளர்களது பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம் பெறும் ஒரு கலந்துரையாடலே கூட்டுப் பேரம் பேசல் எனப்படும். தொழிற் பிணக்கைத் தீர்த்துக்கொள்ளும் முகமாக இரு பகுதியினரும் கலந்து கொள்ளும் சமரசப் பேச்சுவார்த்தையாகக் கூட்டுப் பேரம் பேசல் அமைவதுண்டு. இக் கூட்டுப் பேரம் பேசல் சம்பளக் கொடுப்பனவு வேலை நேரம் விடுமுறை இரவு வேலை நிபந்தனைகள் தொழிற் சங்க உரிமைகள் போன்றவற்றுக்காக மேற்கொள்ளப்படும். கூட்டுப் பேரம் பேசலில் இணங்கிய விடயங்களை எழுத்து வடிவில் உருவாக்கும் நடவடிக்கையே கூட்டு உடன்படிக்கையாகும். இலங்கையில் கூட்டு உடன்படிக்கைகள் தொழில் ஆணையாளரால் ஏற்கப்பட்டு அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவுடன் சட்ட வலிமை கொண்டதாகக் கருதப்படும், உடன்படிக்கையின் நிபந்தனைகளையும் நியதிகளையும் மீறுகின்ற எச் செயலும் கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின்படி ஒரு குற்றச் செயலாக கொள்ளப்படும். எனவே தான் தொழிற்பிணக்குகளை நிரந்தரமாகத் தீர்த்து வைப்பதே கூட்டு உடன்படிக்கையின் நோக்கம் என்பர்.

## 2. இணக்கம் செய்தல். Conciliation

கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் மூன்றாம் பிரிவு இணக்கம் செய்தலூடாக தொழிற்பிணக்கைத் தீர்த்து வைக்கும் பொறுப்பை தொழில் ஆணையாளருக்கு வழங்குகின்றது. தொழில் ஆணையாளரால் பிணக்கினைதீர்த்துவைக்க முடியாத போது அவரால் அங்கீகரிக்கப்பட்ட ஒருஅதிகாரிக்கு கைத்தொழில்பிணக்கினைப் பாரப்படுத்த முடியும். தொழில் ஆணையாளர் குறிப்பிட்ட பிணக்கினைத்தீர்த்து வைக்க எழுத்துவடிவில் யாரை நியமிக்கின்றாரோ அவரை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாகக் கொள்வர்.

இணக்கம் செய்தல் முறையிலே தொழிற் பிணக்கைத் தீர்த்துவைக்கும் விசாரணையானது ஒரு மாதத்துள் முடிவடைய வேண்டும். ஆனால் தொழில் ஆணையாளர் விரும்பினால் இக்கால எல்லை நீடிக்கப்படலாம். இதன் பிரகாரம் தொழிற் பிணக்குக்கு இணக்கம் ஏற்படும் பொழுது அதனை எழுதி இரு சாராரதும் கையொப்பம் பெறப்படும் இவற்றால் இணக்கம் ஏற்பட முடியாதவிடத்து இணக்கம் காண்பதற்கான ஆலோசனை கொண்ட அறிக்கையொன்று தயாரிக்கப்படும் ஒரு பாரதுரமான கைத்தொழிற் பிணக்காக இருப்பின் இது அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் இணக்கம் செய்தல் மூலம் தொழிற்பிணக்கு தீர்க்கப்பட முடியாவில்லையெனில் அது நடுத்தீர்ப்புக்கு விடப்பட முடியும்.

## 3. நடுத் தீர்ப்பு Arbitration

தொழிற் பிணக்குகள் சட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் நடுத்தீர்ப்பானது அடிப்படையில் இருவகைப்படும்

(i) தன்னிச்சையான நடுத்தீர்ப்பு

(ii) காட்டாயமான நடுத்தீர்ப்பு

இதில் தன்னிச்சையான நடுத்தீர்ப்பு என்பது முதலாளியும் தொழிலாளர் பிரதிநிதிகளும் விரும்புகின்ற ஒருவரை நடுவராக நியமித்து அவர் மூலம் பிணக்கினைத்தீர்க்கும் முறையாகும் இங்கு முதலாளி,தொழிலாளி செல்வாக்குப் பெற்ற ஒருவரை நடுவராக நியமித்து அவர் மூலம் தீர்ப்புப் பெறப்பட முடியும்.

கட்டாய நடுவர் தீர்ப்பு என்பதோ தொழில் ஆணையாளரால் நியமிக்கப் பட்ட ஒருவர் நடுவராக நியமிக்கப்பட்டு தொழிற் பிணக்கைத் தீர்த்துவைக்கும் முறையாகும். கட்டாய நடுவர் தீர்ப்பிலே நியமிக்கப்படும் நடுவர் தொழிலாளி செல் வாக்குப் பெற்றவராகவோ முதல ளி செல் வாக்குப் பெற்றவராகவோ இருக்கமாட் டார் இதன்காரணமாக முதலாளியும் தொழிலாளியும் தொழிற் திணைக்களத் துக்கு வரவழைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படும் இதன் பின்னர் கட் டாய நடுவர் வழங்கும் தீர்ப்புக்கு இரு சாராரும் கட்டுப்பட்டு தொழிற் பிணக் கைத் தீர்த்தல் வேண்டும்.

## 4 தொழில் நியாய சபை Labour Tribunals

தொழில் பிணக்கின் காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆறு மாத காலத்திற்குள் தொழிற் பிணக்கைத் தீர்ப் பதற்கான முறையே இதுவாகும் 1957 ல் இயற்றப்பட்ட தொழிற் பிணக்குகள் திருத்தச் சட்டம் என்பதனால் நியாய மன்ற முறையில் வேலை நீக்கம் செய்யப் படுவதனை விசாரிக்கவும், தொழிலாள ருக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கவும் தொழில் நியாய சபை உருவாக்கப்பட் டது. வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆறு மாத காலத்திற்குள் ஒரு தொழிலாளி விண்ணப்பிப்பதன் மூலம் கைத்தொழில் நியாய சபையின் உதவியைப் பெறலாம்.

தொழிலாளர் தன் விண்ணப்பத்தில் மீள வேலைக்கமர்த்தல், நஷ்டஈடுவழங்கல், பணிக்கொண்ட (gratuity)ஆகிய வற்றைக் கோரமுடியும் இவ்விண்ணப்பம் தொழில் நியாய சபையின் செயலாளருக்கு அனுப் பப்படுதல் வேண்டும் அத்தகவல் முதலா ளிக்கு அனுப்பப்பட்டு அதற்கு பதில் அனுப்புமாறு வேண்டப்படுவர் அப்பதிலின் பிரதியொன்று தொழிலாளருக்கு அனுப் பப்படும். பின்னர் தொழில் நியாய சபை திகதியொன்றை நிர்ணயித்து அதனை இரு கட்சியினருக்கும் அறிவித்து அவர்களை அத்தேதியில் சமூக மளிக்கச் செய்யும் அன் றைய தினம் இணக்கம் செய்வதற்கான முயற்சியில் நியாயசபையின் தலைவர் ஈடு படுவார், அதற்கு சம்மதிக்காத போது தொழில் நியாய சபையின் தலைவர் தனக்கு முன் சமர்ப்பிக்கப்பட்ட சான்று களை மையமாகக் கொண்டு தீர்ப்பொன்றை வழங்குவார் அதற்கு முதலாளியும் தொழி லாளியும் கட்டுப்படுவது வழக்கம் இலங் கையில் தொழிற் பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் முக்கிய முறையாக தொழில் நியாய சபையே கொள்ளப்படும்.

## 5- கைத்தொழில் நீதிமன்றம் Industrial Court

தொழிற் பிணக்கினால் வேலைநீக் கம் செய்யப்பட்ட ஆறுமாத காலத்திற் குள் தொழிற் பிணக்கைத் தீர்த்துக் கொள்ள கையாளப்படும் முறையே இது வாகும் இதற்கென ஜனாதிபதியால் ஐந்து பேர் கொண்ட குழுவொன்று நிய மிக்கப்படுவது வழக்கம். இக் குழு மூன்று ஆண்டுகளைப் பதவிக்காலமாகக் கொண் டிருக்கும் பின்னர் வேண்டுமாயின் அவர்க ளையோ அல்லது வேறு ஆட்களையோ ஜனாதிபதி நியமிக்க முடியும் இதன்படி விசாரணக்குழு முன் முதலாளியும் தொழி லாளியும் வரவழைக்கப்பட்டு விசாரிக்கப் படுவர். அதன்பின்னர் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய தீர்ப் பொன்றை குழுவினர் வழங்குவதுடன் அதனைத் தொழில் ஆணையாளருக்கும் அறிவிப்பார். இத்தகைய முறையில் தொழிற் பிணக்கைத் தீர்ப்பதற்கு வசதி யாகவே மாவட்டங்கள் தோறும் இலங்கை அரசாங்கத்தால் கைத்தொழில் நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட வகையில் தொழிலில் இருக்கின்ற பொழுது வரும் பிரச்சினை களை கூட்டுப்பேரம், பேசல். இணக்கம் செய்தல், நடுத்தீர்ப்பு ஆகிய வற்றின் மூலம் வேலை நீக்கப்பட்டமையால் வரும் பிணக்குகளை தொழில் நியாயசபை கைத்

தொழில் நீதிமன்றம் போன்றவற்றினாலும் தீர்த்துக்கொள்ள முடியும். இதனாலேயே தொழிற் பிணக்குகளை தீர்க்க பல முறைகள் இருப்பதாக கருதப்படுகிறது.

## 6.0 முடிவுரை

கைதொழிற் பிணக்கு என்பது இன்றைய நிறுவனங்களிலே அதிகரித்துவரும் ஒரு பிரச்சனை என்பதை யாரும் மறுக்க முடியாது. இலாப நோக்கம் கொண்ட முதலாளிக்கு, அதிக நலன்களை எதிர்பார்க்கும் தொழிலாளருக்கும் இடையே முரண்பட்ட நோக்கம் இருப்பதனால் பிணக்குகள் தோன்றுவது தவிர்க்க முடியாததாகின்றது. இப்பொழுது தொழிற் சங்கவளர்ச்சியும் துருதப்பட்டிருக்கும் காரணத்தால் தொழிலாளர் வலிமை மேலோங்கி வருகின்றது. இதன் காரணமாகவே தற்கால நிறுவனங்கள் முரண்பாடுகளைக் குறைத்துக் கொள்ளவும், தொழிலாளருடனான உறவுகளை அதிகரித்துக் கொள்ளவுமென ''முகாமையில் தொழிலாளர் பங்குகொள்ளல்'' எனும் நிலையை அறிமுகப் படுத்துகின்றன. இதன் காரணத்தால் எதிர்காலத்தில் தொழிற் பிணக்குகள் இயலுமானவரை குறைக்கப்பட முடியுமென இருப்பதுடன் கைத்தொழில் உறவுகளும் அதிகரிக்கப்படும்,

— ★ —

*1991ல் மக்கள் வங்கி, இலங்கை வங்கி, அட்டன் நாஷனல் வங்கி என்பன தன்னியக்க ரெலர் பொறிகளை அறிமுகப்படுத்தியுள்ளன. இவற்றுடன் மொத்தம் 7 வங்கிகள் தன்னியக்க ரெலர் பொறிகளை இணைத்துள்ளன. மக்கள் வங்கி தனது தன்னியக்க ரெலர் பொறிக்கு ''பெற்'' (மக்கள் தன்னியக்க ரெலர்) எனவும் இலங்கை வங்கி தனது தன்னியக்க ரெலர் பொறிக்கு ''சீபாங் கேஸ் பொயின்ட்'' எனவும் பெயரிட்டுள்ளன.*

# தேசிய சேமிப்பு வங்கியின் தோற்றமும் வளர்ச்சியும்


சி. சிவராசா

முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம்


நாடுகளில் முதலீட்டுப் பற்றாக்குறையினால் உற்பத்தி குறைவாகவே உள்ளது. இலங்கையின் சுதந்திரமடைந்த ஆரம்ப காலங்களில் முதலீட்டுப் பற்றாக்குறை அதிகமாக இருக்கவில்லை. ஆனால் 1960ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட காலத்தில் இப்பிரச்சினை வலுப்படையத் தொடங்கிற்று. முதலீட்டினை அதிகரிப்பதற்கு உள்நாட்டுச் சேமிப்புடன் வெளிநாட்டு உதவியும் முக்கியம்பெறுகின்றன. இவற்றுள் உள்நாட்டுச் சேமிப்பினை குறிப்பாக வீட்டுத்துறையினரின் சேமிப்பை அதிகரிக்கச் செய்வதற்காக தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் இலக்கம் 30, 1971ஆம் ஆண்டிற்கமைய, ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி 1971ஆம் ஆண்டு சட்டமாக்கப்பட்டது. இது 1971ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 29ஆம் திகதி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு, தனது வங்கித் தொழிலை 7972ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ஆம் திகதி ஆரம்பித்தது.

முதலாவது தேசிய சேமிப்பு வங்கிக் கிளையானது 1972ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முதலாம் திகதி கொள்ளுப்பிட்டியில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வங்கி ஆரம்பிக்கப்பட்டபோது இலங்கையில் இதற்கு முன்னர் நடைமுறையிலிருந்த அஞ்சல் அலுவலக வங்கியையும், இலங்கைச் சேமிப்பு வங்கியையும் தனதாக்கிக்கொண்டு தேசிய சேமிப்பு வங்கி செயற்பட ஆரம்பித்தது. இதுவரையில் வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி, மன்னார். சுன்னாகம், சாவகச்சேரி உட்பட ஏறக்குறைய 80 கிளைகளை உள்ளடக்கியுள்ளதை அறியலாம். மேலும் காலக்கிரமத்தில் வடபகுதியில், வவுனியா, சங்கானை, ஊர்காவற்துறை, திருகோணமலை ஆகிய இடங்களில் கிளைகளை ஆரம்பிக்க இருப்பது குறிப்பிடத்தக்கது இவற்றைவிட இலங்கையில் அமைந்துள்ள 4000 அஞ்சல் அலுவலகங்களும் உபஅஞ்சல் அலுவலகங்களும் இவ்வங்கியுடன் இணைந்து முகவர்களாக செயற்பட்டு வருகின்றன.

தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகள் பரவலாக ஆரம்பிக்கப்பட்டாலும் கிராமப்புறங்களை அண்டி பெருமளவு வங்கிக் கிளைகள் இல்லாமையினால் இவ்வாறான அஞ்சல் அலுவலகங்கள், உபஅஞ்சல் அலுவலகங்களின் செயற்பாடு அவசியமாகின்றது. இவ்வங்கியின் முகவர்களாக செயற்படும் இவற்றின் முழுமையான கட்டுப்பாடானது, தேசிய சேமிப்பு வங்கியின் தலைமைக் காரியாலயத்தில் 6 கூறுகளினால் (Units) மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இம்முகவர் நிலையங்களில் எத்தொகையினையும் சேமிப்பாக மேற்கொள்ளலாம் ஆனால் பணத்தை மீளப் பெறுவதற்கான கட்டுப்பாடுகள் தேசிய சேமிப்பு வங்கித் தலைமைக் காரியாலயத்தினால் நாளுக்கு நாள் தளர்த்தப்படுவதையும் நன்கு அறியலாம். தற்போது அஞ்சல் அலுவலகத்தில் ரூபா 2500/-ம் உப-அஞ்சல் அலுவலகத்தில் ரூபா 1000/-ம் சேமிப்புப் புத்தகத்திலிருந்து உடன் (On Demand) பெற்றுக்கொள்ளலாம். இதைவிட கூடிய தொகையை மீளப் பெறவேண்டுமாயின் தலைமைக் காரியாலயத்திலோ அல்லது அஞ்சல் அலுவலகங்கள் மூலம் விண்ணப்பித்தோ பெற்றுக்கொள்ளலாம். இதேபோல் விண்ணப்பித்து அஞ்சல் அலுவலகங்களிலுள்ள பணத்தை தேசிய சேமிப்பு வங்கிக் கிளையிலுள்ள தங்கள் கணக்கிற்கும் மாற்றிக்கொள்ளலாம்.

இவ்வாறு தேசிய சேமிப்பு வங்கியும் அதனது முகவர் நிலையங்களும் இவ்வங்கி

ஆரம்பிக்கப்பட்ட சட்டத்தின் பிரகாரம் பின் வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றன

i) மக்களின் சேமிப்பு நாட்டத்தினை அதிகரிக்கச் செய்தல்.

ii) பலவகையான சேமிப்புக் கணக்குகளை வாடிக்கையாளர்கள் மத்தியில் அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துதல்.

iii) சேமிப்புச் சான்றிதழ்களை வழங்குதல் முறிகளை (Bonds) வழங்குவது போன்ற காலத்திற்கு ஏற்பப் புதிய சேமிப்புக் கணக்குகளை உருவாக்குதல்.

iv) வங்கியின் வைப்புக்களை அதிகரிப்பதற்கு தேவையான போட்டிகளை நடைமுறைப்படுத்துதல்.

v) சேமிப்பாக இவ்வங்கிக்கு கிடைக்கும் மொத்த வைப்புக்களை அரசாங்கத்தால் உத்தரவாதமளிக்கப்பட்ட திறைச்சேரி உண்டியல்கள் கடன்பத்திரங்கள் ஆவணங்கள் என்பவற்றில் முதலீடு செய்தல், இவற்றைவிட நாணயச் சபையின் ஆலோசனையுடன் நிதிமந்திரியால் அங்கீகரிக்கப்படும் ஆவணங்கள, உறுதிப்பத்திரங்கள் என்பவற்றிலும் திறைச்சேரி உண்டியல் வட்டி வீதத்திற்கு குறைவில்லாமல் பெறும் வட்டி வீதத்தில் அரசாங்கத்தில் வைப்புச் செய்தல், மற்றும் நாணயச் சபையின் ஆலோசனையுடன் நிதிமந்திரியால் அங்கீகரிக்கப்படும் ஏனைய முதலீடுகள் என்பவற்றிலும் இவ்வங்கி தான் திரட்டிய பணத்தினை முதலீடு செய்யலாம்.

தேசிய சேமிப்பு வங்கி அரச நிதி நிறுவனங்களில் ஒன்றாக கருதப்படுமே தவிர வணிக வங்கியாகமாட்டாது. ஏனெனில் வணிக வங்கி போன்று நடைமுறைக் கணக்குகளைநடைமுறைப்படுத்துவதில்லை. இதனால் தேசிய சேமிப்பு வங்கியினால் பண ஆக்கம் செய்யமுடியாது. எனினும் ஏனைய வங்கிகளை நிதி நிறுவனங்களை விட, அரசாங்க உத்தரவாதம் (Govt, Guarantee) எனும் விசேட சலுகையை கொண்டுள்ளது. அதாவது இவ்வங்கியில் வைப்புச் செய்யப்படும் எல்லாப் பணத்திற்கும் அரசியல் சட்டரீதியாக அரசாங்கத்தினால் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்படுகிறது.

i) இலங்கையில் காணப்படும் சகல அரச நிறுவனங்களையும் விட சேமிப்புக் கணக்குகளுக்கு உயர்ந்த வட்டி வீதத்தை வழங்குகின்றது.

ii) ஐந்து ரூபாவுடன் (5/-) எவரும் தேசிய சேமிப்பு வங்கியில் சாதாரண சேமிப்புக் கணக்கினை ஆரம்பிக்கலாம். இச்சலுகையினால் மிகக் குறைந்த வருமானம் பெறுபவர்கள் மத்தியிலும் சேமிப்பினை அதிகரிக்க வாய்ப்புண்டு.

iii) இலங்கையில் ஏனைய வணிக வங்கிகள், நிதிநிறுவனங்கள் போலன்றி எத்தொகைப் பணத்தினை மீளப் பெறினும் முத்திரை வரி அறவிடப்படுவதில்லை. அதாவது முத்திரை ஒட்டத் தேவையில்லை.

iv) தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புச் செய்யும் பணத்துக்கு சாட்டுதல் (Nomination) செய்வதன் மூலம் வைப்பாளர் தனக்குப்பின் உரித்தாளியை சட்டப்படி தீர்மானித்துக் கொள்ளலாம்.

**தேசிய சேமிப்பு வங்கியில் தற்போதுநடைமுறையிலுள்ள திட்டங்கள்:**

**1. சேமிப்புக்கணக்கு**
Sevings Accounts

ஏழு வயதிற்குட்பட்டோர் தனியாகவும் 16 வயதிற்கு மேற்பட்டோர் தனியாகவும் கூட்டாகவும் ஏழு வயதிற்கு உட்பட்டோர் சிறுவர் சேமிப்புக் கணக்கையும் ஆரம்பிக்கலாம். அத்துடன் பொது

ஸ்தாபனங்களும் இக்கணக்கை வைத்திருக்கலாம்.

**2. நிலையான வைப்புக் கணக்கு: Fixed Deposits:**

*முதிர்வு காலம், 6, 12, 24 மாதங்கள் உயர் வட்டி மாதம் அல்லது வருட முடிவில்*

**3. நிலையான வைப்பிற்கு எதிரான கடன்;**

*நிலையான வைப்பில் இருக்கும் தொகையின் 90% கடனாகப் பெறலாம்.*

**4. ஓய்வூதியத் திட்டம் Pension Scheme;**

*ஒரு தொகையை மாதாந்தம் 53 மாதங்களுக்கு தொடர்ச்சியாக செலுத்தி, 54ஆவது மாதத்திலிருந்து மாதாந்த ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ளலாம்.*

**5. அறக்கொடைத் திட்டம்:**

*பத்து வருடங்களின் பின் ஒரு தொகையைப் பெறுவதற்காக முக்கியமாகக் குழந்தைகளுக்கான திட்டம்*

**3. உழைக்கும்போதே சேமிப்பு: S, A. Y. C.**

*மாத வருமானம் பெறுபவர்களுக்காக உருவாக்கப்பட்ட சாதாரண சேமிப்புக் கணக்கு.*

**7 பூறிகள் - Savings Bonds:**

*ரூபா 10/- கான சீட்டு வைத்திருக்கும் காலம் வரை இரு மாதத்திற்கு ஒரு முறை 65,000/-க்கான பரிசுத் தொகையை வெல்லக்கூடியது.*

**நன்கொடைச் சீட்டு - Gift Token:**

*பிறந்தநாள், கல்யாணப் பரிசு, மற்றும் விசேட தினங்களில் பரிசாகக் கொடுக்கக்கூடிய 25/- 50/- 100/- பெறுமதியான நன்கொடைச் சீட்டு இதைக் கொண்டு பெறுபவர் கணக்கை ஆரம்பிக்கலாம்.*

**9. வீட்டுக் கடன்;**

*வீடு கட்ட, வீடு வாங்குவதற்காக 70,000/- வரை கடனாக வழங்குகிறது. இதற்கு வீடும் காணியும் ஈடாகப் பெறப்படும்.*

**10. விவசாய சிறு கைத்தொழில் கடன்:**

*இது பரீட்சார்த்தமாக மாத்தறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. காலக்கிரமத்தில் மற்றைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.*

*மேற்படி சேமிப்புக்களில் பெறப்படும் மொத்த வைப்புக்களில் ஏறக்குறைய 95% அரசாங்க ஆவணங்களில் முதலீடு செய்யப்படுகிறது. மீதிப் பணமே வீட்டுக் கடனாகவும் நிலையான வைப்பிற்கு எதிரான கடனாகவும் கொடுக்கப்படுகிறது. அத்துடன் (Call money Market) குறுங்காலப் பணச் சந்தையிலும் தேசிய சேமிப்பு வங்கி முக்கிய பங்கினை வகிக்கிறது.*

*தொகுத்து நோக்கும்போது இலங்கையில் உள்நாட்டுச் சேமிப்பினை ஊக்குவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட இத்தேசிய சேமிப்பு வங்கியானது தனது நோக்கத்தில் பெருமளவு வெற்றியடைந்துள்ளதை அறியலாம். வாடிக்கையாளர்களை நோக்கி வங்கிகள் செல்லவேண்டும் என்பதற்கு அமைய பல புதிய வங்கிக் கிளைகள் ஆரம்பிக்கப்படுவதுடன் மேலும் கிளைகள் அமைப்பதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன உள்நாட்டு சேமிப்பின் ஆணிவேரான இவ்வங்கி தொடர்ந்தும் திறம்பட செயலாற்றும் என்பதில் ஐயமில்லை.*

# சுற்றுலாக் கைத்தொழில்

செல்வன் த. குகதாஸ்
*13 - வர்த்தகம்*

## அறிமுகம்

சேவைத்துறைக் கைத்தொழிலின் வகுதியான சுற்றுலாக் கைத்தொழில் இன்று சர்வதேசரீதியாக வளரும் கைத்தொழில் துறையில் முக்கியம் பெறும் துறையாகும். சர்வதேச வர்த்தக வளர்ச்சியை விட வேகமாக வளரும் சுற்றுலாத்துறையானது இயற்கைக் காட்சிகளையும் வனப்புக்களையும் மையமாகக் கொண்டு இருப்பதனால் இலவசமாகக் கிடைக்கும் இயற்கையினை விற்பனைப் பண்டமாக மாற்றி பல நாடுகள் வருமானத்தைப் பெறுகின்றன. சுற்றுலாவானது செல்வந்த நாடுகளிலிருந்து வறியநாடுகளை நோக்கியோ அல்லது செல்வந்த நாடுகளுக்கு இடையேயும் நடைபெறுவதை அவதானிக்கலாம் எனினும் சுற்றுலாத்துறை தோற்றம் பெறும் நாடுகள் பெருமளவு செல்வந்த நாடுகளாகும். காரணம் செலாவணிக் கட்டுப்பாடுகளின் நெகிழ்ச்சியான தன்மை; விசா போன்ற அனுமதிப் பத்திரங்களை இலகுவில் பெற முடிதல்; மற்றும் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட அபரிமிதமான வளர்ச்சி என்பனவாகும். வளர்முக நாடுகளிலிருந்து வளர்ச்சி அடைந்த நாடுகளை நோக்கிய உழைப்பாளர் படை உட்பாட்சலினால் அந்நாடுகளின் பாரிய தொழிற்சாலைகளில் கீழ்மட்ட தொழில்களைச் செய்த அந்நாட்டவர் விடுவிக்கப்பட்டனர். வளர்முக நாட்டுத் தொழிலாளர்களுக்கு கீழ்மட்ட தொழில்களையும் தமது நாட்டவருக்கு உயரிய தொழில்களையும் வழங்குவதனை நோக்கமாகக் கொண்ட வளர்ச்சி அடைந்த நாடுகளில் வர்க்க, வருமான வேறுபாடுகள் அதிகரித்தன. வருமான அதிகரிப்புடன் அந்நாட்டு மக்களுக்கு ''ஓய்வு நேரங்களும் அதிகரித்தன. இதனால் ஓய்வுநேரப்பொழுது போக்கினைத் தேடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதன் விளைவாக ஒய்வாக இருப்பதினை ''பிறிதொரு சந்தை வாய்ப்பாக கருதும் ஒரு நவீன கைத்தொழில்'' என்ற வகையில் சுற்றுலாக் கைத்தொழில் உருவாகியது.

முன்னர் தமது இடங்களுக்கு அண்மையிலுள்ள பிரதேசங்களுக்கு சுற்றுலாவை மேற்கொண்ட மக்களுக்கு தற்போது அதிலிருந்து விலகி புதுமைகளை காண வேண்டும் என்ற மனோபாவம் வளர்ச்சி அடைந்துள்ளது. இதனாலேயே ''கடலினையும் சூரியனையும் மணலினையும், செக்ஸினையும் நிரந்தரமாக தேடிச்செல்லும் நவீன சுற்றுலாத்துறை'' தோற்றம் பெற்றது இதனலே சுற்றுலாப் பயணிகளின் விருப்பங்களை நன்குணர்ந்த சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் ''சாதகமான சந்தைகளை நன்கு பயன்படுத்துகின்றனர். நாட்டில் ஒரு இரவை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இரவுகளை கழிப்பவர்களையே ''சுற்றுலா பயணிகள்'' என்பர். இரவில் தங்காது சில மணித்தியாலம் மட்டும் தங்கிச் செல்வோர் ''வந்து செல்லும் பயணிகள்'' எனப்படுவர். சுற்றுலாப் பயணிகள் வரும் நோக்கத்தை மையமாக வைத்து விடுமுறையைக் கழிப்பவர்கள், யாத்திரை செய்பவர்கள், வியாபார நோக்கில் பயணம் செய்வோர், உல்லாசப் பயணம் செய்வோர் எனப் பாகுபடுத்தலாம். இவ்வாறு சர்வதேச ரீதியாக சுற்றுலாக்களை மேற்கொண்ட பயணிகளின் தொகையை நோக்கின் 1950ல் 2.5 மில்லியனாகவும் 1980ல் 284 மில்லியனாகவும் 1986ல் 340 மில்லியனாகவும் அமைத்திருந்தது. சர்வதேச சுற்றுலாத் துறை மூலமான வருமானத்தை நோக்கின் 1950ல் 2100 மில்லியன் டொலர் ஆகவும்

1980 ல் 102400 மில்லியன் டொலராகவும் 1986ல் ......... மில்லியன் டொலராகவும் வருமானமாகப் பெறப்பட்டிருந்தது. 1985ல் உலகளாவிய சேவைகள் வர்த்தகத்தின் வருமானமான 345000 மில்லியன் டொலரில் சுற்றுலாத்துறை மூலமான வருமானம் 28500 மில்லியன் டொலர் ஆகும் எனினும் இவ்வருமானத்தின் போக்கு 1980ம் ஆண்டைத் தொடர்ந்து வீழ்ச்சிப் போக்கைக் காட்டியது 1980-1986ம் இடையில் 1260 மில்லியன் டொலரினால் மட்டுமே வருமானம் அதிகரித்து இருந்தது.

மூன்றாம் மண்டல நாடுகளைப் பொறுத்த வரை முழுமையான வர்த்தக நடவடிக்கையாக விளங்கும் சுற்றுலாத் துறையானது அறுபதுகளின் ஆரம்பத்தில் சர்வதேச ரீதியாக செழிப்புற தொடங்கியது. இத்துறை நேர், எதிர்விளைவுகளைக் கொண்டிருப்பினும் நேர் விளைவுகளில் பலமான நம்பிக்கை வைத்திருக்கும் வளர்முக நாடுகள் பயணிகளை இன்முகத்துடன் வரவேற்று உபசரிக்க தொடங்கி உள்ளதுடன் சுற்றுலாத்துறை சார்பான தடைகளைகளையும் நடவடிக்கை எடுத்துள்ளன இந்நிலையில் இலங்கையின் சுற்றுலாத் துறையினை ஆராய்வது பெருத்தமானதாகும்.

## இலங்கையின் சுற்றுலாத்துறை

இலங்கையின் சுற்றுலாத்துறையானது 1966ம் ஆண்டுக்கு முன்னர் எவ்வகையிலும் விருத்தி அடைந்திருக்கவில்லை 1966ம் ஆண்டு பாராளுமன்ற சட்டத்தின் மூலம் கொள்கை வகுப்பு நிலையமாக சுற்றுலாச் சபை ஸ்தாபிக்கப்பட்டதுடன். ஹோட்டேல் கூட்டுத்தாபனமும் ஆரம்பிக்கப்பட்டது. இக் காலப்பகுதியில் தான் சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு நடவடிக்கையாக சுற்றுலாத்துறையின் சாத்தியப்பாட்டினை ஆராய்ந்து பத்தாண்டு அபிவிருத்தி திட்டம் ஒன்றைவகுக்க என பலநிறுவனங்களை உள்ளடக்கிய கூட்டமைப்பு ஒன்று வாடகைக்கு அமர்த்தப்பட்டது. தொழில் நுட்ப ரீதியான இவ்வறிக்கையினை மையமாகக் கொண்டே சுற்றுலா விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் 1972ல் தயாரிக்கப்பட்ட தேசிய அபிவிருத்தியின் ஐந்தாண்டுத் திட்டம் மேலே குறிப்பிட்ட சுற்றுலாத் திட்டத்தின் அடிப்படையினையும் உள்ளடக்கமாக கொண்டிருந்தது. 1967ன் சுற்றுலாத்துறை ஆய்வானது விநோதமூட்டும் சூழலை முக்கிய காரணியாக குறிப்பிட்டது. சுற்றுலாப் பயணிகள் வித்தியாசமான அனுபவங்களை நாடி நிற்பதினால் இவ் அம்சத்தை மேலும் ஊக்குவிப்பது அவசியமென இவ் ஆய்வு முடிவுரை வழங்கியது 1972ல் பொருளாதார தகவல் பிரிவினால் நடாத்தப்பட்ட ஆய்வானது இந்தியா, தாலாந்து போல் இலங்கையில் கலாசாரக் கவர்ச்சிகள் அவ்வளவு தூரம் விலை போவதில்லை என்பதால் இங்கு வருகை தரும் பயணிகள் எழிலார்ந்த கடற்கரைகள், இயற்கைக்காட்சிகள் எளிதில் புரிந்து கொண்டு நட்புடன் பழகக்கூடிய உள்ளூர் மக்கள் போன்ற அம்சங்களில் நம்பிக்கை வைத்திருப்பதால் இவற்றினை மையமாக வைத்தே சுற்றுலாத்துறை ஊக்குவிக்கப்பட வேண்டும் என கூறியது.

பயணிகளின் கற்பனையைத் தூண்டி உணர்வுகளை சுண்டி எழுப்பும் நோக்குடனேயே பல நிறுவனங்களால் விளம்பர சுலோகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. 'மரகத கடல், நீலவானம் இதமும் ஒளியும் அள்ளி வீசும் மௌனம் உறங்கும் சொர்க்கபூமி'' என்கின்றது. ஹொலிடேோ ரிசோட்ஸ் நிறுவன விளம்பரம் ''வெப்பமான சூரியன், தெளிவான கடல், எழில் கொஞ்சும் கடல்கரைகள், நிசப்தம், புதிய காட்சிகள், ஓசைகள், இப்படி ஹோட்டேல் செரண்டிப்பின் விளம்பரம் கூறுகின்றது. ''சூரியனில் மிதக்கும் உங்கள் தீவு'' என்கின்றது ஒரு வானொலி விளம்பரம். இவைகள் உள்ளூர் விளம்பரமாகும். மூன்றாம் மண்டல நாடுகள் பயணிகளை கவருவதற்கு மேல்நாடுகளில் வினியோகிக்கும் பிரச்சார சட்டைகள், செய்திப்பத்திரிகைகள் சஞ்சிகை, விளம்பரங்களை ஆராய்ந்த பிரெஞ்சு நாட்டின் அபிவிருத்தி ஆய்வாளர் ஜாக்ஸ்

பக்னி கோர்ட் என்பவர் இவ்விளம்பரங்களின் பெரும்பங்கு இதமான சூரியனைப் பற்றியே கூறுகின்றன என கூறினார்.

சூரியன் வெளிச்சத்தையும் சூட்டினையும் தரும் ஒரு மூலம் மட்டுமன்று அது உள்ளத்தை உசார்ப்படுத்தி, கற்பனையைத் தூண்டி மண்ணில் சொர்க்கத்தினை தோற்றுவிக்கின்றது என இவ் விளம்பரங்கள் பெருமையுடன் குறிப்பிடுகின்றன.

1983 ல் ஏற்பட்ட இனப்பிரச்சினையை அடுத்து கீழ்நோக்கிய போக்கினை கொண்டிருந்த சுற்றுலாத்துறையானது அண்மையாண்டுகளில் மீண்டும் வளரத்தொடங்கியுள்ளது. 1989 ல் 184,732 பயணிகள் வருகை தந்தனர். 1990ல் 297,888 பயணிகள் வருகை தந்தனர். இது முன்னைய ஆண்டை விட 61.3 சதவீத அதிகரிப்பாகும். தொடர்ந்தும் மேற்கு ஐரோப்பாவே முதன்மைச் சந்தையாக விளங்குகின்றது. மொத்த வருகையில் 57% மான பயணிகள் 1990ல் மேற்கு ஐரோப்பாவிலிருந்து வருகை தந்தனர். இரண்டாவது பெரும் சந்தையாக ஆசியா விளங்குகின்றது. எண்பதுகளின் தொடக்கத்தில் ஆசியாவிலிருந்தான வருகை அதிகரித்தமைக்கு காரணம் இலங்கையின் தீர்வையற்ற கடைகளில் பொருட்களை வாங்கவென பல ஆசிய நாட்டவர் இலங்கை வந்தமையாகும். எனினும் இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகையை சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் பரிணாமத்துடன் ஒப்பிடும் போது மிக அற்பமானதாகும். 1980ல் சர்வதேச சுற்றுலாப் பயணத்தில் இலங்கைக்கான பயணிகளின் வருகை 0.1% மாகும். இது 1986 ல் மேலும் வீழ்ச்சியடைந்தது. 1980 ல் 321 780 பயணிகளும் 1986 ல் 230,106 பயணிகளும் இலங்கைக்கு வந்திருந்தனர். தென்னாசியப் பிராந்தியத்தில் இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை 1980 ல் 14.1% மாக இருந்து 1986 ல் 9% மாக வீழ்ச்சியடைந்தது. ஆகக் கூடுதலான பயணிகளின் வருகை 1982 ல் பதிவு செய்யப்பட்டது. இவ்வாண்டில் 407,230 பயணிகள் வருகை தந்தனர்.

சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட வீழ்ச்சியால் விடுதிக்கைத்தொழில்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. திட்டமிட்ட இலாபஅளவிலும் பார்க்க குறைவான இலாபத்தை உழைத்ததினால் விடுதிக்கைத்தொழில்களில் ''மிகை முதலாக்க'' நிலைமை தோன்றியது. வங்கிக் கடன்களை மீளச்செலுத்த முடியாத நிலை விடுதிகளுக்கு ஏற்பட்டது அவை அரசாங்கத்திடம் நிவாரணம் கோரி நின்றன 1986 இல் மொத்தம் 186 விடுதிகள் தமது கடன் மீளச் செலுத்துகை, மீள அட்டவணைப்படுத்தப்பட வேண்டுமென கோரின இச்சலுகை 66 விடுதிகளுக்கு வழங்கப்பட்டது. நிலைமை இவ்வாறு இருந்த வேளை புதிதாக 6 விடுதிகள் சேர்ந்து கொண்டன. கொழும்பு ஹில்டன் ஹோட்டேல் 19 மாடிகளுடன் திறந்து வைக்கப்பட்டது. இது 309 அறைகளைக் கொண்டது 1989 இறுதியில் நாடுமுழுவதும் 9,459 தங்குமிட அறைகள் காணப்பட்டன. இது 1990ல் 9556 ஆக 1% ஆல் மட்டும் அதிகரித்தது.

இலங்கைக்குள் பெருமளவு சுற்றுலாப் பயணிகள் வர உதவியதில் சாதகமான நாணய மாற்று வீதம் முக்கிய காரணியாகும் 1967 நவம்பர் மாதத்திலிருந்து சுற்றுலாப் பயணிகளுக்கு சார்பாக நாணய மாற்று வீதம் மாறியது. இதனால் இலங்கை வரும் பயணிகளுக்கு ஊக்குவிப்பாக அமையும் அதேவேளை இலங்கையர் வெளிநாடுகளுக்கு பிரயாணம் செய்யின் பெருமளவு செலவை தோற்றுவிக்கும்.

சுற்றுலாத்துறை பல அனுகூலங்களை கொண்டிருப்பதாக கருதப்படுகின்றது. குறிப்பாக அன்னியச் செலாவணி உழைப்பு வேலைவாய்ப்பு பிரதேச அபிவிருத்தி அரச வருவாய் மூலமாக விளங்கல் கைப்பணிப் பொருட்களான சந்தை வாய்ப்பை கொண்டிருத்தல் போன்றனவாகும். 1990ல் மட்டும் அன்னியச் செலாவணி உழைப்பாக 4.800 மில்லியன் ரூபா பெறப்பட்டது. 1989ம் ஆண்டு வருமானம் (S.D.R ல்)

1988ம் ஆண்டைவிட 18வீத அதிகரிப்பாகும். எனினும் 1982ல் பதிவு செய்த 132 மில்லியன் S.D.R வருமானத்துடன் ஒப்பிடின் 49·/. வீழ்ச்சியாகும் தென்னாசியாவுடன் இலங்கையின் வருமானத்தை ஒப்பிடின் 1980ல் 7.1வீதமாக இருந்து 1986ல் 5வீதமாக குறைவடைந்தது இலங்கை வரும் சுற்றுலாப் பயணியொருவரின் நாளொன்றுக்கான செலவு 1988ல் 1058 ரூபாவாகும் இது 1989ல் 1396 ரூபாவாக இருந்தது சுற்றுலாத்துறையானது சேவைக் கைத்தொழில் என்பதால் பெருமளவு வேலைவாய்ப்பை தோற்றுவிக்கக் கூடியது நேரடியாக தங்குமிட நிர்மாணம் பிரயாண முகவர்கள் விமான போக்குவரத்து நிறுவனங்கள் பொழுது போக்கு நிறுவனங்கள் சுற்றுலா விற்பனை நிலையங்கள் போன்றவை மூலமும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பை பெறலாம் 1990ல் நேரடியாக 25,000 பேரும் மறைமுகமாக 35. 000 பேரும் வேலைவாய்ப்பை பெற்றிருந்தனர் இவ்வாண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் வேலைவாய்ப்பை ஒப்பிடின் 5:1 ஆகும் அதாவது 5 பயணிகள் வருகை ஒரு வேலைவாய்ப்பை தோற்றுவித்துள்ளது சுற்றுலாவிற்பனை நிலையங்கள் 1988ல் 186 நிலையங்களாக இருந்து 1989ல் 334 ஆக அதிகரித்தது. இது 80·/. அதிகரிப்பாகும் எனினும் 1990ல் மொத்தம் 333 சுற்றுலா விற்பனை நிலையங்கள் காணப்பட்டன. சுற்றுலாத்துறைக்கான பொருட்கள் இறக்குமதியின் போது தீர்வைகளை அறவிடுவதன் மூலம் அரசாங்கம் வருமானம் பெறுகின்றது. இவைகள் சுற்றுலாத்துறையின் அனுகூலங்களாகும்.

சுற்றுலாத்துறையில் பிரதிகூலங்களும் நிறைந்திருப்பதைக் காணலாம். சுற்றுலாப் பயணிகளுக்கென பிரத்தியேகமாக விடுதிகளிலும், ஏனைய இடங்களிலும் கலாசார நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன பயணிகளின் இரசனைக்கேற்ப கலைகளை மாற்றியமைப்பதால் அவற்றின் கட்டுக்கோப்பான வளர்ச்சி தடைப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகளின் நடத்தைகள் உள்நாட்டு பண்பாட்டு முறைகளில் மாற்றங்களை தோற்றுவிக்கலாம். அத்துடன் சுற்றுலாப் பயணிகள் என்ற போர்வையில் போதைவஸ்துக் கடத்தலும் அதிகரித்துள்ளது. விடுதிகள் எழில் மிக்க இயற்கை காட்சிகளை கொண்ட இடங்களை தேர்ந்தெடுத்து கட்டப்படுவதுடன் பெருமளவு நிலப்பரப்பையும் தன்னகத்தே கொண்டுள்ளன. இதனால் விவசாயம், மீன்பிடி போன்ற பரம்பரைப் பொருளாதார தொழில்களில் ஈடுபடும் வாய்ப்பு சில சமயங்களில் உள்நாட்டுவாசிகளுக்கு மறுக்கப்பட்டுள்ளது. பொதுவாகக் குறிப்பிட்ட சில கடற்கரைகளை உபயோகிப்பதற்கு அல்லது கடற்கரைகளில் நடந்து செல்லவோ மீன் பிடியாளருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அவர்கள் குடியேறினால் கடற்கரைகள் மீது ஒரு வித்தியாசமான கலாசாரத்தை எதிர் நோக்க வேண்டியிருக்கும்.

இவ்வாறான பிரதிகூலங்கள் காணப்படினும் அனுகூலங்களே முக்கியம் பெறுவதாயுள்ளது இலங்கையானது அன்னியச் செலாவணிப்பிரச்சனையை எதிர்கொள்வதால் கட்டுபலனாகாத ஏற்றுமதியான சுற்றுலாத்துறை முக்கிய துறையாகவுள்ளது. கட்டுபலனாகாத ஏற்றுமதியின் பகுதியிலே முதலிடத்தை நோக்கி நகரும் சுற்றுலாத் துறையை தொடர்ந்து ஊக்குவிப்பது இன்றியமையாததாகும்.

# மூலதனச் சந்தையும் அதற்குள் அமையும் முக்கியமான நிறுவனங்களும்

செல்வி S. குமுதினி
ஆண்டு - 13 வர்த்தகப் பிரிவு

தொழில் முயற்சியாளர்களின் தேவைகளுக்கேற்றவாறு இடைத்தர நீண்டகால நிதி வசதிகளை அளிக்கும் நிறுவனங்கள் மூலதனச்சந்தையாகக் கருதப்படும். மூலதனச் சந்தையாகச் செயற்படும். அமைப்புகள் நிதியமைப்பில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. இவை தொழில் முயற்சியாளர்கள் தமது தொழில் முயற்சிகளை செயற்படுத்துவதற்கு அவசியமான நீண்டகால நிதித்தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. இம் மூலதனச் சந்தையில் நிதிக்கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கென:

- ★ பங்குகள்
- ★ சரக்கு முதல்கள்
- ★ தொகுதிக் கடன்கள்
- ★ அரசாங்க பிணைகள்

ஆகிய ஆவணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. நிதிகளை வழங்குவதற்கென மூலதனச் சந்தை நிறுவனங்களாக

- ★ பங்குச் சந்தை
- ★ இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத் தாபனம்
- ★ மூலதன அபிவிருத்தி முதலீட்டுக் கம்பனி
- ★ அரச ஈட்டு முதலீட்டு வங்கி
- ★ தேசிய அபிவிருத்தி வங்கி
- ★ வியாபாரிகள் வங்கி
- ★ வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத் தாபனம்

போன்றன முக்கியமானவையாகும். நிறுவனங்களுக்கான நீண்டகால, இடைத்தரக் காலக் கடன்களை வழங்கும் மேற்குறிப்பிட்ட ஆவணங்களையும் நிறுவனங்களையும் உள்ளடக்கியதே மூலதனச்சந்தை என வரையறை செய்யலாம். இச் சந்தைக்குள் அமையும் முக்கியமான நிறுவனங்களை நோக்குவோம்.

## 1 அபிவிருத்தி நிதிக்கூட்டுத் தாபனம் (Development Finance Corporation of Ceylon)

இந்நிறுவனத்தின் உருவாக்கம் இலங்கையின் மூலதனச் சந்தையின் வளர்ச்சிக்கு ஆரம்ப அத்திவாரமாகக் கருதப்படுகின்றது. இதுவே இலங்கையில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட நீண்டகால நிதியமைப்பாகக் கருதப்படுகின்றது. தனியார் துறையினருக்கு நீண்டகால நிதி வசதிகளை அளிப்பதை அடிப்படை நோக்கமாகக்கொண்டு 1955 ம் ஆண்டு பிரகடனம் செய்யப்பட்ட சட்டத்தினூடாக 1958 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன. இந் நிறுவனம் ஓர் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாகச் செயற்படுகின்றது.

### இந் நிறுவனத்திற்கு மூலதனப் பங்களிப்பு

இந் நிறுவனத்தில் இலங்கைவங்கி, மக்கள் வங்கி அற்றன் நஷனல் வங்கி, இலங்கை வர்த்தக வங்கி, கொங்கொங் வங்கி,

கிறைண்ட்லேஸ் வங்கி, இலங்கைக்காப்புறுதிக் கூட்டுத்தாபனம், ஆகிய உள்நாட்டு நிறுவனங்களும், சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான நெதர்லாந்து நிதிக் கூட்டுத்தானம், பொதுநலவாய நாடுகளின் அபிவிருத்தி நிதிக்கம்பனி, பொருளாதாரக் கூட்டுறவுக்கான மேற்கு ஜேர்மன் அபிவிருத்தி வங்கி ஆகிய சர்வதேச நிறுவனங்களும் மூலதனப் பங்களிப்புச் செய்துள்ளன.

இந் நிறுவனத்தில் தனியாருடைய மூலதனம் 49% மான அளவுக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் நிர்வாக சபையிலும் தனியார் பிரதிநிதிகள் இடம் பெறுகின்றார்கள். இவ் அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனத்தினை அபிவிருத்தி வங்கிகளில் ஒன்றாகவும் கருதிக்கொள்ளப் படுகின்றது. இவ் அமைப்பானது பின்வரும் நோக்கங்களுக்கு கடன்களை வழங்குகின்றது.

1. கைத்தொழில் முயற்சிகளுக்குக் கடன்கள் வழங்குகின்றது.
2. வர்த்தக முயற்சிகளுக்குக் கடன்கள் வழங்குகின்றது.
3. விவசாய முயற்சிகளுக்குக் கடன்கள் வழங்குகின்றது.
4. பொறித்தொகுதிகள், இயந்திரசாதனக் கொள்வனவுக்கு கடன்கள் வழங்குகின்றது.
5. உல்லாசப்பயணிகள் விடுதிகள் அமைப்பதற்குக் கடன்கள் வழங்குகின்றது.

## மூலதன அபிவிருத்தி முதலீட்டுக் கம்பனி (Capital Development and Investment Company)

இலங்கையில் மூலதனச்சந்தைஅபிவிருத்திக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதில் மூலதன அபிவிருத்தி முதலீட்டுக் கம்பனி உருவாக்கப்பட்டதும் ஒன்றாகும். இவ் அமைப்பானது 1985 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டதாகும். இது ஓர் அரசாங்கக்கம்பனியாக உருவாக்கப்பட்டது. இந் நிறுவனத்திற்கு தேசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை அரசு, ஏற்றுமதி அபிவிருத்திச்சபை, இலங்கை வங்கி, மக்கள் வங்கி போன்றன மூலதனப் பங்களிப்புச் செய்துள்ளன.

இலங்கையில் தனியார் துறையினர் எதிர் நோக்கும் நீண்டகால மூலதனப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டே இக் கம்பனி உருவாக்கப்பட்டது. பிரதானமாக ஏற்றுமதித்தொழில் முயற்சியில் ஈடுபடுகின்றவர்களுக்கு ஆரம்ப மூலதனத்தையும் முயற்சி மூலதனத்தையும் வழங்கி ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதைப் பிரதான தொழிற்பாடாக கொண்டே இது செயற்படுகின்றது. இலங்கையின் மூலதனச்சந்தையில் நீண்டகால நிதிநிரம்பலை அதிகரித்தலும், மூலதனச்சந்தையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதும் இதன்ஏனைய பிரதான குறிக்கோளாக அமைகின்றன. அரசாங்கக் கம்பனிகளிலும் தனியார்துறைக் கம்பனிகளிலும் பங்குகளையும் தொகுதிக்கடன் பத்திரங்களையும் கொள்வனவு செய்து அவற்றுக்கு வேண்டிய நீண்டகால மூலதனத்தை வழங்குவதற்குக் கம்பனிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கின்றது. மீள நிதியளிப்புத் திட்டங்களுக்கும் கடன் வழங்குவதற்கு ஏற்றவாறு இதன் அமைப்பு புறவிதியை மாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பதனால் எதிர்காலத்தில் இதனூடாக ஏற்படுத்தப்படும் நீண்டகால நிதி மூலதனச்சந்தையில் பெருமளவிற்கு அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

## வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (Housing Development Finance Corporation)

வீடமைக்கின்றவர்களுக்கு நீண்டகால நிதிநிரம்பல் ஏற்படுத்துவதைப் பிரதான நோக்காகக் கொண்டு உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சினால்

1984ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இக் கூட்டுத்தாபனத்தில் சந்தா அடிப்படையில் பங்குகளைக் கொள்வனவுசெய்து பங்குதாரர் ஆகுவதனூடாக இதன் நன்மைகளை அனுபவிக்கலாம். ஒவ்வொரு பங்கினதும் பெறுமதி 500 ரூபா ஆகும். இவ்வாறு பங்குகளைக் கொள்வனவு செய்து முதலீடு செய்யப்படும் பணத்திற்கு 9./. வட்டி வழங்கப்படும். பங்குகளைக் கொள்வனவு செய்து முதலீடுகளை மேற்கொள்கின்றவர்களுக்கு நிதி தேவைப்படும் சந்தர்ப்பத்தில் இப்பங்குகளை இந்நிறுவனத்திற்கே விற்பனை செய்து ஒரு மாதகாலத்திற்குள் முதலீட்டு நிதியைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். வீடமைப்புக்குத் தேவைப்படும் கடன் தேவைக்கு ஏற்றவாறு பங்குகளைக் கொள்வனவு செய்யலாம். கொள்வனவு செய்யும் பங்குகளின் ஐந்து மடங்கு வீடமைப்பிற்காகக் கடனாக வழங்கப்படும். பங்குகளைக் கொள்வனவு செய்து குறைந்த பட்சம் ஒருவருட காலத்திற்கேனும் பங்குதாரராக இருந்த பின்பே கடன் வசதி அளிக்கப்படும்.

## தேசிய அபிவிருத்தி வங்கி (National Development Bank)

இலங்கையின் மூலதனச் சந்தையில் கைத்தொழில் நிறுவனங்களுக்கு கடன்களை வழங்கும் ஓர் நிறுவனமாகவும் அபிவிருத்தி வங்கிகள் என்பதில் இடம் பெறும் ஓர் வங்கியாகவும் தேசிய அபிவிருத்தி வங்கி அமைகின்றது. 1979இல் ஆரம்பிக்கப்பட்ட இவ் வங்கி 1980ம் ஆண்டிலிருந்து தனது கடன் வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்த ஆரம்பித்தது. தற்போது இலங்கையின் மூலதனச்சந்தையில் நிதி நிரம்பலையேற்படுத்தும் ஒரு முக்கியமான நிறுவனமாக இவ் வங்கிசெயற்படுகின்றது. இதில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, இலங்கை அரசு, மத்திய வங்கி ஆகிய அமைப்புக்களினால் மூலதனப் பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது. நாட்டின் கைத்தொழில், விவசாய, வர்த்தக நடவடிக்கைக்கு நீண்டகாலக் கடன்களையும் ஏனைய கடன்களையும் வழங்கி அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதே இதன் பிரதான நோக்கமாக அமைகின்றது. மற்றும் மீள நிதியளிப்புத் திட்டத்தைச் செயற்படுத்தல், கடன்களுக்கு உத்தரவாதம் அளித்தல், தொழினுட்ப ஆலோசனைச் சேவையைச் செயற்படுத்தல் போன்ற தொழிற்பாடுகளையும் ஆற்றுகின்றது.

இவ் வங்கியானது சிறிய நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கான விசேட கடன்திட்டங்களைச் செயற்படுத்துகின்றது. இக் கைத்தொழிலாளர்களுக்கான கடன் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு உதவியாக 1979 இல் இலங்கை அரசாங்கம் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்துடன் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தியது. இதன் பிரதிபலனாக சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் தேசிய அபிவிருத்தி வங்கிக்குக் கடனாக வழங்கப்பட்டது. பின்பு தேசிய அபிவிருத்தி வங்கியானது தனது கடன் வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்தும் செயற்படுத்துவதற்கு சர்வதேச நிதிக்கூட்டுத்தாபனத்துடன் மீண்டும் ஓர் கடன் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது இதன் பிரதிபலனாக 1982 இல் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் கடன் வழங்கப்பட்டது. இதனூடாக சிறிய, நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கான இரண்டாவது கடன் திட்டம் செயற்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. சிறிய நடுத்தர கைத்தொழிலாளருக்கான மூன்றாவது கடன் திட்டமும் இவ் வங்கியினால் செயற்படுத்தப்படுகிறது. இத் திட்டத்திற்கு கடன் வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியானது முன்வந்துள்ளது.

தேசிய அபிவிருத்தி வங்கியானது இக் கடன் திட்டத்தை இலங்கைவங்கி, மக்கள் வங்கி, இலங்கைவர்த்தகவங்கி, அற்றன் நாஷனல்வங்கி, அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம், சம்பத்வங்கி ஆகியவற்றினூடாகச் செயற்படுத்துகின்றது.

## வியாபார வங்கிகள்

தற்காலத்தில் நாடுகளின் நிதியமைப்புக்களில் வியாபார வங்கிகள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. இலங்கையின்

மூலதனச்சந்தை அமைப்புக்களில் அங்கம் வகிக்கும் ஓர் அமைப்புக்களில் வியாபாரிகள் வங்கியும் ஒன்றாகும். இவ்வங்கிகள் ஆரம்பத்தில் இலங்கிலாந்திலேயே நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டன. அதன் பின்பே ஏனைய நாடுகளில் வியாபார வங்கிகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன. தொழில் முயற்சியானர்களுக்கு நிதி வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல், வருமானம் அளிக்கக் கூடிய முதலீடுகளைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தல், முதலீடு தொடர்பான ஆலோசனைகளை வழங்கல் ஆகியவற்றையே பிரதான தொழிற்பாடாகக் கொண்டு இவ்வங்கிகள்செயற்படுகின்றன. 1977 ம் ஆண்டில் பதவியேற்ற அரசாங்கத்தின் கொள்கையின் பிரதிபலனாக இலங்கையில் தனியார் துறையினரின் வளர்ச்சி துரிதமாக்கப்பட்டது. எனவே தான் தனியார் துறையினரின் நிதித்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கவும் ஆலோசனைகள் வழங்குவதற்காகவும் இலங்கையில் வியாபாரவங்கிகள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டன. இலங்கையில் பின்வரும் மூன்றுவகையான வியாபார வங்கிகள் செயற்படுகின்றன.

1. இலங்கை வரையறுக்கப்பட்ட வியாபார வங்கி. இது இலங்கை வங்கியினால் 1982 இல் உருவாக்கப்பட்டது.
2. வரையறுக்கப்பட்ட மக்கள் வியாபார வங்கி இது மக்கள் வங்கியினாலும், கினாஸ் மகோன் அன் கம்பனி Ltd. இனாலும் (Guinness Mahond Company Ltd.) 1983 இல் உருவாக்கப்பட்டது.
3. வரையறுக்கப்பட்ட மேக்கன் ரைல் வியாபாரிகள் வங்கி. இது தனியார் துறையினரால் 1988ல் இல் உருவாக்கப்பட்தாகும்.

## முதலீட்டு அடமான வங்கி.
## (State Mortgage and Investment Bank)

வீடமைப்பிற்குக் கடன் வழங்கும் ஓர் முக்கியமான நிதியமைப்பாக இவ்வங்கி செயற்படுகின்றது. 1979 ம் ஆண்டிற்கு முன் இது இரண்டு அமைப்புகளாகச் செயற்பட்டது. பின் கூட்டுத்தாபனங்களின் குறைபாட்டை நீக்குவதற்கென எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்று சேர்த்தல் செயற்பாட்டின் மூலம் 1979 இல் அரச அடமான வங்கியையும், கைத்தொழில், கமத்தொழில் கடன் கூட்டுத்தாபனத்தையும் இணைத்து உருவாக்கியதே இவ் அமைப்பாகும். விவசாயம், கைத்தொழில், வீடமைப்பு. ஆகியவற்றிக்கு நீண்டகாலக்கடன்களை வழங்குவதை பிரதான குறிக்கோளாகக் கொண்டே இவ்வங்கி செயற்படுகின்றது. 1984 ம் ஆண்டில் முதலீட்டு அடமான வங்கிச்சட்டத்திற்கு ஏற்படுத்தப்பட்ட திருத்தத்தின் பிரகாரம் வீடமைப்பிற்குக் கடன் வழங்கும் ஓர் பிரதான நிறுவனமாக இது மாற்றியமைக்கப்பட்டது. ஒப்பந்த வைப்புகள், சேமிப்பு வைப்புகள், கடன் வைப்புகள், தவணை வைப்புகள் ஆகியவற்றில் பணத்தை வைப்பாக ஏற்கும் அதிகாரமும் வங்கிக்கு வழங்கப்பட்டது. நீண்டகால நிதி நிறுவனங்களின் வைப்புக்களை ஏற்கும் அதிகாரம் இந் நிறுவனத்திற்கு மட்டுமே அளிக்கப்பட்டிருக்கின்றது.

## பங்குச் சந்தை
## (Share Market)

இலங்கையின் மூலதனச் சந்தையில் முக்கியமான ஓர் பிரிவாக பங்குச் சந்தை செயற்படுகின்றது அரசாங்கச் சரக்கு முதல்களும், கம்பனிப் பங்குகளும் இவற்றில் விற்பனைக்கு விடப்படுகின்றன. முதலீட்டு வளர்ச்சிக்கு அவசியமான மூலதனத் திரட்சியை ஏற்படுத்துவதில் பங்குச்சந்தை முக்கியமான பங்கு வகிக்கிறது. பங்குச்சந்தையின் ஆரம்ப அமைப்பாக 1894 இல் பங்குத்தரகர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. 1904 இல் இது கலைக்கப்பட்டு கொழும்புத்தரகர் சங்கமாக மாற்றியமைக்கப்பட்டது. இப்பங்குச்சந்தையானது.

1. முதலாந்தரப் பங்குச்சந்தை
2. இரண்டாந்தரப் பங்குச்சந்தை

எனப் பாகுபடுத்தப்பட்டுள்ளது.

இவை இரண்டும் கொழும்புத்தரகர் சங்கத்தினாலேயே செயற்படுத்தப்பட்டு வந்தன.

முதலாம்தரப் பங்குச்சந்தை என்பது புதிய கம்பனிகள் அல்லது ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ள கம்பனிகள் புதிதாக முதன்முதலில் பங்குகளை விற்பனை செய்வதைக் கருதும். இரண்டாந்தரப் பங்குச் சந்தை என்பது ஏற்கெனவே விற்பனை செய்யப்பட்டுள்ள பங்குகளை விற்பனை செய்வதற்கான சந்தையைக் கருதும். தற்காலத்தில் முதலாம் தரப் பங்குச்சந்தையின் வளர்ச்சி குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கான காரணம் புதிய கம்பனிகளின் உருவாக்கம் குறைவடைந்துள்ளமையாகும். ஆனால் இரண்டாந்தரப் பங்குச் சந்தையினது வளர்ச்சி கணிசமான அளவினை வகிக்கிறது. இதற்கான கராணம் வங்கிகளினால் சேமிப்பு நிலையான வைப்புக்களுக்குக் குறைந்தவீத வட்டி வழங்கப்படுவதால் பொதுமக்கள் பங்குகள், கடன் பத்திரங்களில் முதலீடு செய்வதால் கூடுதலான இலாபத்தையும், வட்டியையும் பெறமுடியும் என்பதே ஆகும்.

கொழும்புத்தரகர் சங்கமானது தொடர்ந்து பூரணமாக பங்குச்சந்தை தேவைகளை நிறைவேற்ற முடியாதிருந்த காரணத்தினால் இதற்குப் போட்டி அளிப்பதற்காக வரையறுக்கப்பட்டபங்குத்தரகர் சங்கம் 1984 இல் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டது. பின்பு 1985 ம் ஆண்டில் இவ்விரு நிறுவனங்களும் இணைக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட கொழும்பு ஆவண மாற்று அமைப்பாக உருவாக்கப்பட்டது. இதற்குள் பாட்லீட்அன் CO. LTD, ஜே ன் அன் கில்ஸ் CO.LTD.சோமலிவிய CO.LTD, சிற்றி இன் வெஸ்மன்சேவிஸ்LTD ஸ்றொக் புறோக்கஸ் சேவீஸ் LTD, உள்ளிட எட்டு வகையான கம்பனிகள் இதற்குள் காணப்படுகின்றன. கொழும்பு ஆவணமாற்று அமைப்பின்பிரதான குறிக்கோள்களாவன:

1. பங்கு வழங்கல் தொடர்பான ஆலோசனை வழங்குதல்.
2. பங்குகளை கொள்வனவு விற்பனை செய்ய உதவுதல்.
3. பங்குகளை ஒப்புறுதி அடிப்படையில் பெற்று விற்றல்.
4. பங்குச் சந்தை தொடர்பான புள்ளி விபரத்தை திரட்டல்.
5. பங்கு வழங்கல், பங்குச்சந்தை நடவடிக்கை பற்றி பிரச்சாரம் செய்தல்.

**பிணைகள் மன்றம் அல்லது ஆவணச்சபை.**

இலங்கையில் பங்குச்சந்தை நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி நிர்வகிப்பதற்கும் பங்கு முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கும் என 1986 ம் ஆண்டில் இதற்கான சட்டம் பிரகடனம் செய்யப்பட்டு 1987 இல் ஏற்படுத்தப்பட்டதே ஆவணச்சபை ஆகும்.இதில் மத்திய வங்கியின் துணை ஆளுநர் நிறைசேரியின் துணைக்காரியதரிசி, கம்பனிப்பதிவாளர் பட்டையக் கணக்களர் சங்கத்தின் தலைவர் ஆகியோருடன் நிதி, சட்டம் தொழில் முயற்சி என்பவற்றில் அனுபவம் பெற்ற மேலும் ஆறுபேர் செயற்படுவர், இதில் ஒருவர் தலைவராகச் செயற்படுவார். ஆவண சபையின் பிரதான குறிக்கோள்களாவன:

1. ஆவணங்களை கொள்வனவு விற்பனவு செய்வதற்கான ஓர் சந்தையை அமைத்தல்.
2. முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாத்தல்
3. பிணைப்பத்திரங்களின் சந்தையைக் கட்டுப்படுத்தல்.
4. நிதி நட்டங்களை எதிர்நோக்கும் முதலீட்டாளர்களை பாதுகாத்தல்.

போன்றன ஆகும்.

இவ் ஆவணசபையானது நட்ட ஈட்டு நிதியம் ஒன்றை உருவாக்கியுள்ளது. பங்கு முதல் வர்த்தகர்கள் முறிவடையும் சந்தர்ப்பத்தில் பங்கு முதலீட்டாளருக்கு ஏற்படக்கூடிய இழப்புக்களுக்கு பணஅடிப்படையில் உதவி வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும். ஆவண சபையின் உருவாக்கம் இலங்கையின் பங்குச்சந்தை அமைப்பில் ஒரு முக்கியமான அமைப்பாக அமைகின்றது. புதிய நீண்டகால நிதிநிறுவனங்களின்உருவாக்கம், கொழும்பு ஆவணச் மாற்று அமைப்பின் உருவாக்கம், ஆவணச் சபையின் உருவாக்கம் என்பன இலங்கையின் மூலதனச்சந்தையின் முக்கியமான அமைப்புக்களாக காணப்படுகின்றன. ★

# வழமையற்ற விடயங்கள், முன்னைய கால விடயங்கள் கணக்கீட்டுக் கொள்கையிலான மாற்றங்கள் என்பனவற்றுக்கான கணக்கீடு

# ACCOUNTING FOR UNUSUAL ITEMS, PRIOR PERIOR ITEMS AND CHANGES IN ACCOUNTING POLICIES

ரதிராணி யோகேந்திரராஜா
விரிவுரையாளர்,
வணிக முகாமைத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

ஒரு நிறுவனத்தின் கணக்காளர், நிதிக் கூற்றுக்களை தயாரித்தளிக்கும்போது அதனைப் பயன்படுத்துவோர் இலகுவில் விளங்கிக்கொள்ளத்தக்க வகையிலும், தீர்மானங்களை மேற்கொள்ளும் முகமாகவும் ஒரு நிறுவனத்தின் இரு காலப்பகுதிகளிற்கிடையிலும், ஒரே வகைப்பட்ட இரு நிறுவனங்களிற்கிடையிலும் ஒப்பீட்டை மேற்கொண்டு அவற்றின் தரங்களை மதிப்பீடு செய்யக்கூடியதாகவும் தயாரித்தளித்தல் வேண்டும். இதன்பொருட்டு, நிறுவனங்கள் நிதிக்கூற்றுக்கள் தயாரித்தளிக்கையில் ஒரே கொள்கைகள், (Policies) முறைகள், Systems) மதிப்பீடுகளைப்-(Valuations), பேணும் முகமாக இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால், இலங்கை கணக்கீட்டுநியமங்கள் (Sri Lanka Accounting Standards) நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன. இவை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகளாகக் கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு நிதிக்கூற்றில் இடம்பெறும் பல்வேறு அம்சங்கள் பற்றி பல்வேறு கணக்கீட்டு நியமங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 10 (SLAS 10) இனை நோக்கின், இக்கூற்றானது வழமையில்லாத விடயங்கள் (Unusual Items), முன்னைய காலவிடயங்கள் (Prior Period Items) கணக்கீட்டுக் கொள்கையிலான மாற்றங்கள் (Changes in Accounting Policies) என்பன பற்றி எடுத்து விளக்குவதுடன், இவை நிதிக்கூற்றுக்களில் எவ்வாறு கணக்கு வைக்கப்பட்டு வெளிக்காட்டல் செய்யப்பட வேண்டும் என்பது பற்றியும் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. இங்கு மூன்று அம்சங்கள் நோக்கப்படுகின்றன.

1) வழமையில்லாத விடயங்கள்.
2) முன்னைய கால விடயங்கள்.
3) கணக்கீட்டுக் கொள்கையிலான மாற்றங்கள் என்பனவாகும்.

## 1) வழமையில்லாத விடயங்கள் (UNUSUAL ITEMS)

ஒரு நிறுவனத்தில் வழமையாக இடம்பெறுவதும், அடிக்கடி அல்லது ஒழுங்காக ஏற்படுவதுமான எந்தவொரு செயற்பாடும் வழமையான விடயமாகும். ஆனால், சில அசாதாரண சூழ்நிலைகளின் காரணமாகவும் வழமையற்ற சந்தர்ப்பங்களிலும், கணிச

மானளவாகவும் ஏற்படும் நிகழ்வுகள் வழமையற்ற விடயங்களாகும். வழமையற்ற விடயங்களில் விதிவிலக்கான விடயங்களும் (Exceptional Items) அசாதாரண விடயங்களும் (Extraordinary Items) உள்ளடங்குகின்றன.

## அ) விதிவிலக்கான விடயங்கள் (EXCEPTIONAL ITEMS)

ஒரு நிறுவனத்தின் வழமையான வியாபார நடவடிக்கையுடன் நோக்கும்போது, ஏதாவது ஒரு நிகழ்ச்சி அல்லது மாற்றங்களினால் ஏற்படுகின்ற இலாபம், நட்டம் அல்லது நட்டத்திற்கான ஏற்பாடு கணிசமான அளவுடையதாக அல்லது வழமையற்ற சந்தர்ப்பங்களில் எழுந்திருப்பின் அவை விதிவிலக்கான விடயங்களாகும்.

ஒரு நிறுவனத்தின் குறிப்பிட்ட காலப் பகுதிக்கான சாதாரண தொழிற்பாட்டினால் ஏற்படும் இலாபம் அல்லது நட்டத்தை உறுதிப்படுத்தும் முகமாக விதிவிலக்கான விடயங்களும், இலாபநட்டக் கணக்கில் உள்ளடக்கப்படல் வேண்டும். எனினும், இவற்றின் விதிவிலக்கான சந்தர்ப்பம், கணிசமானளவு என்பவற்றிற்கேற்ப அவை நிதிக்கூற்றுக்களில் வேறாக வெளிக்காட்டப்படல் வேண்டும். அப்போதுதான் நிதிக்கூற்றுக்கள் போதுமான, உண்மையான விபரங்களை முழுமையாகத் தரமுடியும். விதிவிலக்கான விடயங்கள் பின்வரும் சந்தர்ப்பங்களில் எழலாம், (உ-ம்)

1. நிரந்தரமான ஒரு வாடிக்கையாளரிடமிருந்து பெறவேண்டிய ஒரு பெரிய தொகையைப் பதிவழித்தல்,
2) இருப்பு அல்லது குறைவேலையில் பதிவழிக்கப்படும் கணிசமானளவு.
3) சாதாரணமாக வியாபாரத்தில் நிலையானசொத்துவிற்பனையால் ஏற்படும் கணிசமானளவு இலாபம் அல்லது நட்டம்.
4) ஏற்றுக்கொள்ளப்பட்ட தேய்மானக் கொள்கையைத் தவிர்த்து அருவச் சொத்துக்களைப் பதிவழித்தல்.
5) நீண்டகால ஒப்பந்தங்களில் நட்டத்திற்கான அசாதாரண ஏற்பாடு.
6) காப்புறுதி நட்டஈட்டைத் தீர்க்கும் போது ஏற்படும் கணிசமான மேலதிகம்.
7) தொடர்ச்சியான நட்டத்திற்காகப் பெற்ற காப்புறுதி நட்டஈட்டுத் தொகை.
8) அன்னிய நாணயமாற்று வீதத்தி லேற்படும் தளம்பலினால் ஏற்படும் இலாபமும், நட்டமும் (குறிப்பாக, அன்னிய நாணயக் கடன்களை மீளளிக்கும்போது)

இவற்றினைப் பின்வரும் உதாரணம் மூலம் மேலும் தெளிவுபடுத்தலாம்
(உ-ம்)

வரையறுக்கப்பட்ட ஆர்த்தி கம்பனியின் விற்பனை ரூபா 10,00,000/- அவ்வருடத்தைய தேறிய இலாபம் ரூபா 2,50 000/-. பின்வரும் விடயங்கள் விதிவிலக்கான விடயங்கள் என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டது. அவற்றிற்கான காரணங்களைத் தருக.

1) வெளிநாட்டு நிறுவனமொன்றிலிருந்து அனுப்பிய பணத்தில் அன்னிய நாணயமாற்று வீத மேலதிகம் ரூபா 25,000/-

இது வழமையாக அல்லது அடிக்கடி ஏற்படக்கூடிய ஒரு நிகழ்வாக இல்லாமையால் விதிவிலக்கான விடயம் எனக் கொள்ளப்படுகின்றது

2) ஒரு வியாபார ஒப்பந்தத்திற்கான அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு ரூபா 2,00,000/-

அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு வழமையான வியாபார நடவடிக்கையாயினும், ஏற்பாட்டிற்கான தொகை நிறுவனத்தின் விற்பனையுடன் ஒப்பிடுமிடத்து கணிசமானளவினதாகக் காணப்படுவதனால் இது விதிவிலக்கான விடயமாகக் கொள்ளப்படுகிறது.

3) நிறுவனத்தினால் மேலதிகமாக செலுத்தப்பட்ட சேமலாப நிதிக் கொடுப்பனவு ரூபா 2,50,000/-

சேமலாபநிதிக் கொடுப்பனவு வழமையான நடவடிக்கையாகும். ஆனால் தொகை கணிசமானளவாகவும் மேலதிகமாகவும் செலுத்தப்பட்டிருப்பதனால் இது விதிவிலக்கான விடயமெனக் கொள்ளப்படுகின்றது.

4) முன்னைய வருடத்தில் பதிவழிக்கப்பட்ட பொறி இயந்திர விற்பனை இலாபம் ரூபா 3,00,000

இத்தகைய இலாபம் வியாபாரத்தில் பொதுவாக ஏற்படுவதாகும். ஆனால் இலாபம் ரூபா 3,00,000/- கணிசமானளவினதாகக்காணப்படுவதனால், இது விதிவிலக்கான விடயமாகக் கொள்ளப்பட்டது.

5) நிறுவனத்தில் ஏற்பட்ட விபத்து காரணமாக காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறப்பட்ட நட்டஈட்டு மேலதிகம் ரூபா 1,00,000/-

இங்கு தொகை கணிசமானளவினதாகக் காணப்படுவதனால், இதுவும் விதிவிலக்கான விடயத்திற்குள் உள்ளடக்கப்படுகின்றது.

## ஆ) அசாதாரண விடயங்கள்: EXTRA ORDINARY ITEMS

ஒரு நிறுவனத்தின் சாதாரண வியாபாரத் தொழிற்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகள், நடவடிக்கைகளினால் ஏற்படும் இலாபம் நட்டம் அல்லது நட்டத்திற்கான ஏற்பாடு அசாதாரண விடயங்களாக வகைப்படுத்தப்படும். இவை அந்நிறுவனத்தின் சாதாரண தொழிற்பாட்டினாலான அசாதாரணஅளவு அல்லது வழமையற்ற சந்தர்ப்பங்களில் பெறப்படும் விடயங்களை உள்ளடக்கமாட்டா. நிறுவனத்திற்கு நிறுவனம் தொழிற்பாடுகள் வேறுபடுவதனால் ஒரு நிறுவனத்திற்கு அசாதாரண விடயமாக இருப்பது மற்றைய நிறுவனத்திற்கு அசாதாரண விடயமாக இருக்கவேண்டியதில்லை.

நிறுவனத்தின் குறித்த காலப்பகுதிக்கான அசாதாரண விடயங்கள் இலாபநட்டக் கணக்கில் அக்காலப்பகுதிக்கான சாதாரண செயற்பாட்டிற்கான இலாபம் அல்லது நட்டத்திற்குப் பின்னரும் பங்கு லாபம் போன்ற பகிர்வுகளிற்கு முன்னரும் தனியாகக் காட்டப்படல் வேண்டும். ஒவ்வொரு அசாதாரண விடயங்களும் தனித்தனியே நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்படல் வேண்டும். எனினும்ஒரேவகையான நிகழ்ச்சி அல்லது நடவடிக்கைகளினால் ஏற்படுபவை மொத்தமாகக் காட்டப்படலாம். மொத்த அசாதாரண விடயங்களுக்குரிய வரி தனியாகக் காட்டப்படல் வேண்டும்.

சாதாரண தொழிற்பாட்டிற்கான இலாபம் அல்லது நட்டத்திற்குரிய வரியைக் கணிப்பிட்டு, அந்நிதியாண்டிற்கான வரியுடன் ஒப்பிடுவதன் மூலம் பெறப்படும் மேலதிக அல்லது குறைந்த வரியானது அசாதாரண இலாபம் அல்லது நட்டத்திற்கு உரியதாகக் கருதப்படும். பின்வருவனவற்றை அசாதாரண விடயங்களாகக் குறிப்பிடலாம்.

உ-ம்

1) ஒரு நிறுவனத்தின் ஒரு பகுதியை அல்லது திட்டத்தைக் கைவிடல் அல்லது விற்பனை செய்தல் அல்லது வியாபாரக் கொள்கையில் கணிசமானளவு மாற்றத்தினைக் கொண்டுவரல் அல்லது இடைநிறுத்தல்.

2) துணைக் கம்பனி (Associate Company) அல்லது உபகம்பனியில் (Subsidiary Company) மீண்டும் விற்கும் நோக்கமின்றி கொள்வனவு செய்யப்படும் முதலீட்டினை விற்றல்.

3) சாதாரண வியாபாரத்தைத் தவிர்த்து நிலையான சொத்து விற்பனையால் பெறப்படும் கணிசமானளவு இலாபம்.

4) ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட அசாதாரண நிகழ்வின் காரணமாக நிலையான சொத்தின் பெறுமதியைக் குறிப்பதற்கான ஏற்பாடு.

(உ-ம்)

வரையறுக்கப்பட்ட "சுப்பர் ஸ்ரார்" நிறுவனம் ஒரு உற்பத்தி நிறுவனமாகும். இதன் வருடாந்தவிற்பனைரூபா 100,00,000/- வரி கழிக்க முன்பும், பின்வரும் அம்சங்களைக் கருத்தில் எடுக்க முன்பும் நிறுவனத்தின் தேறிய இலாபம் ரூபா 25,00,000/- ஆகும்.வரிவீதம் 50வீதமாகும். பின்வரும்விடயங்களையும் கருத்தில் கொண்டு நிறுவனத்தின் தேறிய இலாபத்தையும், இவை நிதிக் கூற்றுக்களில் எவ்வாறு காண்பிக்கப்படும் என்பதையும் காட்டுக.

1) நிறுவனத்தின் தொழிற்சாலைகளில் ஒன்றினை மூடுவதற்கான செலவு ரூபா 15,50,000/-

இங்கு வியாபாரத்தின் ஒருபகுதி கைவிடப்படுவதனால், இதனால் ஏற்பட்ட செலவினம் அசாதாரண விடயமாகும்.

2) இந்நிறுவனத்திற்கு வெளிநாட்டில் ஒரு உபகம்பனி காணப்படுகின்றது. அண்மைக்காலத்தில் அந்நாட்டு அரசாங்கம் வெளிநாட்டு உடமைக் கம்பனிகளைத் தேசியமயமாக்கியது இதனால் எழுந்த நட்டம் ரூபா 30,000/-

இங்கும் வியாபாரத்தின் ஒரு பகுதி கைவிடப்படுவதனால், இது அசாதாரண விடயமாகக் கொள்ளப்படும்.

3) நிறுவனம் தனது உற்பத்தி ஒன்றினை நிறுத்தியதன் காரணமாக பொறி இயந்திர விற்பனை இலாபம் ரூபா 250,000/-

இங்கு வியாபாரத்தின் ஒரு பகுதி கைவிடப்பட்டதனால், இயந்திரம் விற்பனைசெய்யப்பட்டு அதனால் ஏற்பட்ட இலாபமும் கணிசமானளவாகக் காணப்படுவதனால், இதுவும் அசாதாரண விடயமாகக் கொள்ளப்படும்.

4) கம்பனி மீண்டும் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,00,000/- தொகுதிக் கடன் பத்திரங்களை ரூபா 39.50/-விலையில் மீட்டிருந்தது.

இங்கு மீட்பினாலான இலாபம் ரூபா 60,500/- கணிசமானளவினதாகவும், கம்பனியின் சாதாரணவியாபார செயற்பாட்டிற்கு அப்பால் நிகழ்வதனாலும், மீண்டும் நிகழும் என எதிர்பார்க்கப்படாததனாலும் அசாதாரண விடயமாகக் கொள்ளப்படும்.

இவை பின்வருமாறு இலாப நட்டக் கணக்கில் பிரதிபலிக்கப்படும்.

## வரை "சுப்பர் ஸ்ரார்" கம்பனியின் 31-12-91ல் இலாப நட்டக் கணக்கு

| | | | ரூபா |
|---|---|---|---|
| சாதாரண செயற்பாட்டு இலாபம் | | | 25,00,00 |
| சாதாரண செயற்பாட்டினாலான இலாபத்திற்கான வரி | | | 12,50,00 |
| வரிக்கு பின்பும் அசாதாரண விடயங்களிற்கு முன்னருமான இலாபம் | | | 12,50,00 |
| x 1 **அசாதாரண விடயங்கள்** | | | |
| தொழிற்சாலை மூடும் செலவு | (15,50,000 ) | | |
| உபகம்பனி விற்பனை நட்டம் | ( 30,000 ) | | |
| பொறி விற்பனை இலாபம் | 2.50,000 | | |
| தொகுதிக் கடன் பத். மீட்பு இலா. | 60.500 | | |
| | ( 12,69,500 ) | | |
| x 2 அசாதாரண விடயங்களிற்கான வரி | | 6,34,750 | ( 6,34,750 ) |
| வரிக்குப் பின்னரும் அசாதாரண விடயங்களிற்குபின்னருமான இலாபம் | | | 6,15,250 |

x 1. அசாதாரண விடயங்கள் ஒவ்வொன்றினதும் விபரங்கள் நிதிக்கூற்றுக்களின் கீழ்க் குறிப்பாகக் காட்டப்படல் வேண்டும்.

x 2. நிறுவனத்தின் சாதாரண செயற்பாட்டு இலாபம்மீதான வரி(50·/,இல்) ரூ, 12,50,000/- நிறுவனம் செலுத்தவேண்டிய வரி ரூபா 6,15,250/- ஆகவே இவற்றுக்கிடையிலான வேறுபாடு ( 12,50,000 — 6,15,250 ) 6,34,750 அசாதாரண விடயங்களிற்கான வரியாகும்.

## 11) முன்னைய கால விடயங்கள் (PRIOR PERIOD ITEMS)

முன்னைய காலவிடயங்கள் என்னும்போது கணக்கீட்டுக் கொள்கையில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது அடிப்படைப் பிழைகளைத் திருத்துவதால் முன்னைய வருடங்களுக்கு ஏற்படக்கூடிய கணிசமானளவு செம்மையாக்கல்களாகும். வழமையாக, திரும்பத் திரும்ப ஏற்படும் திருத்தங்கள், அல்லது முன்னைய வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்கியல் மதிப்பீட்டின் செம்மையாக்கல்களை முன்னைய கால விடயங்கள் உள்ளடக்கவில்லை.

காலத்திற்குக் காலம் தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்கள், அவை, தயாரிக்கப்படும் சூழ்நிலைகளினை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்படும் கணக்கியல் மதிப்பீடுகளையும் உள்ளடக்கும். உதாரணமாக; ஐயக்கடன், இருப்புக்களின் வழக்கிழப்பு, தேய்மானமளிக்கப்படும் சொத்துக்களின் பாவனைக்காலம் என்பவற்றைக் கணிப்பதற்கான மதிப்பீடுகள். மேலதிக தகவல்கள் பெறப்படுவதனாலும், கூடிய அனுபவத்தினாலும், புதிய நிகழ்ச்சிகள் நடைபெறுவதனாலும் தீர்மானமெடுத்தலும், மீள்மதிப்பீடு செய்யப்படலும் அவசியமாகின்றது. தொடர்ந்து வரும் நிகழ்ச்சிகள் வழமையாக மேற்கொள்ளப்பட்ட கணக்கியல் மதிப்பீடு பிழை எனச் சுட்டிக் காட்டலாம். உதாரணமாக, தேய்மானக் கொள்கை இவ்வாறான மீள்மதிப்பீடுகளால் ஏற்படும் மாற்றங்கள் முன்னையகாலச் செம்மையாக்கல்களாகக் கருதப்படா. இத்தகைய மாற்றம் அவையேற்பட்ட காலத்தில் மட்டுமென்றி அல்லது மாற்றம் எதிர்காலத்தையும் பாதிக்குமாயின் எதிர்காலங்களிலும் கணக்குகளில் தாக்கல் செய்யப்படல் வேண்டும். மதிப்பீட்டிலான மாற்றத்தின் தாக்கம் கணிசமானதாயின், அது அக்காலப்பகுதிக்கான நிதிக்கூற்றில்வெளிக் காட்டப்படல் வேண்டும்.

ஒரு காலப்பகுதிக்கான நிதிக்கூற்று முன்னையகால வருமானத்துடன் தொடர்புடைய இலாபம் அல்லது நட்டத்தையும் உள்ளடக்கியிருக்கலாம். இங்கு, கூறப்படுகிற இலாபம் அல்லது நட்டம் மதிப்பீட்டிலுள்ள மாற்றங்களினால்ஏற்படுபவையல்ல. ஆனால் முகாமையாளர், உரிமையாளர் தவிர்த்து ஏனையோரின் தீர்மானங்களினாலும்,கணிப்பினாலும் ஏற்படுவதாகும். இத்தகைய நிகழ்ச்சிகள் முன்னைய காலச் செம்மையாக்கல்களாகக் கருதப்படும். உதாரணமாக, வருமானவரிக் கணக்குகளைத் தீர்த்தல், வழக்கிலுள்ள வருமதிகள் தீர்க்கப்படல் என்பன.

நடப்பு வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டத்தைத் துணியும்போது, முன்னைய காலச் செம்மையாக்கல்கள் தவிர்க்கப்படல் வேண்டும். இக்காலப் பகுதிக்கான நிதிக்கூற்றில், கடந்தகால இலாபநட்டக் கணக்கு மீதியில் சீராக்கப்படல் வேண்டும். நிதிக்கூற்றுக்களில் முன்னைய கால செம்மையாக்கல்களின் விபரமும், அத்துடன் முன்னையகால நிதிக்கூற்று சீராக்கப்பட்டதெனவும், வெளிக்காட்டப்படல் வேண்டும். இதனைப் பின்வரும் உதாரணம் மூலம் புலப்படுத்தலாம்.

(உ-ம்)

வரையறுக்கப்பட்ட அன்பு கம்பனியினது விற்பனை ரூபா 10,00,000/- இதனது நிதி வருடம் டிசம்பர் 31ல் முடிவடைகிறது. 31.12.91ல் வரிக்கு பின்பும், அசாதாரண விடயங்களிற்குப் பின்னருமான இலாபம் ரூபா 2,00,000/- 1.1.91 ல் இலாப நட்டக் கணக்கு மீதி ரூபா 1,00,000/-

பின்வரும் விபரங்களையும் கருத்தில் கொண்டு 31.12.91ல் இலாபநட்டக் கணக்கு மீதியினைக் காண்க.

1) சென்ற ஆண்டிற்கான ஊழியர் இளைப் பாற்று நிதிக்கொடுப்பனவு ரூபா 50, 000/- செலுத்தப்படாதது, இவ்வாண்டி லேயே கண்டுபிடிக்கப்பட்டு செலுத்தப் பட்டது.

2) சென்ற ஆண்டில் இவ்வாண்டு வருமான வரிக்காக ஏற்பாடு செய்யப்பட்ட தொகை ரூபா 50,000/- ஆனால், இவ் வாண்டில் இதன்பொருட்டு செலுத்தப் பட்ட தொகை ரூபா 40,000/- வாகும்.

3) நிறுவனத்தின் புத்தகங்களில் காணப் பட்ட நன்மதிப்பு ரூபா 1, 50, 000/-

31.12.90ல் ரூபா 1,25,000/- வாக மீள மதிப்பீடு செய்யப்பட்டது. இதற்கான பதிவுகள் எதுவும் புத்தகங்களில் இடம்பெற வில்லை.

4) கணக்காய்வின்போது சென்ற வருடம் ரூபா 87,000/- இருப்பானது கணக் கிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, ரூபா 78, 000/- வாகப் பதியப்பட்டிருந் தமை கண்டுபிடிக்கப்பட்டது. எனினும், இவ் வருடம் இது கணக்குகளில் சரி யாகக் காட்டப்பட்டிருந்தது,

5) இவ்வாண்டில் பின்வரும் பகிர்வுகளுக்கு இயக்குனரால் தீர்மானம் மேற்கொள் ளப்பட்டிருந்தது.

பொது ஒதுக்க ஏற்பாடு ரூபா25,000/-
சாதாரண பங்குதாரருக்கான பங்கி லாபக்கொடுப்பனவு ரூபா 30,000/-

## 31-12-91ல் முடிவடைந்த வருடத்திற்கான அன்புக் கம்பனியின் இலாபநட்டக் க/கு

| | | ரூபா சதம் |
|---|---|---|
| வரிக்குப் பின்பும், அசாதாரண விடயங்களிற்குப் பின்பும் இலாபம் | | 2,00,000 |
| 1-1-91இல் இலாப நட்டக் மணக்கு மீதி | 1,00,000 | |
| x **முன்னைய கால சீராக்கங்கள்** | | |
| ஊழியர் இளைப்பாற்று நிதி | ( 50,000 ) | |
| வருமான வரி மேலதிகம் | 10,000 | |
| நன்மதிப்பு பதிவழித்தல் | ( 25,000 ) | |
| சரக்கிருப்பு | 9,000 | 44,000 |
| | | 1,56,000 |
| **பகிர்வுகள்:** | | |
| பொது ஒதுக்க ஏற்பாடு | 25,000 | |
| சாதாரண பங்குலாபம் | 30,000 | ( 55,000 ) |
| பகிரப்படாத பங்குலாபம் | | 1,01,000 |

x ஐந்தொகைக்குக் கீழே மேற்படி முன்னையகால சீராக்கம் தொடர்பாக விபரங்களும். முன்னைய கால இலாப நட்டக் கணக்கு மீதி சீராக்கப்பட்டதெனவும் குறிப்பாக வெளிக் காட்டப்படல் வேண்டும்.

## (3) கணக்கீட்டுக் கொள்கையிலான மாற்றங்கள்: CHANGES IN ACCOUNTING POLICIES

ஒவ்வொரு கணக்காண்டு காலப்பகுதியிலும் கணக்கீட்டுக் கொள்கைகள் மாறுபடாமல் தொடர்ந்து பின்பற்றப்படுகின்றது. ஏற்கனவே பின்பற்றப்பட்ட கணக்கியல் கொள்கை அல்லது கணக்கியல் முறைக்குப் பதிலாக வேறு கொள்கைகள் பின்பற்றப்படுமாயின் அதனைக் கணக்கீட்டுக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றம் எனலாம். கணக்கீட்டுக்கொள்கையில் மாற்றம் ஏற்படின் அவை காரணங்களுடன், வெளிக்காட்டப்படல் வேண்டும்.

கணக்கீட்டுக் கொள்கையில் மாற்றம் ஏற்படும்போது, புதிய கொள்கையின் அடிப்படையில் நடப்புக்கால மற்றும் தொடர்புடைய காலங்களிற்கான தொகைகள் மீளக் கணிக்கப்படும். முன்னைய காலங்களிற்குரிய திரண்ட செம்மையாக்கல் ஆரம்ப மீதியாகவுள்ள இலாபத்தினை சீராக்குவதன் மூலம் கணக்குகளில் பதியப்படும். இச்சந்தர்ப்பத்தில் கணக்கீட்டுக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றத்தின் தன்மை, மாற்றத்திற்கான காரணம் நடப்பு வருடத்திலும் முன்னைய வருடத்திலும் நிதிக்கூற்றுக்களில் அதன் தாக்கம் ஆகியன வெளிக்காட்டப்படல் வேண்டும்.

(உ-ம்)

வரையறுக்கப்பட்ட சுகந்தா கம்பனியின் கணக்கியல் கொள்கைகள் சில 31.12.91ல் மாற்றமடைந்துள்ளன. இவை தொடர்பான இலாபம் அல்லது நட்டங்களிலான தாக்கத்தினைக் குறிப்பிடுக. (கணிப்பீடுகளுடன்)

1) நிறுவனத்தின் காணிகட்டிடத்தின் பெறுமதி ரூபா 2,96,000/- இவற்றிற்கு இதுவரை காலமும் பெறுமானத்தேய்வு செய்யப்படவில்லை. புதிய கொள்கை காரணமாக, கட்டடத்திற்கு 2 வீதம் பெறுமானத் தேய்வு செய்வதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. காணியின் பெறுமதி ரூபா 1,16,000/-. இது 1978 ம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டதாகும்.

2) 1987 ஏப்ரலில் ரூபா84,000/- க்குகொள்வனவு செய்யப்பட்டஇயந்திரத்தின்பாவனைக்காலம் 20 வருடங்கள் என தெரியவந்துள்ளது. இயந்திரங்களிற்கு இதுவரைகாலமும் நேர்கோட்டு முறையில் 10வீதத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு வந்தது. 1.1.91ல் இயந்திரத்தின் கொள்விலை ரூபா 3,95 200/- அத்தேதியில் இதன் திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 2, 38, 100/-வாகும்.

சொத்துக்கள் கொள்வனவு செய்த ஆண்டில் முழு தேய்மானத்திற்கும் அவ்வாண்டில் ஏற்பாடு செய்வதும் விற்பனை செய்யும் ஆண்டில் அச்சொத்தின் மீது அவ்வாண்டிற்கு தேய்மானம் ஏற்பாடு செய்யாது விடுவதும் நிறுவனத்தின் கொள்கையாகும்.

3) இவ் ஆண்டிலிருந்து அறவிடமுடியாக் கடனுக்கு ஏற்பாடு செய்ய நிறுவனம் தீர்மானித்துள்ளது. இது புதிய கொள்கையாகும். இவ்வருட ஏற்பாடு ரூபா 18,000/- இக் கொள்கை சென்ற ஆண்டில் பின்பற்றப்பட்டிருப்பின் சென்ற ஆண்டிற்கான அறவிடமுடியாக்கடன் ஏற்பாடு ரூபா 12,000/- வாகும்.

4) புதிய கொள்கை காரணமாக, ஆராய்ச்சி அபிவிருத்திச் செலவுகள் யாவும் உடனடியாகப் பதிவழிக்கப்பட வேண்டும். இதனை மூன்று சமதவணைகளில் பதிவழிப்பதே நிறுவனத்தின் முன்னைய கொள்கையாகும்.

# செலவு விபரம் வருமாறு

| ஆண்டு | செலவு | இலாப நட்டக் கணக்கில் பதிவழித்தது |
|---|---|---|
| 31-12-89இல் முடிவடைந்த வருடம் | ரூ. 45,000/- | ரூ. 15,000/- |
| 31-12-90இல் முடிவடைந்த வருடம் | ரூ. 90,000/- | ரூ. 45,000/- |

**விடை**

ரூபா

1] காணி கட்டிடம் கொள்விலை — 2,96,000

காணி கொள்விலை — 1,16,000

∴ கட்டிடம் கொள்விலை — 1,80,000

இது 1978இல் நிர்மாணிக்கப்பட்டது.

1978 - 1-1-91வரை பெறுமானத் தேய்வு: $1,80,000 \times \frac{2}{100} \times 13 = 46,800$

முன்னையகால இ.ந. க/கில் சீராக்கவேண்டியது = 46,800/-

∴ 1-1-91இல் கட்டிடம் மீதி $= 1,80,000 - 46,800$

$= 1,33,200$

இவ்வாண்டிற்கு இலாப நட்டக் கணக்கில் தாக்கல் செய்யப்படவேண்டிய பெறுமானத் தேய்வு $= 1,80,000 \times \frac{2}{100}$

$= 3,600/-$

2] 1987இல் இயந்திரம் கொள்விலை — 84,000

1987 — 1-1-91 வரை தேய்மானம் — $84,000 \times \frac{10}{100} \times 4 = 33,600$

∴ 1-1-91இல் இயந்திரம் கொள்விலை $= 84,000 - 33,600 = 50,400$

தேய்மான வீதம் மாற்றமடையின்:

இதன் ஆயுட்காலம் 20 — 4 = 16 வருடங்களாகும்

∵ தேய்மான வீதம் $= \frac{100}{16} = 6.25$ வீதம்

∴ 31-12-91ற்கு தேய்மானம் $= \frac{6 \cdot 25}{100} \times 50,400 = 3,150$

எனவே 31-12-91இல் முடிவடைந்த நிதியாண்டிற்கு இலாப நட்டக்கணக்கில் தாக்கல்செய்யப்படவேண்டிய தேய்மானம் $3,95,200 - 84,000$

$= 3,11,200 \times \frac{10}{100}$

$= 31,120 + 3,150 = 34,270$

## நிலையான சொத்து அசைவுக்கூற்று

| | காணி கட்டிடம்: | இயந்திரம்; |
|---|---|---|
| கொள்விலை | 2,96,000 | 3·95.200 |
| 1-1-91இல் தேய்மானம் | — | 2,38,100 |
| முன்னையகால தேய்மானம் | 46,800 | — |
| இவ்வருடத்தையத தேய்மானம் | 3 6,0 | 34,270 |
| 31-1-91இல் தேய்மானம் | 50,400 | 2 72.370 |
| 1-1-91இல் மீதி | 2.49,200 | 1,57,100 |
| 31-12-91இல் மீதி | 2.45 600 | 2,38 100 |

* இவை நிதிக்கூற்றுக்களின் கீழ் குறிப்பாக வெளிக்காட்டப்படுவதுடன், கொள்கை மாற்றம் தொடர்பான விபரங்களும் வெளிக்காட்டப்படல் வேண்டும்.

3) சென்ற ஆண்டிற்கான இலாபநட்டக்கணக்கில் அறவிடமுடியாக்கடன் ஏற்பாடு தொடர்பில் ரூபா 12,000/- சீராக்கப்படல் வேண்டும். இது புதிய கொள்கை மாற்றத்தின் விளைவாக எழுந்ததொன்றாகும். இவ்வருட ஏற்பாடு இவ்வருட இலாபநட்டக்கணக்கில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கும்.

4) ஆராய்ச்சி அபிவிருத்திச்செலவு தொடர்பில் முன்னையகால சீராக்கம் புதிய கொள்கையின் விளைவாக எழுந்துள்ளது.

31.12 89 தொடர்பில் ரூபா 15, 000/- இலாபநட்டக்கணக்கில் பதிவழிக்கப்படல் வேண்டும்.

31.12.90 தொடர்பில் ரூபா 60, 000/- இலாபநட்டக்கணக்கில் பதிவழிக்கப்படல் வேண்டும்.

எனவே, 31.12.91ல் முன்னையகால சீராக்கம் தொடர்பில் இலாப நட்டக் கணக்கு ஆரம்பமீதியில் 15, 000 + 60, 000 = 75,000/- பதிவழிக்கப்படல் வேண்டும்.


உசாவியவை: 1) Sri Lanka Accounting Standard - 10 (SLAS 10)

2) Financial Accounting - Company Accounts Dr. J.A. Roche G. Pitchford &.M.J. Irvin


ஆசிரியர் என்பவர் மாணவனைச் சத்தியத்தை நோக்கி இட்டுச் செல்லும் தலைவன் ஆவார். அன்பு, அறிவு அடக்கம், ஒழுக்கம், கடமை, முதலியவற்றை ஊட்டி சத்தியம் என்னும் இறைவனை அடைந்து மகிழ வழி காட்டும் பொறுப்பு ஆசிரியரையே சேர்ந்தது·

—காந்தியடிகள்

# பொருளாதார வளர்ச்சியும் பொருளாதார அபிவிருத்தியும்

இ. விஜயகுமார்
ஆண்டு - 13 வர்த்தகப் பிரிவு

பொருளாதார வளர்ச்சி என்பது நாட்டின் உற்பத்தி செய்யக்கூடிய இயலளவு அதிகரித்து உற்பத்தியாக்கக்கூடிய பொருட்கள் சேவைகளின் பௌதீகரீதியான அசைவு தொடர்ச்சியாகவே அதிகரிப்பதாகும், அதாவது மாறா விலைகளில் கணிப்பீடு செய்யப்பட்ட மொத்தத்தேசிய உற்பத்தி, மொத்தத்தேசிய வருமானம் என்பன தொடர்ச்சியாகவே அதிகரித்துச் செல்லும் நிலையாகும். எனவே இது ஒரு நீண்ட காலச் செயல்முறையாகும். நீண்டகாலத்தில்தான் உற்பத்தி இயலளவானது அதிகரித்து உற்பத்திச் சாத்திய வளைகோடு மேலுயர்ந்து பொருளாதார வளர்ச்சி ஏற்படும். இத்தகைய பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் காரணிகள் வருமாறு:

(1) உற்பத்திக் காரணிகளின் நிரம்பல் அளவு உயர்வடைதல்.

- (i) பௌதீக முதலீடுகள் அதிகரித்தல்.
- (ii) ஊழியவளமும், மனித மூலதனமும் விருத்தியடைதல்.
- (iii) புதிய கனிப்பொருட்கள், நிலம் கண்டுபிடிக்கப்படல்.

(2) உற்பத்திக்காரணிகளின் உற்பத்தித் திறன் உயர்வடைதல்.

(3) உற்பத்தி விற்பனைகளில் கையாளப்படும் தொழில்நுட்பம் முன்னேற்றம் அடைதல்.

இக்காரணிகளினால் நாட்டின் உற்பத்தி இயலளவு அதிகரித்து உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள், சேவைகளின் அளவு உயர்வடைவதால் நாட்டின் தேசிய வருமானம் அதிகரித்துவிடுகிறது. இவ்வாறு ஆண்டுதோறும் தேசிய வருமானத்தில் ஏற்படுகின்ற அதிகரித்த நூற்றுவீதமே பொருளாதார வளர்ச்சி வீதம் ஆகும்.

பொருளாதார வளர்ச்சி வீதத்தின் முக்கியத்துவம் யாதெனில் அது மக்களின் வாழ்க்கைத்தரம்உயர்வடைவதை சுட்டுகின்றது. பொருளாதார வளர்ச்சி ஏற்படும் போது தேசிய வருமானம் அதிகரித்துள்ளது என்பது கருத்தாகும். இதனால் நாட்டு மக்களின் வருமானம் அதிகரிக்க அவர்கள் தமது அடிப்படைத்தேவைகளை நிறைவு செய்யக்கூடிய நிலையினைப் பெறுவார்கள். இதனூடாக மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைந்து வறுமை தணிக்கப்படலாம்.

பொருளாதார வளர்ச்சி வீதமானது எப்போதும் வறுமையினைத் தணித்துவிடும் எனக்கூறமுடியாது. ஏனெனில் தேசிய வருமானம் அதிகரித்தாலும் அதன் பலாபலன்கள் எல்லோரது கைக்கும் கிடைக்கத்தக்க வகையிலான சுயமான இயக்கத்தினை பொருளாதார வளர்ச்சியானது தன்னகத்தே கொண்டிருப்பதில்லை. அதிகரித்த தேசிய வருமானத்தின் பலாபலன்கள் ஒரு சில செல்வந்தர்களின் கைகளில் குவிந்துவிடுமானால் அது வறுமையினை மேலும் நீடிக்கச்செய்துவிடும். உதாரணமாக 1990 ம் ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 6.6 வீதமாகக் காணப்பட்டபோது வருமானத்தின் சார்ந்த பரம்பலை நோக்கும்போது கீழ்மட்ட 40 % மானோர் மொத்த வருமானத்தில் 30% த்தையே

பெறுகின்றபோது உச்சமட்ட 10% மானோர் ஏறக்குறை 42% த்தை பெறுகின்றனர். இத்தகைய சமனற்ற வருமானப்பரம்பலானது இலங்கையில் வறுமையின் அளவினை மேலும் நீடிக்கச் செய்துள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றது.

பொருளாதார வளர்ச்சி வீதத்தின் மற்றுமோர் முக்கியம்சம் யாதெனின் அது தனிநபர் உற்பத்திக்கான மாற்றத்தினை வெளிப்படுத்தி அளவிடுமாயினும் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுக்கொள்ளுகின்ற போது தனிநபர் உற்பத்தி கண்டிப்பாகவே மாற்றம் அடைய வேண்டும் எனக்கூற முடியாது. தேசிய வருமானம் அதிகரிக்கும் அதே வீதத்தால் சனத்தொகையும் அதிகரித்துவிட்டால் தனிநபர் உற்பத்தி மாற்றம் அடையமாட்டாது. எனவே தேசிய வருமானம் அதிகரிக்கின்றபோது தனிநபர் உற்பத்தி நிச்சயமாக மாற்றம் அடையும் எனக் கூறமுடியாது.

பொருளாதார வளர்ச்சி ஏற்படுகின்ற போதுபொருளாதாரக் கட்டமைப்பிலும் மாற்றம் ஏற்படுவது குறிப்பிடத்தக்கதாகும். பொருளாதாரக் கட்டமைப்பு என்பது மொத்தத்தேசிய உற்பத்திக்கு அல்லது மொத்தஉள்நாட்டு உற்பத்திக்கு ஒவ்வொரு துறைகளும் வழங்குகின்ற சார்பளவிலான பங்களிப்பினைக் குறிப்பிடுகின்றது. இதே போல நாட்டின் மொத்தத் தொழில் வாய்ப்பில் ஒவ்வொரு துறையும் பெறுகின்ற சதவீதமும் கவனத்திற் கொள்ளப்படும். எனவே மொத்தத்தேசிய உற்பத்தியிலும் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் மொத்தத் தொழில் வாய்ப்பிலும் விவசாயம், கைத்தொழில் சேவைகள் துறை ஆகியவற்றின் சார்பளவிலான பங்களிப்பினைக் குறிப்பிடுவதே பொருளாதாரக் கட்டமை பாகும். தேசிய உற்பத்தி அதிகரித்து பொருளாதார வளர்ச்சி ஏற்படுகின்ற போது ஒவ்வொரு துறையினாலும் வழங்கப்பட்ட சார்பளவானபங்களிப்பு வீதத்திலும், ஊழியப்படையினர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ள துறைகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதுவே பொருளாதாரக் கட்டமைப்பிலேற்படும் மாற்றமாகும்.

பொதுவாகப் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு பொருளாதாரக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுகின்ற போது விவசாயத் துறையின் சார்பளவான பங்களிப்பு வீதம் குறைவடையக் கைத்தொழில் துறையின் சார்பளவான பங்களிப்பு வீதம் அதிகரித்துச் செல்ல சேவைகள் துறையின் சார்பளவான பங்களிப்பு வீதம் பெருமளவில் அதிகரிப்பதே அபிவிருத்தி அடைந்த நாடுகளின் நிலையாகவுள்ளது. மேலும் விவசாயத் துறையில் வேலை வாய்பபுப் பெற்றுள்ள ஊழியர்களின் சார்பளவான பங்களிப்புக் குறைவாகவும் கைத்தொழில் சேவைகள் துறையில் வேலைவாய்ப்புப் வெறுவோரின் சார்பளவான பங்களிப்பு அதிகமாகவும் காணப்படும். இதற்கான காரணங்கள் வருமாறு.

1. குடும்பங்களின் வருமானம் அதிகரித்துச் செல்லுமிடத்து ஒரு எல்லைக்கப்பால் உணவுப் பொருட்களுக்கான கேள்வி அதிகரிப்பதில்லை. அதாவது உயர்ந்த வருமான மட்டங்களில் உணவுப்பொருட்களுக்கான வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சியற்றதாகும். உணவுப் பொருட்களை உற்பத்தியாக்கும் துறையாக விவசாயத்துறை அமைகின்றது. இதனால் தான் விவசாயத்துறையின் சார்பளவான பங்களிப்பு குறைவடைகின்றது.

2. விவசாயத்துறையில் ஊழியர்களின் உற்பத்தித்திறன் அதிகரித்தல். பொருளாதார வளர்ச்சி ஏற்படுகின்ற போது இயந்திரங்களின் பாவனையினாலும், நவீன பயிற்செய்கை முறைகளினாலும் ஊழியர்களின் உற்பத்தித்திறன் அதிகரிக்கின்றது. இதனால் ஒரு விவசாயி பலருக்குத்தேவையான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யலாம். எனவே விவசாயத் துறையில் வேலை செய்யும் ஊழியரது பங்கு குறைவடைந்து விடுகின்றது.

3. வருமானம் அதிகரிக்கின்ற போது உணவல்லாம் பொருட்களுக்கான கேள்வி அதிகரிக்கின்றது, குறிப்பாக

சேவைகள் துறையினால் உற்பத்தியாக்கப்படும் கல்வி, சுகாதாரம் பொழுதுபோக்கு, போக்குவரத்து போன்ற வற்றிற்கான கேள்வி உயர்வடைய கைத்தொழில் சேவைகள் துறையினது தேசிய உற்பத்திக்கான சார்பு முக்கியத்துவம் அதிகரித்து விடுகிறது.

இவ்வாறு கைத்தொழில் சேவைகள் துறையின் சார்பளவு முக்கியத்துவம் அதிகரித்து அவை வளர்ச்சியடைவதாலும், கைத்தொழில் சேவைகள் துறையில் வேலைவாய்ப்புப் பெறுவோரின் சார்பளவு முக்கியத்துவம் உயர்வடைவதுடன் நீண்டகாலம் போக்கில் வேலையில்லாப் பிரச்சினை நீங்கி கீழுழைப்பு நிலையும் குறைவடைகின்றது. எனவே பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதுடன் பொருளாதாரக் கட்டமைப்பிலும் சாதகமான மாற்றம் ஏற்படுமாயின் பொருளாதார அபிவிருத்திக்கு வழி வகுத்து விடுகின்றது.

பொருளாதார அபிவிருத்தி என்பது பொருளாதார வளர்ச்சியுடன் மற்றும் சமூக, கலாசார, அரசியல் காரணிகளில் ஏற்படக்கூடிய முன்னேற்றமாகும் எனவே பொருளாதார வளர்ச்சியே பொருளாதார அபிவிருத்தி எனக்கூறுவதற்கில்லை. ஆனால் பொருளியல் அபிவிருத்திக்கு பொருளாதார வளர்ச்சி ஓர் முன்நிபந்தனையாகவுள்ளது. எனவேதான் பொருளாதார அபிவிருத்தி என்பது பொருளாதார வளர்ச்சியுடன் வருமானப்பரம்பலில் காணப்படும் சமனின்மைகள் குறைக்கப்பட்டும், வறுமை மட்டம் குறைக்கப்பட்டும், வேலையில்லாப் பிரச்சினை நீங்கியும் செல்லுமானால் பொருளாதார அபிவிருத்தி ஏற்படுகின்றது எனக் கூறமுடியும். இதனால்தான் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை அடைவதுடன் எல்லோராலும் கைக்கும் கிடைக்கத்தக்க வகையில் வருமானத்தை ஒப்பரவு, செய்வதன் மூலமே வருமான அதிகரிப்பு என்ற பொருளாதாரக்காட்டியில். மாத்திரமல்லாது சமூக நலனை அதிகரித்தும் பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்தக்கூடிய சமூக அபிவிருத்திக் காட்டிகளினும் முன்னேற்றம் அடையலாம். இவ்வகையில் ஒரு நாட்டின் பொருளாதார சமூக அபிவிருத்தியை மதிப்பிடும் போது பின்வரும் நிலைமைகளை அவதானித்தல் வேண்டும்.

1) வருமான அதிகரிப்பு
2) வருமானப் பரப்பல்
3) வறுமை
4) வேலை வாய்ப்புக்கள்

இத்தகைய நிலைமைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களை அளவிடுவதன் மூலமே ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மட்டத்தை அளவிடலாம். இதற்காக பயன்படுத்தக்கூடிய குறிகாட்டிகளின் பட்டியல் வருமாறு.

1) வருமான அதிகரிப்பு என்ற பொருளாதார வளர்ச்சியை அளவிடுவதற்கு மாறா விலைகளில் கணிப்பீடு செய்யப்பட்ட மொத்தத்தேசிய உற்பத்தி, உள்நாட்டு மொத்த உற்பத்தி, ஆள்வீத மொத்தத் தேசிய உற்பத்தி என்பனவற்றுடன் இவற்றின் வளர்ச்சி வீதத்தினையும் பயன்படுத்தலாம்.

2) வருமானப்பரம்பலின் மாற்றத்தினை அளவிடுவதற்கு லோறன்ஸ்வளையி, கினிக்குணகம், வறுமைக்கோட்டின் கீழுள்ள சனத்தொகை வீதாசாரம் என்பன வற்றைப் பயன்படுத்த முடியும்.

3) வறுமை நிலையை அளவிடுவதற்கான காட்டிகளாக வறுமைக்கோடு (வருமானத்தகுதிவிதி) போசாக்கான உணவு' கல்வி சுகாதார மருத்துவ வசதிகள், வீடமைப்பு போன்றன வற்றைப் பயன்படுத்த முடியும்.

4) வேலை வாய்ப்புக்கள் பற்றி அறிந்து கொள்வதற்கான காட்டிகளாக வேலையற்றோர் வீதம், கீழுழைப்பு வீதம் என்பனவற்றைப் பயன்படுத்த முடியும்.

---

உசாத்துணை நூல்கள்,

1) பொருளியலாளன் 1989 ஜீன்
2) அபிவிருத்தி புவியியல் உலகப்பாங்கு திரு. க. குணராசா எழுதியது
3) பொருளியல் தேசிய வருமானம் திரு. S வரதராஜன் எழுதியது
4) பொருளியல் இலங்கையின் அடிப்படை புள்ளி விபரங்கள் றோட்டறிக்கழக வெளியீடு.

# சனத்தொகை வளர்ச்சியும் பொருளாதார விளைவுகளும்

மு. பூலோகராஜா
ஆண்டு - 13 வர்த்தகப்பிரிவு

## 1.0 அறிமுகம்

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இலங்கையும் ஒன்றென பொருளியலாளர் கருதுவர். இலங்கை 25332 சதுரமைல் பரப்பைக் கொண்ட நாடு. இச்சிறு நிலப் பரப்பில் வாழும் மக்கள் தொகை இதே அளவுடைய மற்றைய நாடுகளின் மக்கள் தொகையை விட உயர்வாக உள்ளது. இதனால் இப்பிரதேச பொருளாதார அபிவிருத்தி, அபிவிருத்தியின்மை போன்றவை பற்றிய மதிப்பீடுகளில் இச்சனத்தொகை என்ன விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பது பற்றி ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும். வெளியிடப்பட்டபுள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார அபிவிருத்திக்கு சாதகமாகவும், பாதகமாகவும் சனத்தொகை எவ்வாறு இருந்துள்ளதென்பதை ஆராய்வதும் இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## 2.1 சனத்தொகை வளர்ச்சி

பொதுவாக உலக நாடுகளில் குறிப்பாக வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் அவற்றின் பொருளாதார நடவடிக்கைகளில் பெருமளவு தாக்கத்தினை ஏற்படுத்துவதில் சனத்தொகை முக்கிய பங்கினை வகிக்கிறது. வளர்ச்சி யடைந்து வரும் நாடுகளில் ஒன்றாகிய இலங்கையிலே இரண்டாம் உலகமகாயுத் தத்திலிருந்து சிறப்பாக நோக்குவோமானால் சனத்தொகையானது ஒரே சீரான வேகத்தில் இல்லாவிட்டாலும் கூட தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து கொண்டே வருகிறது.

சனத்தொகை வளர்ச்சி எனும் போது குறிப்பிட்ட இருகாலப்பகுதிகளுக்கிடையில் மொத்த சனத்தொகையில் ஏற்படுகின்ற அதிகரிப்பை குறிக்கிறது. இச்சனத்தொகை வளர்ச்சி பின்வரும் இருவழிகளில் ஏற்படுகிறது

i இயற்கை வளர்ச்சி
ii குடியேற்ற வளர்ச்சி

இயற்கை வளர்ச்சி என்பது பிறப்புக்கும் இறப்புக்கும் இடையிலான தொகையைக் குறிக்கும்போது குடியேற்ற வளர்ச்சி என்பது குடியேறியோர் தொகைக்கும் குடி அகன்றோர் தொகைக்கும் இடையிலான தொகையைக் குறிக்கும். பொதுவாகச் சனத்தொகை வளர்ச்சி என்பது இயற்கை வளர்ச்சியையும் குடியேற்ற வளர்ச்சியையும் உள்ளடக்கியதாகக் காணப்படும்.

இலங்கையின் சனத்தொகை வளர்ச்சிப் போக்கை நோக்குவோமாயின் 1871 க்கும் 1946 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 2.4 மில்லியனிலிருந்து 6.6 மில்லியனாக அதிகரித்தது. ஆனால் 1946 க்கும் 1981க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 6.6 மில்லியனிலிருந்து 14.8 மில்லியனாக அதிகரித்தது எனவே 1871 1946க்கும் இடைப்பட்ட 75 வருடகாலப்பகுதியில் சனத்தொகை 4.2 மில்லியனால் மட்டுமே அதிகரித்தது. ஆனால் 1946-1981 க்கும் இடைப்பட்ட 35 வருட காலப்பகுதியில் 8.2 மில்லியனால் அதிகரித்தது. இவ்வாறு அதிகரித்தமைக்கான முக்கிய காரணம் சுகாதார மருத்துவ வசதிகளின் முன்னேற்றத்தால் இறப்பு வீதம் கட்டுப்படுத்தப்

பட்டமையாகும். இந்நிகழ்வானது உலக லாவிய ரீதியில் முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனின் எந்த ஒரு நாட்டிலும் பொருளாதார வளர்ச்சிக்குப்பின்பே படிப்படியாக சமூக நலச் சேவைகள் அபிவிருத்தியடைந்து செல்லும். ஆனால் வழமைக்கு மாறாக இலங்கையில் அந்நியர் ஆட்சிக்காலத்திலே பயங்கர கொடிய நோய்கள் பரவி பெருமளவு மக்கள் இறந்ததன் காரணமாக மருத்துவ சுகாதார சேவைகளில் கவனம் செலுத்தப்பட்டது. D.D.T யின் உபயோகம் தடுப்பூசிகளின் உபயோகம் போன்ற பாரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இறப்பு வீதத்தை வெகுவாக குறைத்தார்கள். ஆனால் பிறப்பு வீதத்தைக் கட்டுப்படுத்த முன்வரவில்லை. இதன் விளைவு சனத்தொகை தாராளமாகப் பெருகியது.

## 2·2 பிறப்பு வீதப்போக்கு

இலங்கையின் சுதந்திர காலப்பகுதியில் இருந்து பருமட்டான பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்து கொண்டு வந்தது. எனினும் இறப்பு வீதத்தை போல சடுதியாக வீழ்ச்சியடையவில்லை. 1960 களின் இறுதி வரை பிறப்பு வீதம் (1000 பேருக்கு) 37/38 என்ற உயர்ந்த அளவிலேயே இருந்தது. காரணம் அக்காலத்தில் அதிக அங்கத்தவர் கொண்ட குடும்பங்கள் விரும்பப்பட்டன. ஏனெனில் அக்காலத்தில் பெரும் பாலோர் விவசாயத் தொழிலையே பெருமளவில் மேற்கொண்டனர். எனவே விவசாயத்தில் ஈடுபடுவதற்கும் மந்தைகளை மேய்ப்பதற்கும், வீட்டு வேலைகளைச் செய்வதற்கும் மனித வலு பெருமளவு தேவைப்பட்டது.

எனினும் 1960 களின் பிற்பகுதியில் இருந்து பிறப்பு வீதம் படிப்படியாகக் குறையத்தொடங்கியது. 1960 களின் பிற்பகுதியில் 33 பேராகவும் 1970 களில் 28/29 பேராகவும் 1980 களில் 24/25 பேராகவும் வீழ்ச்சியடைந்தது. தற்போது 21/22பேராகவும் உள்ளது. இவ்வாறு பிறப்பு வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பல்வேறு காரங்கள் உண்டு. குறிப்பாக நாட்டில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றம், பெண்களின் சமூக அந்தஸ்து உயர்வடைந்தமை, இவற்றின் காரணமாகப் பெண்களின் திருமண வயது உயர்வடைந்தமை குறைந்த அங்கத்தவர் கொண்ட குடும்பம் நாகரீகமானது எனக்கருதியமை, நாட்டில் ஏற்பட்ட பொதுவான வேலையின்மை, இளைஞர்கள் யுவதிகள் வேலைவாய்ப்புத்தேடி வெளிநாடுகளுக்கு இடம் பெயரல் மேலும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட குடும்பத்திட்டப் பிரசாரங்கள் ஊக்குவிப்புகள் என்பன பிறப்பு வீதத்தைக் குறைத்துள்ளன.

## 2.3 இறப்பு வீதப்போக்கு

1946ம் ஆண்டு இலங்கையின் இறப்பு வீதம் 23 ஆகக் காணப்பட்டது. 1960 களில் 10 ஆகவும், 1970 களில் 7 பேராகவும், 1980 களில் 6பேராகவும் காணப்பட்டது. இன்று 5/6 ஆகக் காணப்படுகிறது இதற்கான முக்கிய காரணம் நாம் முன்பு கூறியது போல சுகாதார நிலைமைகளில் ஏற்பட்ட முன்னேற்றமாகும். உலகில் எந்த ஒரு நாட்டிலும் இலங்கையைப் போல சடுதியாக இறப்பு வீதம் வீழ்ச்சியுறவில்லை.

அதாவது சுதந்திர காலப்பகுதிக்குச் சற்று முன்பு தொடக்கம் இன்று வரை இலங்கையின் பருமட்டான இறப்பு வீதம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வந்துள்ளது. இவ்வாறு இறப்பு வீதம் வீழ்ச்சியடைந்து சென்றமைக்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன.

i. மலேரியா பிளேக் போன்ற நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டமை.

ii. சுகாதார மருத்துவ வசதிகளில் ஏற்பட்ட முன்னேற்றம்.

iii. அரசின் இலவச, மானிய உணவு விநியோகத்திட்டம்.

iv. ஏனைய நலன்புரிச் சேவைகள்.

| ஆண்டு | மொத்த குடித்தொகை (மில்லியனில்) | பிறப்பு வீதம் (1000க்கு) | இறப்பு வீதம் (1000க்கு) | வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|---|
| 1881 | 2·7 | 27·4 | 22·7 | 1·42 |
| 1901 | 3·5 | 34·4 | 27 6 | 1·72 |
| 1946 | 6·6 | 36·8 | 23·0 | 1·52 |
| 1963 | 10·5 | 37·3 | 10·4 | 2·65 |
| 1971 | 12·6 | 32·7 | 8·2 | 2·2 |
| 1981 | 14·9 | 28·0 | 6 0 | 1·9 |
| 1985 | 15·8 | 24·3 | 6·2 | 1·8 |
| 1986 | 16·1 | 22·3 | 6·0 | 1·6 |
| 1987 | 16·3 | 21·9 | 5·9 | 1·3 |
| 1988 | 16·5 | 20 7 | 5·8 | 1 4 |
| 1989 | 16·8 | 21·3 | 6·2 | 1·3 |
| 1990 | 16·9 | | | |

## 3.0 சனத்தொகை வளர்ச்சியும் பொருளாதார விருத்தியும்

சனத்தொகை வளர்ச்சியானது பொருளாதார விருத்திக்கு சாதகமானது என்றும் பொருளியலாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். பொருளாதார வளர்ச்சிக்குச் சனத்தொகை சாதகமெனக் கூறுவோர் மனிதனை உற்பத்திக்காரணி என்ற அடிப்படையில் அணுக முனைகின்றார்கள். மனிதனே சிறந்ததும் பயன் கூடியதுமான ஒரு உற்பத்திக்காரணி என இவர்கள் வாதிடுகின்றனர். இன்று பொருளியலாளர்கள் மனித வளங்களையும், இயந்திரங்கள், உபகரணங்கள், பணம் என்பன போன்று பொருளாதார வளமாகவே கருதுகின்றார்கள். மனிதர்கள் நிர்வாக விஞ்ஞான பொறியியல் தொழில்நுட்ப கைத்திறன் வல்லமைகளைக் கொண்டிருப்பதால் பொருளாதார அபிவிருத்திக்கு இவை இன்றியமையாதனவாக இருக்கின்றன. கூடிய மனித சக்திகளைக் கொண்ட நாடுகளில் இவை அதிகமாகக் காணப்படும் சாத்தியங்கள் இருப்பதனால் துரிதமான பொருளாதார விருத்தியினை ஏற்படுத்தல் இலகுவாக இருக்கும் என்பது இவர்கள் வாதம்.

சனத்தொகை கூடிய நாடுகளில் ஊழியமானது மிக அதிகமாகக் காணப்படுவதால் கைத்தொழிலாக்கத்துக்கு தேவையான மலிவான ஊழியத்தினை போதியளவு பெறக்கூடியதாக இருக்கும். மலிவான ஊழியமானது கைத்தொழிலாக்கத்துக்கு இன்றியமையாத ஒரு காரணியாகும். பொதுவாக பொருட்களின் உற்பத்திச்செலவில் கணிசமான பங்கினை ஊழியமானது கொண்டிருக்கின்றது. எனவே மலிவான ஊழியமானது காணப்படும் போது கைத்தொழில் பொருட்களின் உற்பத்திச் செலவானது குறைவாக இருப்பதால் குறைந்த விலையில் பொருட்களை உற்பத்தி செய்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சந்தைப்படுத்தக்கூடியதாக இருக்கும். இன்று ஜப்பான் போன்ற நாடுகளின் கைத்தொழில்பொருட்களுக்கு பெரும் சந்தை வாய்ப்புகள் இருப்பதற்குக் கூடிய தரம் மட்டுமன்றி குறைந்த விலையுமே காரணமாகும். மேலும் இலங்கையை எடுத்துக் கொள்வோமாயின் இலங்கையில் மிகவும் குறைந்த கூலியில் தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் வேறும் பல வசதிகள் செய்து தரப்படும் எனவும் இலங்கை அரசாங்கமானது சர்வதேச ரீதியில் விளம்பரங்களைச் செய்ததன் விளைவே இலங்கையில் பெருமளவு அன்னிய முதலீடு அதிகரிக்கவும் பொருளாதார வளர்ச்சி ஏற்படவும் வழி வகுத்தது எனலாம். எனவே இலங்கையில் சனத்தொகை வளர்ச்சியே முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமைந்தது என்பது புலனாகும்.

சனத்தொகை கூடிய நாடுகளில் உற்பத்திப்பொருட்களுக்கு பெருமளவு உள்நாட்டுக் கேள்வியானது காணப்படும். பெருமளவு உள்நாட்டுக் கேள்வி காணப்படுகின்ற நாடுகளில் கைத்தொழிலாளர்கள் நிச்சயமற்ற வெளிநாட்டுச் சந்தையினில் தங்கியிராது உள்நாட்டு சந்தையை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தியினை மேற்கொள்ளக்கூடியதாக இருப்பதனால் கைத்தொழிற் துறையில் முதலீடு செய்வதற்கான ஊக்கம் அதிகமாகக் காணப்படும். உதாரணமாக இந்தியாவை நோக்குவோமாயின் இந்தியாவில் கைத்தொழில்கள் பெரும் உள்நாட்டுச் சந்தையினை அடிப்படையாகக் கொண்டே ஆரம்பத்தில் வளர்ச்சி அடைந்தன. இன்று உலகளாவிய ரீதியில் கைத்தொழில் துறையில் இந்தியா வகித்து வரும் நிலைமைக்கு சனத்தொகைப் பெருக்கமும் காரணம் ஆகும்.

எனவே சனத்தொகையானது ஒரு நாட்டின் மிகவும் பெறுமதி வாய்ந்த ஒரு வளமாகும். அதிலும் விசேடமாக இளைஞர்கள் அந்நாட்டின் எதிர்கால வரப்பிரசாதமாகும். நாடு அபிவிருத்திப் பாதையில் வீறுநடை போட இவ் இளைஞர்களைச் சரியான முறையில் பயன்படுத்தலாம். உலகிலுள்ள அனேக நாடுகளில் இளைஞர் சனத்தொகையைச் சரியான முறையில் வழி நடத்துவதன் மூலம் நல்ல பயனை அடைந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. பாடசாலைகளில் கல்வி கற்கும் காலத்திலேயே நவீன தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் நாட்டில் எதிர்காலத் தேவைக்கேற்ப மானிட வளத்தைப் பயன்படுத்த முடியும். இது புத்தியுள்ள மக்களின் வழிமுறையாகும். நாளைய உலகின் வழிகாட்டியான இன்றைய இளைஞனுக்குச் சிந்தனையாலும் செயலாலும் அபிவிருத்திப்பாதைக்கு அர்ப்பணம் செய்யும் சந்தர்ப்பமும் அதிகமாகும். எனவே சனத்தொகை வளரப் பொருளாதாரமும் வளரும்.

## 4·0 சனத்தொகை வளர்ச்சியும் பொருளாதார பாதிப்புகளும்

## 4.1 அரசின் சமூகநல செலவுகள் அதிகரித்தல்

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் தனியார் துறையானது பூரண வளர்ச்சியடையாத நிலையில் இருப்பதால் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத பல முதலீடுகளை அரசாங்கமானது மேற்கொள்ளுதல் அவசியமானதாக உள்ளது. சனத்தொகையானது அதிகரித்துச் செல்லும் போது சனத்தொகையில் சிறுவர்கள், இளைஞர்கள் ஆகியோரின் தொகை அதிகமாக இருக்கும். இதனால் கல்வி, சுகாதார மருத்துவ வசதி போன்றவற்றிற்காகவும் வீதிகள், நீதிமன்றங்கள், நிர்வாகம், சட்டம் போன்ற பொதுப் பொருட்களை உருவாக்கவும், வறுமை நிவாரணம் குடிநீர், போக்குவரத்து, நகராக்கம், கிராம புனரமைப்பு போன்று அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் செலவுகளில் பெரும் பகுதி சமூகநலன் சார்ந்தவையாக அமைந்திருக்குமேயொழிய நேரடியாகப் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கமாட்டாது. எனவே சனத்தொகை அதிகரிப்பானது பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய முதலீடுகளை அரசாங்கத்துறை மேற்கொள்வதற்கு தடையானதொன்றாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அமைந்துள்ளது.

## 4.2 வேலையின்மை

ஒரு நாட்டின் வேலை செய்யும் வயதுச் சனத்தொகையில் (15 வயது தொடக்கம் 60 வயது வரை) அடங்கியுள்ள வேலை செய்யக் கூடிய விருப்பமும் ஆற்றலும் உடையோரின் எண்ணிக்கையே தொழிற்படையாகும். அதாவது வேலை செய்யும் வயதுச் சனத்தொகையினுள் அடங்கியுள்ள முழுநேர மாணவர்கள், குடும்பத்தலைவிப்

பெண்கள், வேலை செய்ய விருப்பமற்றிருக்கும் ஆண்கள், உடல் உள ரீதியான குறைபாடுடையோர் ஆகியோரை நீக்கிய பின்னுள்ள தொகையே தொழிற்படை ஆகும். இத்தொழிற் படைக்குள் காணப்படுகின்ற தொழிலற்றோரின் தொகையே வேலையின்மை எனப்படும்.

இலங்கையில் மனித வள அதிகரிப்பினால் தொழிலாற்றல் பெற்ற மக்களிடையே வேலையில்லாப் பிரச்சினையால் ஏற்படும் துன்பம் அளப்பரியது. இத்தகைய வேலைவாய்ப்பு இன்மையானது சமூக பொருளாதார ரீதியான வேறுபட்ட பாதக விளைவுகளை வெளிப்படுத்தியிருப்பது யாவரும் அறிந்த உண்மை. இலங்கையில் வேலையில்லாப் பிரச்சனையானது 1977க்கு முற்பட்ட காலத்திலேயே முக்கியம் பெற்றது. 1977க்கு முன்னர் இலங்கை கட்டுண்ட பொருளாதாரமாகவும் வெளிநாட்டுத் தொடர்புகள், வெளிநாட்டு முதலீடுகள் குறைவாகவும் அல்லது இல்லாமலும், பாரிய திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படாமலும் விவசாய பொருளாதாரத்தில் மட்டும் தங்கியிருந்தமை போன்ற பல்வேறு காரணங்களால் வேலையின்மை வீதம் உயர்வாக காணப்பட்டது.

மேலும் வெளிப்படையான வேலையின்மையை விட மறைமுக வேலையின்மை அல்லது கீழ் உழைப்பு நிலையும் அதிகமாகக் காணப்பட்டது. கீழ் உழைப்பு என்பது குறிப்பிட்ட நபரின் திறமை தகுதி என்பனவற்றிற்குகுறைந்ததரத்தில்உள்ளவேலையில் ஈடுபடல் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வருமானத்திலும் பார்க்கக் குறைந்த வருமானத்தை தரக்கூடிய தொழிலில் ஈடுபடல் அல்லது வாரத்தில் 40மணித்தியாலத்துக்கு (5நாள் ×8 மணித்தியாலம்) குறைந்த நேரத்தில் வேலை செய்யக்கூடிய நிலையில் இருத்தல் போன்றன கீழ் உழைப்பு நிலையைப் புலப்படுத்தும். மேலும் குறிப்பிட்ட ஒரு தொழிலில் தேவைக்கு மேலாக தொழிலாளர்கள் இருப்பதும் மறைமுக வேலையின்மையையே புலப்படுத்தும்.

1977 க்குப் பின்னர் 1981/82 கள் வரை வேலையின்மையின் அளவு சற்று குறையத் தொடங்கியது. அதாவது தாராள பொருளாதார கொள்கையை பின்பற்றியதன் ஊடாக ஏற்றுமதி இறக்குமதி விரிவாக்கியமை, தனியார் மயமாக்கலை மேற்கொண்டமை, சுதந்திர வர்த்தக வலய விரிவாக்கம் துரிதமகாவலித்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டமை, வீடமைப்புத் திட்டம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம் உல்லாச பயணத்துறை ஊக்குவித்தமை போன்ற காரணங்களால் வேலையின்மையின் அளவு சற்றுக் குறைந்தது.

எனினும் 1982/83 க்குப் பின்னர் வேலையின் அளவு அதிகரித்தது. காரணம் வடக்கு கிழக்கு இனப்பிரச்சனை தென் பகுதி பயங்கரவாதம் போன்றவற்றால் உல்லாச பயணத்துறையின் வீழச்சி அரச, தனியார் முதலீடுகள் அழிக்கப்பட்டமை, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தயக்கம் காட்டியமை, வடக்கு கிழக்கில் விவசாய மீன்பிடி செய்தி தொடர்பு போக்குவரத்து அரச நிர்வாகம் போன்றன பாதிக்கப்பட்டன. மேலும் பொருளாதார ரீதியாக வாழ்க்கை தரத்தை உயர்த்த ஆண்களுடன் சேர்ந்த வகையில் குடும்பப் பெண்களும் தனியார் துறையில் வேலைகளை நாடுதல் போன்ற பல்வேறு காரணங்களால் வேலையின்மையின் அளவு கூடியது.

இவ்வாறு இலங்கையில் வேலையின்மை வீதம் உயர்வடைந்து சென்றதன் விளைவாகவும், அரசின் கொள்கை காரணமாகவும் பெருமளவு தொழிலாளர் வெளிநாடுகளுக்கு இடம் பெயரத்தொடங்கினார்கள். இதன் விளைவாக தேறிய காரணி வருமானம் சாதகமான நிலையை அடைந்தாலும் கூட பணநிரம்பல் அதிகரித்து பணவீக்க நிலைமைக்கும் இட்டுச்சென்றது. மேலும் வெளிநாட்டுசெலாவணி அதிகரித்து சென்மதி நிலுவைக்கு உதவினாலும் கூட, தொழிலைநாடி மூளைசாலிகளும் வெளியே

றுவதால் நாட்டின் உற்பத்தி மட்டம் பாதிக்கப்பட்டு உற்பத்தியின் அளவு குறைவடையும். எனவே இலங்கையரின் வெளியேற்றம் காரணமாக பணமுடையோரின் தொகை அதிகரிக்க பொருள்களின் விலையிலும் உச்சநிலை ஏற்பட்டது. இது இத்தகைய நிலைக்கு உள்ளாகாத மக்களுக்கு பெரும் இடையூறாக அமைகிறது.

இவ்வாறு நாட்டில் வேலைவாய்ப்பு அதிகரிக்காமல் இருக்கும்போது தொழிற்படையில் சேரும் சனத்தொகை அதிகரிக்கின்றநிலையில் பல்வேறு பிரச்சனைகள் உருவாகின்றன. குறிப்பாக தங்கிவாழ்வோர் தொகை அதிகரித்தல் வாழ்க்கை செலவு கூடி வாழ்க்கைத்தரம் குறையும் சேமிப்பு குறையும், முதலீடு குறையும் வன்முறைகள் போராட்டங்கள் உருவெடுக்கும். அரசின் உதவிக்கொடுப்பனவுகள் அதிகரித்து அரச மாற்றல் கொடுப்பனவுகள் கூடி அபிவிருத் திட்டங்கள் பாதிக்கப்படும்.

## 4.3 தங்கி வாழ்வோர் தொகை அதிகரிப்பு

எமது நாட்டில் சனப்பெருக்கம் மிக வேகமாக அதிகரித்து வருகின்றது என்பதற்கு வயது அடிப்படையிலான பகுப்பாய்வொன்றும் சிறந்த சான்றாக அமைகின்றது. இலங்கையின் சனத்தொகையில் 14 வயதுக்கு குறைந்தவர்களின் தொகை 35.3 வீதம் ஆகவும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் தொகை 6.6 வீதம் ஆகவும் காணப்படுகிறது. இவர்கள் தங்கி வாழ்பவர்கள் எனப்படுவர். இவர்களுடன் 15 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டவர்களில் உள்ள உயர்கல்வி கற்போர், வேலையில்லாதோர், இல்லத்தரசிகள் ஆகியோரும் தங்கி வாழ்பவர்களே. இவர்கள் உற்பத்தியில் ஈடுபடாது நுகர்வில் மட்டும் ஈடுபடுபவர்களாக இருப்பார்கள், இந்த எண்ணிக்கைக்கு இணங்க சனத்தொகை புள்ளிவிபர மதிப்பீட்டு அலுவலர்களின் கணிப்பின்படி இலங்கையில் தங்கி வாழ்வோர் தொகை 1981இல் 65.6 வீதம் ஆகும். சனத்தொகை இயற்கையாக பெருகிவரும் இந்த நிலைமையின் கீழ் இலங்கையில் சிறுவர்களின் வாழ்க்கை ஓர் இக்கட்டான நிலையை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அனேகமாக அபிவிருத்தி அடைந்துவரும் பெரும்பாலான நாடுகளில் இது போன்ற துரதிர்ஷ்ட நிலைக்கு சிறுவர்கள் ஆளாகியிருக்கிறார்கள். உழைத்து வாழ்பவர்களின் தொகையைவிட தங்கி வாழ்பவர்களின் தொகை அதிகரிப்பதனால் தனியாள் ஒருவரின் வருமானம் குறைவாக காணப்படுகிறது. இதன் காரணமாக குறைவிருத்தி நாடுகளில் உள்ளவர்களால் அதிகம் சேமிக்க முடிவதில்லை, இதனால் முதலீடு குறைவாக உள்ளது. அதே வேளையில் தமது குழந்தைகளுக்கு தேவையான கல்வி மற்றும் வாழ்க்கைக்கு தேவையான விடயங்களை போதுமான வகையில் அளிக்க முடியாதிருப்பதால் நீண்டகாலத்தில் நாட்டின் பொருளாதார சமூக விருத்தி பாதிக்கப்படும்.

## 4.4 கல்வியில் ஏற்படும் தாக்கம்.

சனப்பெருக்கத்தால் சிறுபிள்ளைகளே பெருமளவு பாதிக்கப்படுகின்றனர். இன்று பாடசாலை செல்லும் சிறுவர்களின் எண்ணிக்கை முழுச்சனத்தொகையில் 1/3 பங்காகும். சிறுவர்களின் தொகை அதிகரிக்க அதிகரிக்க அரசாங்கத்தின்மீது சுமத்தப்படும் பாரமும் அதிகரிக்கிறது. நலன்புரி சேவையில் அக்கறை காட்டும் அரசாங்கம் என்றமுறையில் அதிகரித்து வரும் சிறுவர்களின் தொகைக்கு கல்வி வசதிகளை ஏற்பாடு செய்ய வேண்டும். பாடசாலை செல்லும் ஒவ்வொரு பிள்ளைக்கும் பாடசாலையை ஒழுங்கு செய்தல் புத்தகங்கள் வழங்கல், மதிய உணவு வழங்கல் என்பன அரசாங்கத்தின் பொறுப்பாகும். உதாரணமாக 1991 இல் பாடசாலை நண்பகல் உணவுக்காக அரசு 1402ு இலட்சம்ரூபாவை செலவிட்டுள்ளது. உரிய வயதில் ஒழுங்கான பாடசாலைக்கல்வி பிள்ளைகளுக்கு கிடைக்காது போனால் அவன் எழுத்தறிவை இழந்து போவதுடன் மட்டுமல்லாது அவனது குண

நலவளர்ச்சி, விவேகம், புத்திக்கூர்மை என்பனவும் குன்றிப் போகின்றன. மேலும் சனப்பெருக்கத்தின் வேகம் பொருளாதார அபிவிருத்தியின் வேகத்தை விட கூடுதலாக இருப்பின் கல்வியின் பொருட்டு பெரும் பங்கு பணத்தை அரசாங்கம் செலவிட வேண்டி ஏற்படும். உதாரணமாக 1991 ஆம் ஆண்டில் அரசாங்கமானது கல்விக்காக 90840 இலட்சம் ரூபாவை செலவிட்டுள்ளது. இவ்வளவு பெருந்தொகையான பணத்தை அரசு செலவிடுவதற்கு காரணம் அதிகரிக்கும் சனத்தொகை ஆகும். 1987 தொடக்கம் 1991 வரையான பொதுக்கல்வி தொடர்பான அட்டவணை கீழே தரப்படுகிறது.

**பொதுக் கல்வி 1987 — 1991**

| | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 |
|---|---|---|---|---|---|
| 1. பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை | 10207 | 10261 | 10296 | 10382 | 10401 |
| 2. மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | 3974605 | 4058842 | 4179520 | 4232356 | 4251704 |
| 3. புதிதாக அனுமதிக்கப்பட்டோர் | 394602 | 394960 | 395748 | 387314 | 390033 |
| 4. ஆசிரியர் மொத்த எண்ணிக்கை | 146712 | 146334 | 153243 | 184822 | 176173 |
| 5. மாணவர் / ஆசிரியர்களின் வீதம் | 27·09 | 27·74 | 27 | 23 | 24 |
| 6. பொதுக்கல்வி மீதான நடைமுறை செலவு (மில்லியன் ரூபா) | 3762·9 | 4749·4 | 5621 | 8529 | 7907 |
| 7. மாணவருக்கான செலவு (ரூபா) | 947 | 1170 | 1345 | 2015 | 6180 |

மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளுக்காக அரசாங்கமானது பெருந்தொகையான பணத்தை கல்வியின் நடைமுறைச்செலவுகளுக்கும் மூலதனச்செலவுக்குமென செலவிடுவதால் அரசின் நிதிப்பற்றாக்குறை மேலும் மோசமடைகிறது. இது அரசின் பொருளாதார முதலீட்டு திட்டங்களை பாதிக்கிறது. எனவே அதிகரிக்கும் சனத்தொகையானது அரசிற்கு பெரும் சுமையாக அமைகிறது.

## 4 5 சூழல் மாசடைதலும் வளங்கள் அருகிச் செல்லலும்.

குடித்தொகை வளர்ச்சியால் மக்கள் வாழும் சுற்றுப்புறச்சூழல் மாசடைவது இலங்கை போன்ற வளர்முக நாடுகளின் பொதுவான பண்பாகும். இவை மக்களிடையே நோய்களை அதிகப்படுத்துவதுடன் இறப்புக்களையும் ஏற்படுத்தி விடுகிறது. சூழல் மாசடைவதற்குரிய காரணிகளில் ஒன்று மலசலகூடங்கள் திருப்திகரமானதாக இல்லாமையேயாகும். கிராமப் பகுதிகளிலேயே இந்நிலை அதிகமாக காணப்படுகிறது. இதனால் சூழல் மாசடைந்து நோய்களுக்குள்ளாகும் நிலை காணப்படுகிறது.

மக்களின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்று நீராகும். இலங்கை சிறியதீவாக இருந்தபோதிலும் பிரதேசரீதியாக வேறுபட்ட காலநிலைப்பண்புகளை கொண்டிருக்கின்றன. ஈரவலயப்பகுதியில் நீர்ப்பிரச்சனை குறைவாக இருந்த போதிலும் வரண்ட பகுதிகளில் கிடைக்கக்கூடிய நீரினை சரியாக பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பது பிரச்சனையாகவுள்ளது. இலங்கையில் மக்கள் பரந்து வாழக்கூடிய நிலப்பரப்பு காணப்படினும் உவர்நீர்ப்பரம்பல் தடைசெய்கிறது. எனவே விரைவாக அதிகரித்துவரும் குடிப்பெருக்கத்தால் நீரின் உபயோகம் பன்மடங்கு பெருகவே தரைக்கீழ்நீர் உவர்த்தன்மையை பெற்றுவிடுகிறது. குறிப்பாக யாழ்ப்பாண

மாவட்டத்தில் தரைக்கீழ் நீரின் உபயோகம் அதிகரிக்கப்பட்டுள்ளதால் உவர்நீர்ப்பரம்பல் அதிகரிக்க தொடங்குகிறது. இதனால் எதிர்காலத்தில் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகும். மேலும் சனத்தொகைப் பெருக்கத்தால் வதிவிடப்பிரச்சனை தோன்றுகிறது, இதனால் காடுகள் இயற்கை தாவரங்கள் அழிக்கப்படுகிறது. இதனால் மழைவீழ்ச்சி பாதிக்கப்டுகிறது. இவற்றைவிட அதிகரித்த தொழிற்சாலைகள், வாகனப் பாவனை போன்றவற்றாலும் சூழல் மாசடைகிறது.

## 4.6 வதிவிடப்பிரச்சனை.

மக்கள் வாழ்க்கைக்கு இருப்பிடவசதி மிகவும் அத்தியாவசியமாகும். எனவே அதிகரிக்கும் சனத்தொகைக்கு ஏற்ப வதிவிடப் பிரச்சனையும் தோன்றுகிறது. இவ்வாறான பிரச்சனைகள் பெரும்பாலும் நகர்ப்புறங்களிலே காணப்படுகின்றன. பல்வேறு நோக்கங்களுக்காக மக்கள் நகர்ப்புறங்களில் குடியேறுகிறார்கள். இதனால் நகர்ப்புறங்களிலேயே வதிவிடப்பிரச்சனை பெரிதும் காணப்படுகிறது. 1871ம் ஆண்டு ஒரு சதுரமைலுக்கு 95 பேரைக்கொண்டிருந்த குடி அடர்த்தி 1981 இல் 690 பேராக அதிகரித்து. நிலப்பரப்பை விருத்திசெய்ய முடியாத நிலையில் காட்டாற்று வெள்ளம் போல சனத்தொகை அதிகரிக்குமானால் இப்பிரச்சினை மேலும் தலைதூக்கும். சனத்தொகையின் புவியியல் ரீதியான பரம்பலை ஒழுங்குபடுத்துவதற்கு குடியேற்றத்திட்டங்கள் தவிர வேறு நடைமுறைக் கொள்கைகள் பரந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை. விருத்தியடைந்த வலயத்திலுள்ள மேலதிக சனத்தொகை விருத்தியடையாத வலயத்தை நோக்கி நகர்வதற்கு விருத்தியடையாத வலயத்தில் ஈர்ப்பு சத்திமிக்க நகரங்களை உருவாக்குதல் அவசியமாகும். இதனால் விருத்தியடைந்த வலயத்திலுள்ள சனத்தொகை அமுக்கத்தை குறைக்க முடியும். இன்று இலங்கையில் மேலதிக சனத்தொகை பிரச்சனை என்பதை விட சனத்தொகைப் பரப்பலைச் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தலே உண்மையான பிரச்சனையாக உள்ளது. எனவே இதற்காக அரசாங்கம் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. மகாவலி நிகழ்ச்சித்திட்டமும் ஒருவகையில் இப்பிரச்சனையை தீர்க்கும் அணுகுமுறையாகும். மகாவலி திட்டத்துக்கு 1991 இல் மட்டும் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட மொத்த செலவு 24560 இலட்சம் ரூபா ஆகும், இது போன்ற பல்வேறு செலவுகளை வதிவிட பிரச்சனையை தீர்க்கும் உபாயத்தில் அரசாங்கமானது செலவிடுகிறது.

## 4.7 வறுமை

வறுமை என்பது அடிப்படைத்தேவைகளை பூர்த்திசெய்ய முடியாத நிலையினைக்குறிக்கும். அதாவது உணவு போசாக்கு சுகாதாரம் கல்வி வீட்டுவசதி போன்ற தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையைக் குறிக்கிறது. எனினும் இலங்கையை பொறுத்தவரை வறுமையானது எழுத்தறிவின்மை உடனலக்குறைவு ஆகியவற்றுடன் தொடர்புற்றிருப்பதிலும் பார்க்க தாழ்ந்த வருமானங்கள், தொழிலின்மை, கீழ்உழைப்பு என்பவற்றுடனேயே பெரிதும்தொடர்புற்றிருக்கிறது. ஏனெனில் இலங்கையில் கல்வியறிவு ஆயுள் எதிர்பார்ப்பு, சிசுமரணவீதம் போன்ற காட்டிகள் மிகவும் சிறந்த நிலையில் உள்ளன. ஏனைய வளர்ச்சியடைத்து வரும் நாடுகளோடு ஒப்பிடும்போது இலங்கை சாதனை புரிந்துள்ளது என்றே கூறலாம். இவ்வாறு ஏற்பட்டதற்கான காரணம் இலங்கை அரசாங்கத்தின் இலவச மானியத்திட்டங்கள் ஆகும். அதாவது இலவசக்கூப்பன், இலவசக்கல்வி இலவசபாடநூல் விநியோகம், மாணவர்களுக்கான மதிய போசன உணவு இலவசசுகாதாரவசதி இலவசமருத்துவவசதி முதலான நிவாரணங்கள் போன்றனவாகும். எனினும் இவை உடனடிப் பிரச்சனைக்கான நிவாரணங்களாக இருந்தனவே தவிர நிரந்தரமாக வறுமையை தீர்க்கும் செயற்பாடாக அமையவில்லை. எனவே வறுமைக்கு நிரந்தர தீர்வு காணும் ஒரு திட்டமாக 1989 இல்

ஜனசக்தி திட்டம் உருவாக்கப்பட்டது. இந்த ஜனசக்தி திட்டத்துக்கு 1989 ஒக்டோபரில் தொடக்கப்பட்டதிலிருந்து 1991 இறுதிவரை 71140 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இன்று வறுமை கோட்டுக்கு கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை மொத்த குடித்தொகையில் 40 வீதம் ஆகும்.

## 5.0 முடிவுரை

சனத்தொகை வளர்ச்சியானது அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் பொறுத்த வரை குறிப்பாக மேற்கு ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தவரை பொருளாதார வளர்ச்சிக்கு பக்க துணையாகவே அமைகின்றது. ஆனால் இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு சனத்தொகை வளர்ச்சியானது பெருமளவு பாதக விளைவுகளையே ஏற்படுத்தும் என்பது புலனாகும். ஏனெனில் சனத்தொகை வளர்ச்சிக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையில் ஒரு சமநிலை காணப்படுமாயின் அது எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்த மாட்டாது. மாறாக சனத்தொகை வளர்ச்சி அதிகமாகவும் பொருளாதார வளர்ச்சி குறைவாகவும் காணப்பட்டால் சமநிலை பாதிக்கப்பட்டு பல்வேறு விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

---

உசாத்துணை நூல்கள்.


1· மத்திய வங்கி ஆண்டறிக்கை 1991
2. பொருளியல் நோக்கு
3. இராஜாங்க அமைச்சின் சனத்தொகைச் சாரம்
4. இலங்கைப் பொருளாதாரம்.
5. மத்திய வங்கி ஆண்டறிக்கை மீளாய்வு-1987


## 15 இலட்சம் வீடமைப்புத் திட்டம்

புதிய வீடுகளின் கட்டிடவாக்கம், தற்போதுள்ள வீடுகளைத் தரமுயர்த்தல், வறியோரின் புகலிட நிலமைகளை முன்னேற்றுதல் என்பவற்றிற்கு கடன்களையும், கொடைகளையும் வழங்குவதன் மூலம் 15 இலட்சம் குடும்பங்களுக்கு உதவும் நோக்குடன் 1990ல் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டம் இதுவாகும். 1990ம் ஆண்டிலிருந்து 6 ஆண்டுகளுக்கும் கூடுதலான காலப்பகுதியைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான மொத்த ஒதுக்குத்தொகை 680 லட்சமாக காணப்படுகின்றது. 11 வீடமைப்புத்துணை நிகழ்ச்சித் திட்டங்களை இது உள்ளடக்கியுள்ளது.

# வர்த்தக வங்கிகளின் நடைமுறைகள்

மு. அனந்தகிருஷ்ணன்
ஆண்டு - 13 வர்த்தகப்பிரிவு

பணத்தை பாதுகாப்பாக வைக்க விரும்புவோரையும், பணம் தேவைப்படுவோரையும் தொடர்பு படுத்தி வைக்கும் நடுவர் அமைப்பே நிதிநிறுவனம் ஆகும். இத்தகைய நிதிநிறுவனங்களில் முக்கியமான ஒரு அமைப்பே வர்த்தக வங்கி ஆகும். பணத்தைப் பாதுகாப்பாக வைக்க அல்லது சேமிக்க விரும்புவோரிடமிருந்து வைப்புக்களைத்திரட்டி அதைப் பணம் தேவைப்படுவோருக்கு வட்டியுடன் கடன் வழங்கும் அமைப்பே வர்த்தக வங்கி ஆகும். இவ் வர்த்த வங்கிகளினால் முதன்மைப் பணிகள், துணைப் பணிகள் என இரண்டு முக்கிய பணிகள் ஆற்றப்படுகின்றன.

இவற்றில் முதன்மைப் பணிகள் என்பது எல்லா வர்த்தக வங்கிகளாலும் கட்டாயமாக ஆற்ற வேண்டிய பணிகள் ஆகும்.

i) பொது மக்களிடம் இருந்து வைப்புக்களை ஏற்றல்

ii) வைப்புக்களைப் பணமாகக்கேட்டவுடன் மாற்றிக் கொடுத்தல்,

iii) கடன் வழங்குதல் அதாவது கடனாக்கத்தை மேற்கொள்ளல், என்பனவாகும்.

எனினும் துணைப்பணிகள் என்பது சகல வர்த்தக வங்கிகளாலும், ஆற்றப்பட வேண்டியன அல்ல. வங்கிகளின் வளர்ச்சித் தன்மை, அபிவிருத்தி தன்மைக்கேற்ப விரும்பிய வங்கிகளால் மட்டும் ஆற்றப்படுகின்ற பணிகளைக் குறிக்கும். அவை:

i) வாடிக்கையாளரது முகவராகத் தொழிற்படல்.

ii) நகை அடைவு பிடித்தல்.

iii) வாடிக்கையாளர் சார்பில் வருமானங்களைத் திரட்டல்.

iv) வாடிக்கையாளர் சார்பில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.

v) வாடிக்கையாளர் சார்பில் நீதிமன்றத்தில் வழக்காடுதல். போன்றனவாகும்.

## வர்த்தக வங்கிகளால் ஏற்கப்படும் வைப்புக்கள்

வர்த்தக வங்கிகள் தமது சொந்தப் பணத்தில் இயங்குகின்ற அமைப்பு அல்ல. இவை தமது செயற்பாட்டுக்குத் தேவையான நிதியை வைப்புக்களைத் திரட்டுவதன் மூலமே பெற்றுக்கொள்கின்றன. இதற்கேற்ப வர்த்தக வங்கிகள் மூன்று வைப்புக்களை அல்லது கணக்குகளை ஏற்கின்றன. அவை சேமிப்பு வைப்பு, நிலையான வைப்பு நடைமுறை வைப்பு ஆகிய 3 வைப்புக்களை வர்த்தக வங்கிகள் ஏற்கின்றன.

## நடைமுறைக் கணக்கு
## நடைமுறை வைப்பு
## (Current Account)

வர்த்தக வங்கிகளினால் மட்டும் ஏற்கப்படும் முதன்மையான கணக்கே நடைமுறைக் கணக்காகும். முதல் நட்டம் இன்றியும், காலதாமதம் இன்றியும், வைப்பில் இருந்து பணத்தை மீளப்பெற்றுக் கூடிய இக்கணக்கிற்குவங்கிவட்டி வழங்குவதில்லை, மாறாக வங்கிச்சேவைக்கட்டணத்தையே

(Bank Charges) அறவிடுகின்றது. கேட்ட உடன் பணம் தரக்கூடிய நடைமுறையை இக் கணக்கு கொண்டிருப்பதால் இது கேள்விவைப்பு என அழைக்கப்படுகின்றது. அத்துடன் இந் நடைமுறைக் கணக்கிற் கெதிராகவே காசோலை வரைய முடிவதுடன் இதனூடாகவே வங்கி மேலதிகப் பற்று (Bank Over Draft) என்ற குறுங் காலக் கடனையும் பெறமுடியும். இவ்வாறான நடைமுறைகளினாலேயே வர்த்தக வங்கி ஏனய வங்கிகளில் இருந்து வேறு படுகின்றது. மேலும் இத்தகைய நடைமுறை வைப்புக்கு ஏனைய வைப்புக்களிலும் பார்க்க ஒதுக்குவீதம் உயர்வாகவும் காணப்படுகின்றது. அண்மை ஆண்டுகளில் இவ் வீதம் 10 வீதம் - 40 வீதம் வரை காணப்படுகின்றது.

வழமையிலே நடைமுறைக்கணக்கு ஒன்றினை ஆரம்பிக்கும் ஒருவர் பின்வரும் தகுதியை கொண்டிருத்தல் வேண்டும்.

1. இக்கணக்கினை ஆரம்பிப்பவர் 18 வயதினை அடைந்திருத்தல் வேண்டும்.
2. குறித்த நபர் எழுதப் படிக்கத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.
3. குறித்த நபர் சுயநினைவுடையவராக இருத்தல் வேண்டும்.
4. குறித்த நபர் அதே வங்கியின் இன்னொரு வாடிக்கையாளராலோ அல்லது முகாமையாளராலோ ஊழியராலோ அறிமுகமானவராக இருத்தல்.

இந் நடைமுறைக்கணக்கானது அது ஆரம்பிக்கப்படும் தேவைக்கேற்ப பல பெயர்களால் அழைக்கப்படும்.

(i) தனிநபர் வங்கி நடைமுறைக்கணக்கு
(ii) பங்குடைமைக்கான வங்கி நடைமுறைக்கணக்கு
(iii) கூட்டான வங்கி நடைமுறைக் கணக்கு
(iv) வரையறுக்கப்பட்ட கம்பெனிகளுக்கான வங்கி நடைமுறைக்கணக்கு
(v) பொறுப்பாண்மைக் கணக்கு (இது தர்மகர்த்தா சபைகள், சமய, சமூக நிறுவனங்களால் ஆரம்பிக்கப்படும் கணக்காகும்.)
(vi) சங்கங்கள் கழகங்களுக்கான வங்கி நடைமுறைக்கணக்கு. போன்ற 6 வைப்புக்களையும் நடைமுறை வைப்பு உள்ளடக்கும்.

## வங்கி மேலதிகப் பற்று (Bank Overdraft)

வர்த்தக வங்கியில் நடைமுறைக் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளரால் பெற்றுக்கொள்ளக்கூடிய குறுங்காலக் கடனே வங்கிமேலதிகப்பற்றாகும். வங்கியின் நன்மதிப்பைப் பெற்ற ஒரு வாடிக்கையாளர் வங்கியின் அனுமதி பெற்று தனது நடைமுறைக்கணக்கில் உள்ள நிலுவையைக் காட்டிலும் மேலதிகமான தொகையினைப் பற்றிக் கொள்ளல், அல்லது மேலதிகமான தொகைக்கு காசோலை வரைதல் வங்கி மேலதிகப்பற்று எனப்படும். இவ் வங்கி மேலதிகப் பற்றானது அது பெறப்படும் காலத்திக்கேற்ப தற்காலிக வங்கி மேலதிகப்பற்று, நிரந்தர வங்கி மேலதிகப்பற்று என இருவகைப்படும். இதில் தற்காலிக வங்கி மேலதிகப்பற்றானது ஒரு மாதத்திற்கு உட்பட்ட காலத்தைக் கொண்ட வங்கி மேலதிகப் பற்றையும், நிரந்தர வங்கி மேலதிகப்பற்று என்பது ஒரு வருடத்திற்கு உட்பட்டகாலத்தைக் கொண்ட வங்கிமேலதிகப் பற்றையும் குறிக்கும்.

## வங்கிக் கூற்று (Bank Statement)

வர்த்தக வங்கியில் நடைமுறைக் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர் அல்லது நிறுவனம் வங்கியுடன் நடாத்திய கொடுக்கல், வாங்கல் தொடர்பாக வங்கியினால் வாடிக்கையாளருக்கு மாதாமாதம் அனுப்பப்படும் ஒரு கூற்றே வங்கிக்கூற்று ஆகும். இதில் மாதாந்தம் வங்கி மேற்

கொண்ட கொடுக்கல் வாங்கல் வெளிப் படுத்தப்படுவதுடன், வாடிக்கையாளர்கணக் கின் இறுதி நிலுவையும் வெளிப்படுத் தப்படும். இவ்வங்கிக்கூற்று மூலம் வழுக் கள், தவறுகளை கண்டுபிடிக்க முடிவது டன் மோசடிகள் இடம்பெறுவதையும் இல குவில் கண்டுபிடிக்க வங்கிக்கூற்று வகை செய்யும்.

## நிலைக் கட்டளை (Standing Order)

வாடிக்கையாளரது முகவர்களாக தொழிற்படும் வழக்கத்தை வர்த்தக வங்கி கள் கொண்டுள்ளன. அதற்கமைய வாடிக் கையாளர் தனது சார்பில் வருமானங் களைத் திரட்டும்படியும், கொடுப்பனவு களை மேற்கொள்ளும் படியும் வர்த்தக வங்கியை கேட்டுக்கொள்ள முடியும். அந்த வகையில் வாடிக்கையாளரால் வர்த்தக வங்கிக்கு விடப்படும் ஒரு பணிப்புரையே நிலைக்கட்டளை ஆகும்.

## காசோலை (Cheque)

வர்த்தக வங்கியுடன் மட்டுமே தொடர் புடைய நடைமுறைக் கணக்கு என்பதில் இட்டுள்ள பணத்தை எதுவித முன்னறிவித்தலும் இன்றி மீளப்பெறு வதற்கு வர்த்தக வங்கியால் வழங்கப்படு கின்ற ஓர் அச்சிட்ட பத்திரமே காசோலை ஆகும்.

இலங்கையில் வர்த்தக வங்கிகளால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டதே ''காந்தமையினால் இலக்கங்கள் பொறிக் கப்பட்ட காசோலை'' [MICR] ஆகும். இக்காசோலை அறிமுகப்படுத்தப்பட்ட தன் நோக்கம் தற்கால நவீன உலகிற் கேற்ப கணனிகளின் பயன்பாடுகளும் அதிகரித்து வருவதனால் கணனிகளைப் பயன்படுத்திக் காசோலைக் கொடுக்கல் வாங்கலைத் தீர்ப்பதற்கும் அதன் மூலம் தீர்க்கும் பணியில் ஏற்படக்கூடிய தவறு களையும், காலதாமதங்களையும் முற்றாக தவிர்த்து சுலபமாக தீர்க்கும் தொழிற் பாட்டை மேற்கொள்வதற்குமாக இக் காசோலை அறிமுகப்படுத்கப்பட்டுள்ளது.

புதிய காந்த மையினால் இலக்கங்கள் பொறிக்கப்பட்ட காசோலை [MICR] அறி முகப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து இலங்கை மத்திய வங்கியால் 1987ம் ஆண் டில் இருந்து முன்னைய தீர்வையகத்திற்கு பதிலாக தற்போது ' இலங்கை தன்னியக்க தீர்ப்பனவு நிலையம்'' ''SLACH'' 'சிலாக்'' [Sri Lanka Automated Clearing House] என்ற ஒன்றை அறிமுகப்படுத்தி உள்ளது. இங்கு கணனிகளைப் பயன்படுத்தி காசோலைக் கொடுக்கல் வாங்கலை மேற் கொள்வதனால் இங்கு ஆட்களுக்குப்பதில் இயந்திரங்களே தீர்க்கும் தொழிற்பாட்டை மேற்கொள்வதை அவதானிக்க முடியும். இதனால் காசோலை கொடுக்கல் வாங் கலை விரைவாகவும் தவறுகள் இன்றியும் மேற்கொள்ளவும். தன்னியக்க ரெலர் இயந்திரம் [ATM] மூலம் பணக் கொடுப் பனவை மேற்கொள்ளவும், ஊழியர் எண் ணிக்கையைக் குறைக்கவும் ''சிலாக்'' [SLACH] வகைசெய்யும்.

வர்த்தக வங்கிகள் இன்று பணக் கொடுப்பனவை இலகுவாக்குவதற்கு வசதி யாக ''தன்னியக்க ரெலர் இயந்திரம் [ATM Automated Talcr Machine] என்ற ஒன்றை அறிமுகப்படுத்தி உள்ளது. ஒவ் வொரு வர்த்தக வங்கியின் முன்னாலும் பொருத்தப்படும் இவ்வியந்திர மூலம் எந் நேரமும் இலகுவாக பணக் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ள முடியும்.

காசோலையின் பாதுகாப்பு கருதி வர்த் தக வங்கிகளால் கொண்டு வரப்பட்ட நடைமுறையே அச்சிட்ட குறுக்குக் கோடு களைக் கொண்ட காசோலை வெளியிடு தல் ஆகும். அதாவது காசோலையின் முன் புறத்தில் இரண்டு சமாந்தரக் கோடுகளை அச்சிட்டு வழங்குகின்றன. இதன் மூலம் குறுக்குக்கோடுகளை திராவகம் கொண்டு அழிக்கும் மோசடியைத் தவிர்த்து எல்லாக் காசோலையும் உச்சப் பாதுகாப்பு உடைய தாக இருப்பதை இது உறுதி செய்கின்றது.

## வர்த்தக வங்கிகளின் அண்மைக்கால நடைமுறைகள்

இலங்கையில் உள்ள வர்த்தக வங்கிகள் அண்மை ஆண்டுகளில் பல புதிய நடைமுறைகளைச் செயற்படுத்தி வருகின்றது.

### காசோலை உத்தரவாத அட்டை (Cheque Guranteed Card)

காசோலைக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் இலங்கை வங்கியினால் 1989ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டதே காசோலை உத்தரவாத அட்டை ஆகும். வங்கியினால் தெரிவுசெய்யப்பட்ட நம்பிக்கை கொண்ட வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் இவ் அட்டையைக் காண்பிப்பதன் மூலம் குறித்த வாடிக்கையாளர் தனது காசோலையை எவரையும் ஏற்றுக்கொள்ளச் செய்யலாம். இதனால் விரும்பிய இடத்தில், விரும்பிய நேரத்தில் காசோலை மூலம் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்ய காசோலை உத்தரவாத அட்டை வகைசெய்யும்.

### பிளைக் லைற் முறைமை (Black Light System)

காசோலையில் கையெழுத்து மோசடி இடம்பெறாது தடுப்பதற்காக வர்த்தக வங்கிகளால் அறிமுகப்படுபட்ட திட்டமே "பிளைக்லைற் முறைமை" ஆகும். இங்கு ஒளிக்கற்றைகள் மூலம் காசோலையில் உள்ள வாடிக்கையாளனது கையொப்பமும் மாதிரிக் கையொப்பமும் சரிபார்க்கப்படும். இதன்படி காசோலையில் உள்ள கையொப்பமும் வாடிக்கையாளரின் மாதிரிக்கையொப்பமும் வேறுபடுமிடத்து காசோலையில் மோசடி இடம் பெறுவதனை கண்டுபிடிக்க இது உதவுவதால் இன்று பெருமளவில் வங்கிகளால் பயன்படுவத்தப்படுவதாக "பிளைக் லைற் முறைமை" காணப்படுகின்றது.

### கடன் அட்டை (CREDIT CARD)

வர்த்தக வங்கியுடன் தொடர்புடைய மற்றுமோர் நடைமுறையே கடன்அட்டை ஆகும், நிறுவனங்களில் கடனுக்கு பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்வதற்கு வசதியாக 1989 ஆண்டில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட ஒருஉத்தரவாத அட்டைகடன் அட்டை ஆகும், இதனை இலங்கைவங்கி, மக்கள்வங்கி' சம்பத்வங்கி போன்ற வர்த்தக வங்கிகளும், த. பினான்ஸ் கம்பனி லிமிரட் (The Finance Company Limited) போன்ற நிதி நிறுவனங்களும் இதனை வழங்குகின்றன. இக் கடன்அட்டையைப் பெற்றுக்கொண்ட ஒருவர் அதனை அங்கீகரிக்கப்பட்ட கடைகளில் காண்பித்து கடனுக்கு பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்யமுடியும். பின் மாத முடிவில் கொள்வனவுகள் பட்டியல் படுத்தப்பட்டு கடைகளால் வங்கிக்கு அனுப்பிவைக்கப்பட்டதும் அதற்கான பணத்தை வங்கியே கடைகளில் செலுத்தி விடும், இதற்கென வங்கி ஒரு தொகை தரகையும் கடைகளில் இருந்து அறிவிட்டுக்கொள்ளும், பின் குறிப்பிட்ட காலத்திற்கு முன் வாடிக்கையாளர்வங்கிக்கு பணத்தை செலுத்தி விடுதல் வேண்டும், இலங்கையில் பிரபலம் பெற்றுவரும் இக்கடன் அட்டையானது, "சீபாங் அட்டை" "மாஸ்ரர் அட்டை" "மக்கள் கடன் அட்டை" என்ற பெயர்களுடன் நடைமுறைக்கு வந்துள்ளன.

சீபாங் அட்டையானது "விசா இன்ரர் நாஷனல்(Visa International) என்னும் சர்வசேத நிறுவனத்தால் 162 நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட "விசா அட்டை" (visa Card) என்பதனையே இலங்கைவங்கி "சீபாங் அட்டை" (Ceylon Bank Card) என வழங்கி வருகிறது. இதற்கு 250/-வை கட்டணமாக செலுத்துவதன் மூலம் இலங்கை வங்கியில் இதனைப் பெற்றுக் கொள்ள முடியும்,

மாஸ்ரர் அட்டை என்பது ''மாஸ்ரர் இன்ரர் நாஷனல்''எனும் சர்வதேச நிறுவனத்தால் 170 நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டதையே சம்பத் வழங்கி மாஸ்ரர் அட்டை(Master Card)என வழங்கி வருகின்றது. சம்பத் வங்கியில் 600/–ரூபாவை கட்டணமாக செலுத்தி இவ் அட்டையைப் பெற்றுகொள்ள முடியும்.

மக்கள் கடன் அட்டை என்பது இலங்கை மக்கள் வங்கியால் 1990ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட கடனட்டை ஆகும். இது எந்நேரமும் தன்னியக்க டெலர் இயந்திரம் மூலம் காசைப்பெற்றுக் கொள்வதற்கு வசதியளிப்பதுடன், இது ஒரு காசோலை உத்தரவாத அட்டையாகவும் தொழிற்படுகின்றது.

## இலங்கை வங்கியின் சீபாங் அலகுப்பொறுப்பாட்சிக் கூறு நம்பிக்கைப் பொறுப்பு (CEY BANK UNIT TRUST)

அலகுப் பொறுப்பாட்சி என்பது சிறு சிறு தொகையாக பங்குகளை வாங்கவிரும்புவோரிடம் இருந்து விண்ணப் ங்களை திரட்டி பெருந்தொகையான பங்குகளுக்கு ஒரே முறையில் விண்ணப்பித்து பங்குகளை வாங்கி அவற்றை சிறு அளவில் விண்ணப்பித்தோருக்கு பகிர்ந்து கொடுக்கும் நிறுவனமே அலகுப் பொறுப்பாட்சி ஆகும். இங்கு பங்குகள் பகிர்ந்து வழங்கப்படும் ஆனாலும். பங்குகளின் உரிமை மாற்றிக்கொடுக்கப்படுவதில்லை. இதனால் பங்கிலாபம் திரட்டும் அதிகாரமும் அலகுப் பொறுப்பாட்சிக்கே இருக்கும்.

இலங்கை வங்கி பங்குகளில் முதலீடு செய்வோருக்கு வசதியாக 25-03-1992 ல் ஆரம்பித்ததே ''சீபாங் நம்பிக்கைப் பொறுப்பு''ஆகும். இலங்கை வங்கியின் முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பில் இலங்கை வங்கி'' ''கார்சன் அன்ட் கப பர்பச் நிவவனம்'' ''இலங்கை வியாபாரிகள் வங்கி'' ''இந்தியன் யூனிட் டிறஷ்ட் நிறுவனம்'' கொங்கொங் வார்ட்லி முதலீட்டு நிறுவனம் ஆகிய ஐந்து அமைப்புக்களும் கூட்டுச்சேர்ந்துள்ளன. இவை இந் நிறுவனத்துக்கான மூலதனத்தில் முறையே 20வீதம்,22வீதம்,16வீதம்,20 வீதம்,22வீதம்என ஒத்துதவல் செய்துள்ளன

சீபாங் அலகுப் பொறுப்பாட்சியானது ஏனைய அமைப்புக்களைப்போன்றே சிறு நடுத்தர முதலீட்டாளருக்கு உதவும்நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு முதலீடு செய்ய விரும்புவோர் ரூபா1000/-ஐ ஆகக்குறைந்த முதலீடாக மேற்கொள்ள முடியும், இந்த முதலீடுகளை இலங்கை வங்கியின் 288 கிளைகளிலும், கார்சன் அன்ட்கப்பர்பச் நிறுவனத்திலும், இலங்கை வியாபார வங்கியிலும், மேற்கொள்ள முடியும். இதனால் ஏனைய அலகுப் பொறுப்பாட்சிகளைப் போலல்லாது கிராமிய மக்களின் முதலீடுகளைத் திரட்டுவதில் சீபாங் அலகுப் பொறுப்பாட்சி அக்கறை காட்டும், இதனூடாகத்திரட்டப்படும் நிதி புதியகம்பனிகளில் முதலீடு செய்யப்படும்; என்பதால், இலங்கையின் நிதிச்சந்தையின் அபிவிருத்திக்கு இது முக்கிய பங்கினை ஆற்றமுடியும் என நம்பப்படுகின்றது. இத்தகைய அலகுப் பொறுப்பாட்சியாக ''தேசிய உரிமை நிதியம்'' (N.E.F) என்ற பெயரில் ஹற்றன் நாஷனல் வங்கியும் அறிமுகப்படுத்தியுள்ளது.

## வர்த்தக வங்கிகளின் புதிய வங்கி அலகுகள்,

வர்த்தக வங்கிகள் அண்மைக்காலங்களில் பல புதிய திட்டங்களையும்,கணக்குகளையும், ஆரம்பித்துள்ளன, அவற்றுள்:

## நாட்டில் வாதியாதோர் செலாவணிக்கணக்கு (NRFC) (Non Residents Foreign Currency)

இது 6 மாதங்களுக்கு குறையாமல் வெளிநாடுகளில் தங்கிஇருக்கும், இலங்கையர்களால் எமது நாட்டு வர்த்தக வங்கி

களில், அன்னியச் செலாவணி அடிப்படையில் ஆரம்பிக்கப்படும் கணக்கே இதுவாகும். இக்கணக்கில் அவரவர் நாட்டு செலாவணிகளில் வைப்புக்களை இடமுடிவதுடன் அதே செலாவணியிலேயே வட்டியும் ஒதுக்கப்படும். இதனை வெளிநாடுகளில் இருந்து அதே செலாவணிவடிவிலோ இலங்கை திரும்பினால், ரூபா பெறுமதியிலோ மீட்க முடியும்.

## இரகசிய இலக்கமிடப்பட்ட கணக்கு

கொழும்பைப் பன்னாட்டு நிதி நிலையமாக அபிவிருத்தி செய்யும் நோக்குடனான ஒரு நடவடிக்கையாக இரகசிய இலக்கமிடப்பட்ட கணக்குகளை செயற்படுத்துவதற்கு வர்த்தக வங்கிகள் அனுமதிக்கப்பட்டன. இதன் கீழ் வதிவற்ற இலங்கையர்களும், வெளிநாட்டவர்களும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாயண வடிவில் நடைமுறை, சேமிப்பு, தவணை வைப்புகளை ஆரம்பிக்க இது வகைசெய்யும். இதனால் இன்று 14 வங்கிகளுக்கு இரகசிய இலக்கமிடப்பட்ட கணக்குகளைத் திறபதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## வதிவோர் வெளிநாட்டு நாணயக்கணக்கு, (RFC) (Residence Foreign Currency)

ஏற்றுமதியாளரிடம் ஏற்றுமதி போட்டியை விருத்தி செய்யும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்டதே இக்கணக்காகும். இங்கு ஏற்றுமதியாளர்கள் தமக்கு தேவையான அன்னியச்செலாவணியை கடனாகப் பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இங்கு ஏற்றுமதியாளர்ககள் தமது ஏற்றுமதி உழைப்பு ஆண்டு அதிகரிப்பின் 5 சதவீதத்தினை இக் கணக்கில் வரவு வைத்தல் வேண்டும். அத்துடன் வதிவுள்ள தனிநபர்கள் ஆகக்குறைந்தது 500 அமெரிக்கடொலரை அல்லது அதற்கு சமமான குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களின் நிலுவையுடன் இக்கணக்கை ஆரம்பிக்கவும் செயற்படுத்தவும் முடியும்.

## அன்னியச் செலாவணி வங்கி அலகு (FCBU) Foreign Currency Banking unit

பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவிடம் அனுமதி பெற்று முதலீட்டினை பேற்கொண்டுள்ள வெளிநாட்டவரின் நன்மை கருதி ஆரம்பிக்கப்பட்ட தனியான வங்கிப்பிரிவே "FCBU" ஆகும் அதாவது வெளிநாட்டு செலாவணிகளிலேயே வைப்புக்களை செய்யவும். அதேசெலாவணியிலேயே கடன்களைப் பெறவும் என ஆரம்பிக்கப்பட்ட தனியான வங்கிப் பிரிவாக "FCBU' காணப்படும்.

## வர்த்தக வங்கிகளின் புதிய கடன் திட்டம்·

### 1 குழுக்கடன் வழங்கல் திட்டம் (Group Lending Scheme)

மக்கள் வங்கி 1991ல் சனசக்தி பெறும் மக்களின் நன்மை கருதி அறிமுகப்படுத்திய திட்டமே குழுக்கடன் வழங்கல் திட்டமாகும். இதை மக்கள் வங்கி சனசக்தி உரித்துரிமைப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்காக "சனசக்தி உரித்துரிமை பத்திரம் வைத்திருப்பவர்களுக்கான குழுக்கடன் வழங்கல் திட்டம்" என்ற பெயரில் ஒரு புதிய கடன் வழங்கல் திட்டமாக இதை அறிமுகப்படுத்தியுள்ளது· இதன் மூலம் சனசக்தி பெறுபவர்கள் கூட்டுறவு அடிப்படையில் ஒன்றாக இணைந்து முதலீட்டினை மேற்கொள்ள இத்திட்டம் வகை செய்கிறது.

### 2 சிறிய நடுத்தர அளவிலான கைத்தொழிற் கடன் SMI

உலக வங்கி, ஆசிய அபிவிருத்திவங்கி ஆகியவற்றின் உதவியுடன், 20 லட்சம் ரூபாவுக்கு குறைந்த மூலதனத்தைக்

கொண்டுள்ள, சிறு கைத்தொழில்களுக்கும் நடுத்தரக் கைத்தொழில்களுக்கும் கடன் வழங்கும் திட்டமாக இது உருவாக்கப்பட்டது. இது திட்டம் i, திட்டம் ii, திட்டம் iii, திட்டம் iv என நான்கு பிரிவாக வழங்கப்பட இருக்கின்றது. திட்டம் i இன்கீழ்1979-1982 காலப்பகுதியில் உருவாக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் ரூபா 2.86 லட்சம் கொண்ட கடனை உள்ளடக்கி 167 உத்தரவாதங்கள் வழங்கப்பட்டன. திட்டம் ii இன் கீழ் 1982—1989 காலப்பகுதியில், ரூபா 13920 இலட்சம் கொண்ட 2531 கடன்களுக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டது. 1988 யூலையில் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் iiiஇன் கீழ் 1991 இறுதியில் ரூ23730 இலட்சம் தொகை கொண்ட 3883 கடன்களுக்கு உத்தரவாத மளிக்கப்பட்டிருத்தது திட்டம் iv ற்கு 1991 நவம்பரில் நாணயச் சபை ஒப்புதல் அளித்தது. இத்திட்டம் இலங்கை அரசிற்கு பன்னாட்டு அபிவிருத்தி அமைப்புஆசிய அபிவிருத்திவங்கி, ஆகியவற்றினால் இணைந்து நிதியிடப்பட்ட 750 லட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர் பணக்கடனை கொண்டு, தேசிய அபிவிருத்தி வங்கியினால் மீள நிதியிடப்பட்ட நான்காவது திட்டமாக இது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

## நாடு முழுவதற்குமான சுய வேலை வாய்ப்பு கடன் வழங்கல் திட்டம்

## (All Island Self Employment Credit Scheme)

சுயவேலை வாய்ப்பு கடன் வழங்கும் திட்டமானது 1990 ஆண்டு ஏற்கனவே நான்கு மாவட்டங்களில் நடைமுறையில் இருந்த திட்டங்களை இணைப்பதன் மூலம் அமுலாக்கப்பட்டது. இதன்மூலம், சுய வேலை வாய்ப்பு நடவடிக்கைகளுக்கு மீள் நிதியீட்ட கடன் வழங்கப்பட்டது. தற்போது குறிப்பிடத்தக்க அளவு பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம் 1990 ஆவணி தொடக்கம், 1992 தைமாதம் வரைப்பட்ட காலத்தில் 82955 பேரிற்கு 770 மில்லியன் ரூபா கடனை வழங்கி உள்ளது.

> *தேசத்தின் வாலிபர்களிடத்தில் தான் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். சூது அறியாத இளம் வாலிபர்கள் விலையற்ற பொக்கிஷங்கள். கணநேரத்தில் தோன்றி மறையும் உணர்ச்சிகளுக்கும், சுகபோகம் என்ற தப்பிதமாக அழைக்கப்படும் காரியங்களுக்கும் அந்த பொக்கிஷங்கள் இரையாகித் தேய்ந்துவிடக்கூடாது.*
>
> — மகாத்மா காந்தியடிகள்

# பொருளியல் கேள்வி - நெகிழ்ச்சி மதிப்பீடு

ப. சிவநாதன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
பொருளியற்றுறை
யாழ். பல்கலைக்கழகம்

பொருளியலில் ஒரு மாறியில் ஏற்படும் மாற்றம் அதில் தங்கி மாறும் இன்னொரு மாறியில் எந்தளவு மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதைச் சதவீதத்தில் மதிப்பிடுவது நெகிழ்ச்சியென்று வரையறுக்கப்படும். உதாரணமாக ஒரு பொருளின் விலையில் ஒரு சதவீத மாற்றம் ஏற்படும் போது அது கேள்வித் தொகையிலும் நிரம்பல் தொகையிலும் எத்தனை சதவீத மாற்றத்தை ஏற்படுத்துகின்றது என்பதை நெகிழ்ச்சி மதிப்பீடு எமக்குத் தருகிறது. விலை மாற்றமடைவதனால் கேள்வி, நிரம்பல் தொகை மாறுவது போல கேள்வியையும், நிரம்பலையும் நிர்ணயிக்கும் காரணிகள் ஒவ்வொன்றிலும் ஏற்படும் மாற்றம் கேள்வி நிரம்பல் தொகைகளில் எந்தளவு சதவீத மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்பதை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நெகிழ்ச்சிகள், பல்வேறு ஆய்வுத் தேவைகளிற்காக கணிப்பிடப்படுகின்றன.

## கேள்வி நெகிழ்ச்சி

குறித்த பொருளின் விலை மாற்ற வீதத்திற்கும் தொகை மாற்ற வீதத்திற்கும் இடையில் தொடர்பினை அளவிட்டுக் கூறுவது மட்டுமே கேள்வி நெகிழ்ச்சியென்று ஆரம்பத்தில் மார்ஷல் என்ற பொருளியலாளரின் விளக்கம் அமைந்தது. பின்பு குறித்த பொருளின் விலை மாற்றம் போல, ஏனைய பதிலீட்டு நிரப்பிப் பொருட்களின் விலை மாற்றத்திற்கும் கேள்வி மாற்றத்திற்குமிடையிலான தொடர்பை அடிப்படையாகக் கொண்டு கேள்வியின் குறுக்கு நெகிழ்ச்சியும், வருமான மாற்றத்திற்கும் கேள்வித் தொகை மாற்றத்திற்குமிடையிலான தொடர்பைக் கொண்டு வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சியும் மதிப்பிடப்பட்டு வருகின்றன.

## கேள்வியின் விலை நெகிழ்ச்சி அளவீட்டு முறைகளும் விலை நெகிழ்ச்சி வகைகளும்:-

கேள்வியின் விலை நெகிழ்ச்சியை (1) புள்ளி முறையிலும் (2) வளைவு முறையிலும் (3) மொத்த செலவீட்டு முறையிலும் மதிப்பிடலாம். விலை நெகிழ்ச்சியை மதிப்பிடுபவர் சந்தை நிலைமைகளை அறிவதற்காக, அல்லது சந்தை பற்றி எதிர்வு கூறுவதற்காக, அல்லது விலை குறையும் போதும், கூடும் போதும் எந்தளவு விற்பனை செய்ய முடியும் அல்லது கொள்வனவு செய்ய முடியும் என்ற தகவல்களைப் பெறுவதற்காக மேற் குறிப்பிட்ட மூன்று மதிப்பீட்டு முறைகளில் ஏதாவதொன்றைப் பயன்படுத்தி கேள்வியின் விலை நெகிழ்ச்சியை மதிப்பிடுவதுண்டு.

## புள்ளி முறை நெகிழ்ச்சி மதிப்பீடு

புள்ளி முறை நெகிழ்ச்சி மதிப்பீடு கேள்வியின் புள்ளி நெகிழ்ச்சி என்று அழைக்கப்படுவதுமுண்டு. கேள்வியை நிர்ணயிக்கும் காரணிகளில் விலை மாற்றமடையும் போது ஏனையவை மாற்றமடையவில்லை என்ற எடுகோளை அடிப்படையாகக் கொண்டு இந்நெகிழ்ச்சி மதிப்

பிடப்படுகின்றது. அதாவது மிக மிகக் குறைந்த விலை மாற்றத்திற்கும் அதனால் ஏற்படும் தொகை மாற்றத்திற்கும் இடையிலான தொடர்பை மதிப்பிடுவதே புள்ளி நெகிழ்ச்சியாகும். இதனை மதிப்பிடுவதற்கு பின்வரும் மதிப்பீட்டு முறைகள் பின்பற்றப்படுகின்றன.

முறை I

விலையில் ஏற்படும் சதவீத மாற்றத்தையும் அதனால் தொகையில் ஏற்படும் சதவீத மாற்றத்தையும் அடிப்படையாகக் கொண்டு விலை நெகிழ்ச்சி மதிப்பிடப்படுகின்றது. இங்கு விலை மாறிய பின்னரே தொகை மாறுவதால் விலை சாராத மாறியாகவும் தொகை சார்ந்த மாறியாகவும் உள்ளது.

இம்மதிப்பீட்டில் குறிப்பிட்ட ஒரு பொருளின் விலை மாற்றமடைவதை அளவிடுவதே விலை மாற்றம் எனப்படும். அம்மாற்றம் $\triangle P$ (குறிப்பிட்ட விலை மாற்றமடைதல்) என்று குறிப்பிடப்படும் மாற்றமடைந்த விலை குறித்த ஆரம்ப விலையில் என்ன சதவீதமாக மாறியுள்ளது என்பதை $\frac{\triangle P}{p} . 100$ (விலை மாற்றம் 100% குறித்த ஆரம்ப விலை) என மதிப்பிடலாம். இதே விதமாக குறிப்பிட்ட ஒரு பொருளின் தொகை மாற்றமடைவதை தொகை மாற்றம் எனலாம். அதனை $\triangle Q$ (குறித்த தொகை - மாற்றமடைந்த தொகை) என்பர். மாற்றமடைந்த தொகை குறிப்பிட்ட ஆரம்பத் தொகையில் என்ன சதவீதமாக மாறியுள்ளது என்பதை $\frac{\triangle Q}{Q} . 100$ (தொகை மாற்றம் 100% குறித்த ஆரம்பத் தொகை) என மதிப்பிடலாம்.

விலை மாற்றமடைந்த பின்னரே தொகை மாற்றமடைகின்றது. எனவே ஆரம்பத்தில் மாற்றமடைந்ததன் சதவீதமாகவே பின்னர் மாற்றமடைந்ததை மதிப்பிட்டு நெகிழ்ச்சியின் அளவை அறிந்து கொள்ளலாம். ஆரம்பத்தில் மாற்றமடைவது சாராத மாறியே. அதன் மாற்ற வீதமாகவே பின்னர் மாற்றமடைந்த சார்ந்த மாறியை அடிப்படையாகக் கொண்டு நெகிழ்ச்சி மதிப்பிடப்படுதல் வேண்டும். அதாவது ஆரம்பத்தில் மாற்றமடைந்த விலை மாற்ற வீதத்தில் $\left\{ \frac{\triangle P}{P} . 100 \right\}$ சதவீதமாக பின்னர் மாற்றமடைந்த தொகை மாற்ற வீதத்தை $\left\{ \frac{\triangle Q}{Q} . 100 \right\}$ கருத்தில் கொண்டு நெகிழ்ச்சிக் குணகம் மதிப்பிடப்படுதல் வேண்டும். இதனால் தான் நெகிழ்ச்சிச் சமன்பாடு பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

$$\text{விலை நெகிழ்ச்சி (E)} = \frac{\text{தொகை மாற்ற வீதம்}}{\text{விலை மாற்ற வீதம்}} = \frac{\frac{\triangle Q}{Q} . 100}{\frac{\triangle P}{P} . 100}$$

(குறிப்பு:- கேள்விக்கோடு மேலிருந்து கீழாகச் சரிந்து வருவதனால் விலை நெகிழ்ச்சிக் குணகம் எப்போதும் எதிர்கணியமாகவே இருக்கும். நெகிழ்ச்சி மதிப்பீட்டில் குறிப்பிட்ட ஒரு விலை மட்டத்தில் கேள்வி நெகிழ்ச்சி $E = -5$ எனவும் இன்னொரு விலை மட்டத்தில் $E = -0 \cdot 25$ எனவும் இருக்குமாயின் நெகிழ்ச்சி கூடியது என பொருளியலில் நாம் கருதுவது $E = -5$ என்பதையே. கணித முறையில் இதனை சரி செய்வதற்காக விலை நெகிழ்ச்சிக் குணகம் எல்லாவற்றையும் நேரானது எனக் கருதுதல் வேண்டும் என்ற விதி உண்டு. இதற்காக கணிதத்தில் $| E | = | -5 | = 5$ என எழுதுவதுண்டு.)

இச்சமன்பாட்டினடிப்படையில் விலை மாற்ற வீதத்தை தொகை மாற்ற வீதத்துடன் ஒப்பிடுமிடத்து விலைமாற்ற வீதம் கூடியும், குறைந்தும், சமமாகவும், சில சந்தர்ப்பங்களில் இல்லாமலும் இருக்கும் போது நெகிழ்ச்சிக் குணகம் பூச்சியத்திற்கும் முடிவற்ற பெறுமானத்திற்கும் இடைப்பட்டதாக இருக்கின்றது. இவ்வாறு பெறப்படும் நெகிழ்ச்சிக் குணகத்தை 5 பிரிவாக வகைப்படுத்தலாம். அவையாவன:-

1) $\frac{\triangle Q}{Q} > \frac{\triangle P}{P} = |E| > 1$ ஒன்றிற்குக் கூடிய நெகிழ்ச்சி.

2) $\frac{\triangle Q}{Q} = \frac{\triangle P}{P} = |E| = 1$ ஒன்றிற்குச் சமனான நெகிழ்ச்சி.


3) $\frac{\triangle Q}{Q} < \frac{\triangle P}{P} = |E| < 1$ ஒன்றிற்குக் குறைந்த நெகிழ்ச்சி.

4) $\frac{\triangle Q}{Q} < \frac{\triangle P}{P} = |E| = 0$ பூச்சிய நெகிழ்ச்சி.

5) $\frac{\triangle Q}{Q} > \frac{O}{P} = |E| = \infty$ முடிவற்ற அல்லது பூரண நெகிழ்ச்சி

என்று வரையறை செய்யப்படுகின்றது. இவ்வகைகள் ஒவ்வொன்றையும் பெருமளவில் பிரதிபலிக்கக் கூடிய வகையில் கேள்விக்கோடுகளை வேறுபட்ட சரிவுகளில் வரைவதுமுண்டு. இதனை பின்வரும் வரைபு காட்டுகின்றது.

இவ்வரைபடத்தில் $D_1$ பூச்சிய நெகிழ்ச்சிக் கேள்விச் கோடாகவும், $D_2$ ஒன்றிற்குக் குறைந்த கேள்வி நெகிழ்ச்சியுள்ள கேள்விக் கோடாகவும், $D_3$ அலகு நெகிழ்ச்சி அல்லது ஒன்றிற்குச் சமமான கேள்வி வளை கோடாகவும், $D_4$ ஒன்றிற்குக் கூடிய கேள்வி நெகிழ்ச்சிக் கோடாகவும். $D_5$ பூரண அல்லது முடிவற்ற கேள்வி நெகிழ்ச்சிக் கோடாகவும் காட்டப்படுவதுண்டு.




## முறை 2


பொதுவாக மேலிருந்து கீழாகச் சரிந்து வரும் கேள்விக்கோடு விலை என்ற சாராத மாறியை குத்தச்சிலும் கேள்வித் தொகை என்ற சார்ந்த மாறியை கிடை அச்சிலும் கொண்ட வரைபில் வரையப்படுகின்றது. இதனால் கணிதத்தில் கேள்விக் கோட்டின் சரிவு தலைகீழ் படுத்தப்பட்ட சரிவாக இருக்கும் என கணிப்பிடப்படுகின்றது. அதாவது $\frac{\triangle P}{\triangle Q}$

என்பது $1/\frac{\triangle P}{\triangle Q}$ என எழுதப்படும் போது தலைகீழ் படுத்தப்பட்ட கேள்விக்கோட்டின் சரிவு என மாற்றமடைகின்றது. இதனையே கேள்விக்கோட்டின் சரிவு மதிப்பீட்டில் பயன்படுத்தி வருகின்றனர். கணிதத்தில் இச்சரிவு மதிப்பீடு $\triangle Q/\triangle P$ என்பது - எல்லைத் தொழிற்பாடு என்று அழைக்கப்படுகின்றது. குறித்த ஒரு கேள்விப் புள்ளியில் விலைக்கும் தொகைக்குமிடையிலான தொடர்பை ஆரம்பப் புள்ளியுடன் தொடர்புபடுத்தி அதற்கான கோணத்தினை குறிப்பிடும் செய்முறையாக, விலை தொகைக்கிடையில் சராசரித் தொழிற்பாட்டை மதிப்பிடுகின்றனர். அதாவது $\frac{OQ}{OP}$ என்பது சராசரித் தொழிற்பாடாகும். மேற்குறித்த எல்லைத் தொழிற்பாடு, சராசரித் தொழிற்பாடு இரண்டையும் பயன்படுத்தி கேள்வியின் புள்ளி நெகிழ்ச்சி மதிப்பிடப்படுகின்றது.

$$\text{கேள்வியின் புள்ளி நெகிழ்ச்சி} = \frac{\text{எல்லைத் தொழிற்பாடு}}{\text{சராசரித் தொழிற்பாடு}}$$

பின்வரும் வரைபில் புள்ளி நெகிழ்ச்சியானது எல்லைத் தொழிற்பாட்டை சராசரித் தொழிற்பாட்டால் வகுத்து மதிப்பிடப்பட்டுள்ளது. இங்கு கேள்விக் கோட்டின் சரிவு, $\frac{Q-C}{G-Q} = \frac{\triangle Q}{\triangle P}$ என்பதன் எல்லைத் தொழிற்பாடாகும்.

$$\text{சராசரித் தொழிற்பாடு} = \frac{OQ}{OP} = \frac{OQ}{G-Q}$$




எனவே G புள்ளியில் நெகிழ்ச்சி $|E| = \text{எல்லைத் தொழிற்பாடு}\left\{\frac{1}{\text{சராசரித் தொழிற்பாடு}}\right\}$

$$= \frac{\triangle Q}{\triangle P}\Big/\frac{OQ}{OP} = \frac{\triangle Q}{\triangle P}\Big/\frac{Q}{P}.$$

$$= \frac{QC}{QG}\Big/\frac{OQ}{QG}$$

$$= \frac{QC}{QG}\cdot\frac{QG}{OQ} = \frac{QC}{OQ}.$$

இவ்விதமாக R,H,M,C புள்ளிகளில் நெகிழ்ச்சியை மதிப்பிடலாம். இங்கு

R புள்ளியில் $\frac{OC}{O} = \infty$ நெகிழ்ச்சி என்றும்,

H புள்ளியில் $\frac{Q_1C}{OQ_1} = E>1$ நெகிழ்ச்சி என்றும்,

M புள்ளியில் $\frac{Q_2C}{OQ_2} = E<1$ நெகிழ்ச்சி என்றும்,

C புள்ளியில் $\frac{O}{OC} = E=O$ நெகிழ்ச்சி என்றும் கொள்ளப்படும்.

மேற்குறித்த நெகிழ்ச்சிகளை தொகுத்து நோக்கும் போது நேரான ஒரு கேள்விக் கோட்டில் பூச்சிய நெகிழ்ச்சியிலிருந்து முடிவற்ற நெகிழ்ச்சி வரையான குணங்களைப் பெற முடிகின்றது. நேரான கேள்விச் கோட்டின் சரிவு மாறாத போதும் (அதாவது எல்லைத் தொழிற்பாடு மாறாத நிலையில்) அதன் பல்வேறு பட்ட விலை, தொகை மட்டங்கள் நெகிழ்ச்சியின் அளவை மாற்றியுள்ளன என்பதை அறிய முடிகின்றது.

(குறிப்பு: நேரான கேள்விக்கோட்டின் சமன்பாடு Q = 50-5p எனின் இங்கு எல்லைத்தொழிற்பாடு

$\frac{\triangle Q}{\triangle P} = -5$, சராசரித் தொழிற்பாடு $\frac{Q}{P} = \frac{50\text{-}5p}{P}$ எனவே நெகிழ்ச்சி மதிப்பீடு

$= \frac{\text{எல்லைத் தொழிற்பாடு}}{\text{சராசரித் தொழிற்பாடு}} = 5\text{-} \Big/ \frac{50\text{-}5p}{P}$

$|E| = -5 \cdot \frac{P}{50\text{-}5p}$ என்பதில் குறிப்பிட்ட ஒவ்வொரு விலை மட்டத்தினையும்

பிரதியிட்டு நெகிழ்ச்சியின் அளவினைக் கணிப்பிடலாம்)

## வில் முறை அல்லது வளைவு முறை நெகிழ்ச்சி மதிப்பீடு:

விலையிலும் கேள்வித் தொகையிலும் ஏற்படும் மிகச் சிறிய மாற்றங்களை சிறப்பாகக் கொண்டு புள்ளி நெகிழ்ச்சி மதிப்பிடப்படுகின்றது ஆனால் நடைமுறையில் அதிகளவு விலை மாற்றத்தினால் ஏற்படும் பெருமளவான தொகை மாற்றத்தின் தொடர்பை சரியாக மதிப்பிட புள்ளி நெகிழ்ச்சி முறை பொருத்தமானதாக இருக்கவில்லை. அம்முறையால் மதிப்பிடப்படும் நெகிழ்ச்சிக் குணகத்தை விற்பனையாளர்களோ, நுகர்வோர்களோ தம் எதிர்கால நடவடிக்கைகளிற்கு பயன்படுத்த முடிவதில்லை. ஏனெனில் உண்மை நிலையை அது பிரதிபலிக்கக்கூடிய வகையில் இருப்பதில்லை. இதனால் பெரியளவிலான விலை மாற்றமும் தொகை மாற்றமும் ஏற்படும்போது இரண்டு புள்ளிகளுக்கிடையேயான நெகிழ்ச்சியை சராசரிமுறையில் கணிப்பிடுவதே வளைவு நெகிழ்ச்சி எனக் குறிப்பிடப்படுகின்றது. இதற்கான சமன்பாடு பின்வருமாறு எழுதப்படுகின்றது:

$$\text{வளைவு நெகிழ்ச்சி } E = \frac{\text{தொகை மாற்றம்}}{\text{ஆரம்பத்தொகையினதும் மாற்றத்தின் பின்னரான தொகையினதும் சராசரி}} \Big/ \frac{\text{விலை மாற்றம்}}{\text{ஆரம்ப விலையினதும் மாற்றத்தின் பின்னரான விலையினதும் சராசரி}}$$

$$E = \frac{\triangle Q}{\frac{Q_1+Q_2}{2}} \Big/ \frac{\triangle P}{\frac{P_1+P_2}{2}}$$


$$= \frac{\triangle Q}{\triangle P} \cdot \frac{P_1+P_2}{Q_1+Q_2}$$

வளைவு நெகிழ்ச்சி மதிப்பீடு நடைமுறையில் சந்தை மாற்றங்களை அவதானிப்பதற்காக மதிப்பிடப்படுகின்றது. அத்துடன் சந்தை பற்றிய எதிர்வு கூறலுக்கும், விற்பனையாளர்கள் விற்பனையைத் திட்டமிடுவதற்கும் இம்மதிப்பீட்டு நெகிழ்ச்சி பயன் உடையது.

## மொத்தச் செலவீட்டு முறையிலான நெகிழ்ச்சி மதிப்பீடு:

குறித்த பொருள் ஒன்றினை குறிப்பிட்ட விலையில் கொள்வனவு செய்யும் போது நுகர்வோருக்குச் செலவு ஏற்படுகின்றது. அப்பொருளின் விலை மாறும் போது நுகர்வோன் கொள்வனவில் மாற்றம் ஏற்பட்டு மொத்தச் செலவிலும் மாற்றம் ஏற்படுகின்றது. இச் செலவு மாற்றத்தின் போக்கினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடுவதே மொத்த செலவீட்டு நெகிழ்ச்சி மதிப்பீடாகும். மற்றையவை மாறாத விடத்து ஒரு பொருளின் விலை மாற்றம் அப்பொருளின் தொகையிலும், அதைக் கொள்வனவு செய்யும் நுகர்வோர் செலவீட்டிலும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. இதனைப் பின்வரும் கேள்விக்கோடு ஒன்றிற்கான கேள்வி அட்டவணை காட்டுகின்றது.


| விலை (ரூபா) | கேள்வித் தொகை (அலகு) | ஒவ்வொரு விலையிலும் நுகர்வோன் செலவு (ரூபா) |
|---|---|---|
| 8 | 1 | 8 |
| 7 | 2 | 14 |
| 6 | 3 | 8 |
| 5 | 4 | 20 |
| 4 | 5 | 20 |
| 3 | 6 | 18 |
| 2 | 7 | 14 |
| 1 | 8 | 8 |




மேற்காட்டிய அட்டவணையில் விலை 8 ரூபாவிலிருந்து 5 ரூபாவரை வீழ்ச்சியடையும் போது மொத்த செலவு 8 ரூபாவிலிருந்து 20 ரூபாவாக அதிகரிக்கின்றது. மறுபுறமாகக் கூறுவதாயின் 5 ரூபாவிலிருந்து 8 ரூபாவாக அதிகரிக்கும் போது மொத்தச் செலவு 20 ரூபாவிலிருந்து 8 ரூபாவாகக் குறைகின்றது. இது விலைக்கும் மொத்தச் செலவிற்குமிடையே எதிரான தொடர்பு ஒன்று இருப்பதைக் காட்டுகின்றது. அதாவது விலை கூட

மொத்தச் செலவு குறைதலும், விலை குறைய மொத்தச்செலவு கூடுவதும் ஒன்றிற்குக் கூடிய நெகிழ்ச்சியையே காட்டும் என்று மார்ஷல் என்ற பொருளியலாளர் குறிப்பிட்டுள்ளார். மறுபுறமாக விலை குறையும் போது மொத்தச்செலவு குறைந்தும், விலை கூடும் போது மொத்தச் செலவு கூடுவதாயுமிருந்தால் அங்கு ஒன்றுக்குக் குறைந்த நெகிழ்ச்சி இருக்கும். அதாவது விலைக்கும் மொத்தச் செலவுக்கும் இடையே நேரான தொடர்பிருந்தால் கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைவானதே. விலை குறையும் போது அல்லது கூடும் போது மொத்தச் செலவில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லையாயின் நெகிழ்ச்சி ஒன்றிற்குச் சமமாக இருக்கின்றது என்று கருதப்படுகின்றது

நுகர்வோர் பொருட்களைக் கொள்வனவு செய்ய செலவிடும் பணம் அப்பொருளை விற்பனை செய்பவர் சந்தையில் தனி ஒருவராக இருக்கின்றார் எனக் கருதிக்கொண்டால் விலை மாற்றத்தினூடாக நுகர்வோர் மொத்த செலவீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கு சமமாக விற்பனையாளன் மொத்த வருமானமும் மாற்றமடையும். எனவே விற்பனையால் மொத்த செலவீட்டு நெகிழ்ச்சிக் கணிப்பீட்டை அறிந்து கொள்ள முடிகின்றது. இதனை பின்வரும் வரைபடம் தெளிவாக விளக்குகின்றது.




மேற்காட்டிய 3 வழிமுறைகளாலும் மதிப்பிடப்படும் கேள்வியின் விலை நெகிழ்ச்சி எமக்கு உணர்த்துவது என்னவெனில் விலை நெகிழ்ச்சி 2.5 ஆக இருக்குமாயின் ஒரு சத வீத (1%) விலை வீழ்ச்சிக்கு 2.5% கேள்வித் தொகையை அதிகரிக்கும் என்பதையும் 1.1 விலை வீழ்ச்சியால் 2.5% கேள்வித் தொகை வீழ்ச்சியடையும் என்பதையும் காட்டுகின்றது.

## விலை நெகிழ்ச்சியை நிர்ணயிக்கும் காரணிகள்:-

1. அத்தியாவசியப் பொருட்களின் நுகர்வு தவிர்க்க முடியாதது. இதனால் இப்பொருளின் கேள்வி நெகிழ்ச்சி குறைவானது. ஏனெனில் இப்பொருளின் கொள்வனவில் அத்தியாவசியத் தன்மையே செல்வாக்குச் செலுத்துகின்றது. இப்பொருளின் விலை கூடுதல், விலைகுறைதல் அவற்றின் கொள்வனவைப் பாதிப்பதில்லை. இருப்பினும் அவ்வத்தியாவசியப் பொருளுக்கு பதிலாக பயன்படுத்தக்கூடிய பொருளின் கிடைப்பு நிலைகளைப் பொறுத்து அப்பொருளின் விலை நெகிழ்ச்சி வேறுபடும். உதாரணமாக பதிலீடுகள் உள்ள பொருட்களுடன் ஒப்பிடும் போது பதிலீடு அற்ற பொருட்களிற்கான கேள்வி நெகிழ்ச்சி குறைவானதாக இருக்கும். (உப்பு, அரிசி, மரக்கறி; உப்பிற்குப் பதிலீடு இல்லை அரிசிக்கு கோதுமை மற்றும் தானியங்கள் பதிலீடாக உண்டு. மரக்கறி சிறிதளவு பதிலீடு உண்டு)

அத்தியாவசியமற்ற ஆடம்பரப் பொருளிற்கான நெகிழ்ச்சி கூடியது. ஆடம்பரப் பொருளிற்கு இருக்கக்கூடிய பதிலீடுகளைப் பொறுத்து நெகிழ்ச்சிகள் வேறுபடலாம். பதிலீடு உள்ள ஆடம்பரப் பொருளிற்கு நெகிழ்ச்சி மிக அதிகமாக இருக்கும்.

ஆடம்பரப் பொருட்களின் மிக அதிக விலையுடையதும் உயர்ந்த வருமான மட்டத்தவரால் மட்டும் கொள்வனவு செய்யப்படுவதுமான வைரம், மாணிக்கம் போன்ற

பொருட்களிற்கான கேள்வி நெகிழ்ச்சி குறைவானது. ஏனெனில் இப்பொருட்களின் விலை உயர்வு விலை வீழ்ச்சி கொள்வனவில் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. மிகக்கூடிய விலை சிறிளவு குறைவதனால் வருமானம் குறைந்தோரும் அதைக் கொள்வனவு செய்ய முடிவதில்லை. அவ்விதமே விலை சற்று அதிகரிப்பதால் செல்வந்தர்கள் அதைக் கொள்வனவு செய்யாது விடுவதில்லை, இப்பொருளின் கொள்வனவை விலை மாத்திரம் தீர்மானிப்பதில்லை. சமூக அந்தஸ்து. உத்தேச நோக்கங்கள், போன்ற வெளிக் காரணிகளும் தீர்மானிக்கின்றன.

2) பதிலீட்டுப் பொருட்களின் கிடைப்பு நிலையும் பதிலீட்டுப் பொருட்களின் எண்ணிக்கையும் சாதாரண பொருள் ஒன்றின் கேள்வி நெகிழ்ச்சியைக் கூட்டுகின்றது. அதிக பதிலீடு உள்ள பொருள் ஒன்றின் விலை அதிகரிப்பு அப்பொருளின் கொள்வனவை அதிகளவில் குறைத்து விடும். ஏனெனில் அதற்குப் பதிலீடான பொருட்களை குறைந்த விலையில் கொள்வனவு செய்ய முடியும் என்ற நம்பிக்கையிலேயாகும். அவ்விதமே விலை குறைந்தால் கொள்வனவு மிக அதிகமாகும். ஏனெனில் ஏனைய பதிலீட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்தோரும் விலை குறைந்திருப்பதைக் கண்டு இப்பொருளைக் கொள்வனவு செய்ய முன்வருவர். இவ்வித நுகர்வோர் நடவடிக்கைகளினால் பதிலீடு உள்ள பொருட்களின் விலை நெகிழ்ச்சி அதிகமாகவே இருக்கும்.

3) நுகர்வோர் ஒரு பொருளைக் கொள்வனவு செய்வதற்காக அதிகரித்த வருமானம் எத்தனை சதவீதத்தை செலவிடுகின்றனர் என்பதும் பொருளின் கேள்வி நெகிழ்ச்சியில் ஆதிக்கம் செலுத்தும் காரணியாக உள்ளது. அதிகரித்த வருமானத்தில் குறைந்த வீதமே ஒரு பொருள் கொள்வனவில் செலவிடப்பட்டால் அப்பொருளின் நெகிழ்ச்சி குறைவானதாகவே இருக்கும்.

4) பழக்கத்திற்கு அடிமையாக்கப்பட்ட பொருட்களின் கேள்வி நெகிழ்ச்சி குறைவானதாகவே இருக்கும். உதாரணமாக, மது அருந்துதல், புகை பிடித்தல் என்ற பழக்கங்களுக்குட்பட்டவர்கட்கு எந்தளவில் அவற்றின் விலை கூடினாலும் கொள்வனவை பெருமளவில் குறைத்துக் கொள்ள முடிவதில்லை. இதனால் இப்பொருட்களின் கேள்வி நெகிழ்ச்சி குறைவானதாகும்.

5) கலாசார, பண்பாட்டு மரபுகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நோக்கில் அப்பொருளின் விலையில் ஏற்படும் மாற்றங்களில் அதிக கவனம் செலுத்தாது, மரபுச்சடங்கிற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதால் அதற்குப் பயன்படுத்தும் பொருட்களாகிய சந்தனம், குங்குமம், ஊதுவர்த்தி, கூறைச்சேலை போன்றவை சடங்கிற்கு அவசியமானதால் அவற்றின் கேள்வி நெகிழ்ச்சி எப்போதும் குறைவானதே.

6) நெடுநாட்களிற்கு பாவிக்கக்கூடிய பொருட்களின் நெகிழ்ச்சி கூடியது. எளிதில் கெட்டுவிடக்கூடிய பொருட்களின் நெகிழ்ச்சி குறைவானது.

மேற் கூறிய காரணிகளோடு மேலும் பல காரணங்களால் கேள்வி நெகிழ்ச்சியின் அளவு தீர்மானிக்கப்படலாம்.

## வருமானம் சார்ந்த கேள்வி நெகிழ்ச்சி:

வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி என்பது குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் கேள்வியை நிர்ணயிக்கும் மற்றைய காரணிகள் மாற்றமடையாதிருக்கும் போது நுகர்வோரது வருமானத்தில் ஏற்படும் வீதாசார மாற்றத்திற்கும் அதனால் கேள்வித் தொகையில் ஏற்படும் மாற்ற வீதத்திற்குமிடையிலான தொடர்பை அளவிடுவதாகும். வேறுவிதமாகக் கூறுவதாயின் ஒரு சத வீத வருமான அதிகரிப்பு (அல்லது குறைப்பு) ஏற்படும் போது எத்தனை

சதவீத கேள்வி அதிகரிப்பு (அல்லது குறைப்பு) ஏற்படும் என்பதை வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி என்பர். கேள்வியின் விலை நெகிழ்ச்சி மதிப்பீட்டில் நெகிழ்ச்சிக் குணகத்தின் எதிர்க்கணியக்குறி நீக்கப்பட்டு குணகத்தின் முழுப்பெறுமானம் கவனத்தில் கொள்ளப்பட வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சிக் குணகத்தில் எதிர்க்கணிய நேர்க்கணிய குறியீடுகள் இரண்டும் கவனத்தில் கொள்ளப்படும். வருமான நெகிழ்ச்சிச் சமன்பாடு பின்வருமாறு அமையும்.


$$\text{வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி} = \frac{\text{கேள்வித்தொகையில் ஏற்பட்ட மாற்ற வீதம்}}{\text{வருமானத்தில் ஏற்பட்ட மாற்ற வீதம்}}$$

அதாவது $$Ey = \frac{\triangle Q}{Q} \cdot 100 \Big/ \frac{\triangle Y}{y} \cdot 100$$

இதனை $$Ey = \frac{\triangle Q}{\triangle y} \cdot \frac{Y}{Q}$$ எனவும் எழுதலாம்

இங்கு $\frac{\triangle Q}{Q} \cdot 100$ தொகை மாற்ற வீதத்தையும் $\frac{\triangle Y}{y} \cdot 100$ வருமான மாற்ற வீதத்தையும் காட்டுகின்றது. வருமான மாற்றங்களிற்கும் சாதாரண பொருள் ஒன்றின் கேள்வி மாற்றங்களிற்குமிடையிலான தொடர்பைக் காட்டுவதற்கு பின்வரும் அட்டவணையும் வரைபும் உபயோகப்படும்.

| வருமானம் | கேள்வித்தொகை |
|---|---|
| 1000 | 100 |
| 1500 | 150 |
| 2000 | 200 |
| 2500 | 200 |
| 3000 | 150 |
| 3500 | 100 |




1000 - 2000 வரை வருமானம் அதிகரிக்க கேள்வி 100 விருந்து 200 ஆக அதிகரித்துள்ளது. அந்நிலையில் வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் நேரானதாக இருக்கும். 2000 - 2500 வரையில் வருமானம் அதிகரிக்க கேள்வித் தொகையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. அதாவது இரு வருமான மட்டங்களிலும் 200 அலகாகவே இருக்கின்றது இதனால் வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி பூச்சியமாக இருந்தது. ஆனால் நெகிழ்ச்சி நேர்க்கணியமுடையதே. 2500 - 3500 வரை வருமானம் அதிகரித்த போது கேள்வித்தொகை 200 விருந்து 100 அலகாகக் குறைந்தது. இந்நிலையில் நெகிழ்ச்சி எதிர்க்கணியமானதாக இருந்தது. இதனைப் பின்வரும் உதாரணம் விளக்குகின்றது.

$y = 1000$ $Q = 100$
$\triangle y = 500$ $\triangle Q = 50$ எனின் $$Ey = \frac{50}{100} \Big/ \frac{500}{1000} = 1$$

$y = 2000$ $Q = 200$
$\triangle y = 500$ $\triangle Q = 0$ எனின் $$Ey = \frac{0}{200} \Big/ \frac{500}{2000} = 0$$

$y = 3000$ $Q = 150$
$\triangle y = 500$ $\triangle Q = -50$ எனின் $$Ey = \frac{-50}{150} \Big/ \frac{500}{300} = -2$$

மேற்காட்டிய உதாரணங்களின் படி வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி நேரானதாகவும் எதிரானதாகவும் இருக்க முடிகின்றது. வருமான மாற்றத்திற்கேற்ப மாற்றமடையும் கேள்வி மாற்ற அளவுகளையும் வருமான மட்டம் கேள்வி மட்டம் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு பண்டங்களை வகைப்படுத்தலாம். மறுபுறமாக நோக்கின் பண்டங்களின் இயல்பிற்கேற்ப நெகிழ்ச்சி அளவும் அவற்றின் நேர்க்கணிய எதிர்க்கணிய தன்மையும் தீர்மானிக்கப்படுகின்றது. அதாவது பின்வருமாறு அவை வகைப்படுத்தப்படலாம்:

$$\frac{\triangle Q}{Q} < \frac{\triangle y}{y} = Ey < 1$$ இது அத்தியாவசியப் பொருளுக்குரியது.

$$\frac{\triangle Q}{Q} > \frac{\triangle y}{y} = Ey > 1$$ இது ஆடம்பரப் பொருளுக்குரியது.

$$\frac{\triangle Q}{Q} = \frac{\triangle y}{y} = Ey = 1$$ இது சாதாரண பொருளுக்குரியது.

$$\frac{O}{Q} < \frac{\triangle y}{y} = E = 0$$ இது சாதாரண பொருளுக்குரியது.

$$\frac{-\triangle Q}{Q} < \frac{\triangle y}{y} = -E < 0$$ இது இழிவுப் பொருளுக்குரியது.

வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சியும் 5 வகையாகப் பிரித்து நோக்கப்படுவதனை மேற்குறித்த உதாரணங்கள் காட்டுகின்றன.

## கேள்வியின் குறுக்கு நெகிழ்ச்சி:-

கேள்வியின் குறுக்கு நெகிழ்ச்சி என்பது மற்றவைகள் மாறாத விடத்து குறித்த பொருளுக்கு பதிலீடாக அல்லது நிரப்பியாகப் பயன்படுத்தப்படும் பொருட்களின் விலை மாற்ற வீதத்திற்கும் குறித்த பொருளின் தொகை மாற்ற வீதத்திற்கும் இடையிலான தொடர்பை மதிப்பிடுவதாகும். இதனைப் பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிப்பிடலாம். இங்கு A,B பொருட்கள் பதிலீட்டு அல்லது இணைப்புப் பொருட்களாகும்.

$$E_{AB} = \frac{\text{A பொருளின் தொகை மாற்ற வீதம்}}{\text{B பொருளின் விலை மாற்ற வீதம்}} = \frac{\triangle Q_A}{Q_A} \Big| \frac{\triangle P_B}{P_B}$$

$\triangle Q_A$ = A பொருளின் தொகை மாற்றம்

$Q_A$ = A பொருளின் ஆரம்பத் தொகை

$\triangle P_B$ = B பொருளின் விலை மாற்றம்

$P_B$ = B பொருளின் ஆரம்ப விலை

$\frac{\triangle Q}{Q}$ தொகை மாற்ற வீதத்தையும், $\frac{\triangle P}{P}$ விலை மாற்ற வீதத்தையும் குறிக்கின்றது. இவை இரண்டும் சமமானால், அல்லது கூடிக்குறைந்து காணப்பட்டால் அதாவது ஏனைய பொருளின் விலை கூடுகின்றது எனக்கொண்டு நோக்கும் போது $\frac{\triangle Q_A}{Q_A} = \frac{\triangle P_B}{P_B}$ அல்லது $\frac{\triangle Q_A}{Q_A} > \frac{\triangle P_B}{P_B}$ எனின் குறுக்கு நெகிழ்ச்சி நேர்க்கணியமானதாக இருக்கும். இதனால் A, B பொருட்கள் பதிலீட்டுப் பொருட்கள் என அறியப்படும். விலை கூடுகின்றபோது $-\frac{\triangle Q_A}{Q_A} < \frac{\triangle P_B}{P_B}$ $\left( \text{அல்லது} \quad \frac{\triangle Q_A}{Q_A} > \frac{\triangle P_B}{P_B} \right)$ எனின் குறுக்கு நெகிழ்ச்சி எதிர்க் கணியமாக இருக்கும். எனவே இவ்விரு A, B பொருட்களும் நிரப்பி அல்லது இணைப்புப் பொருட்களேயாகும்.

$\frac{O}{Q_A} < \frac{\triangle P_B}{P_B}$ எனின் குறுக்கு நெகிழ்ச்சி பூச்சியமானதாகும். $(E = 0)$. அவ்வாறெனின் A, B பொருட்களுக்கிடையில் எந்தவித தொடர்பும் இல்லை. அதாவது அது பதிலீட்டுப் பொருளாக அல்லது நிரப்பிப் பொருளாக இருக்க முடியாது.

தொகுத்து நோக்கும் போது கேள்வியின் விலை நெகிழ்ச்சி, பொதுவாக எமது பாட விளக்கங்களில் முக்கியத்துவம் பெறுகின்ற போதும் ஏனைய நெகிழ்ச்சிகளான வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி, குறுக்குநெகிழ்ச்சி என்பனவற்றின் விளக்கங்களும் சம முக்கியத்துவம் பெறவேண்டுமென்பதையே இக்கட்டுரை விளக்குகின்றது. பாடப்புத்தகங்களில் இதற்கான விளக்கங்கள் தெளிவாக அமைந்துள்ள போதும் பாடசாலை மாணவர்களுக்கு விளங்கக் கூடிய வகையிலே இவ் எண்ணக்கருக்கள் பற்றிய கட்டுரைகள் வெளிவருவது மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

*மாணவர்கள் தங்கள் பயிற்சிக் காலங்களில் தலையை மழுங்க வழித்துக்கொள்வதே நன்று எண்ணெய்ச் செலவு முடியலங்கரிக்க ஆகும் கால விரயம் ஆகியவைகள் தவிர்க்கப்படும். தினமும் மூன்று வேளைகள் தலையுட்பட நீரில் கழுவிச் சுத்தம் செய்தால் மூளையும், கண்களும், பிற முக்கிய உறுப்புக்களும் அயர்ச்சி நீங்கிச் செம்மை அடையும்.*

— காந்தியடிகள்

# வெளிநாட்டு உதவி

**N. சுசீந்திரராஜா**
**ஆண்டு 13 வர்த்தகப் பிரிவு.**

பொருளாதார அபிவிருத்திக்கு வேண்டிய வளங்களின் தேவையில் மூலதன ஆக்கம் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஒரு குறைவிருத்தி நாட்டின் அபிவிருத்திக்கு அவசியமான மூலதனம் முழுவதையும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அந் நாட்டின் உள் நாட்டு முதலீடுகளின் மூலம் பெற முடியாமலிருக்கும். இந்நிலையில் மூலதனத் தேவைக்கும் கிடைக்கின்ற முலதனத்துக்குமிடையே ஓர் இடையீடு தோன்றுவது பல குறைவிருத்தி நாடுகளில் வழக்கமாயிருந்து வருகின்றது. எனவே குறைவிருத்தி நாடுகள் தமது இடைவெளியை நிரப்புவதற்கு நேரடி வெளிநாட்டு தனியார் முதலீட்டினையும், வெளிநாட்டு உதவியையும் எதிர்பார்த்து நிற்கின்றன.

வெளிநாட்டு தனியார் முதலீடுகள் முன்வர வேண்டுமென அரசாங்கங்கள் எதிர்பார்த்தாலும், தகுந்த தாராள கொள்கைகளின் மத்தியிலும் பல நாடுகளில் எதிர்பார்த்தளவுக்கு வெளிநாட்டு முதலீடுகள் கிடைப்பதில்லை இவ் வகையில் இலங்கையின் நிலை பெரிதும் மோசமான தொன்றாகக் காணப்படுகின்றது. ஏற்றுமதி வருமானங்களின் வளர்ச்சியடையாத தன்மையுடன் சேர்ந்து, இவ்வாறான வெளிநாட்டுத் தனியார் மூலதன உட்பாச்சலின் குறைந்த மட்டம் இலங்கையில் பொருளாதாரத்தின் வளர்ச்சியின்மைக்கு ஒரு முக்கிய காரணமெனக் குறிப்பிடப்படுகின்றது. தனியார் மூலதனம் மாத்திரமன்றித் தனியார் துறையினூடாகத் தொழில் நுட்ப உதவி அல்லது வேறு வகைப்பட்ட உதவிகள் கிடைப்பதும் பெரிதும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது.

இந்நிலையில், வெளிநாட்டு அரசாங்கங்களிடமிருந்து பெறப்படும் கடன்கள் நன்கொடைகள் என்பன ஒரு குறைவிருத்தி நாட்டின் மூலதன தேவையில் முக்கிய பங்கு வகிக்கின்றன அத்துடன் இருபக்க அல்லது பலபக்க ஒப்பந்தங்களினூடாக மனித வளங்களும் தொழில்நுட்ப வளங்களும் சர்வதேச ரீதியில் பரிமாற்றப்படுவதும் குறைவிருத்தி நாடுகளைப் பொறுத்தவரை அவசியமாகின்றது. இது தவிர உணவுப் பொருட்கள் இயந்திர சாதனங்கள் என்பனவும் இந்நாடுகளுக்கு வழங்கப்படலாம். இவ்வாறான பண வடிவிலும், பொருள் வடிவிலும், ஊழிய வடிவிலும், தொழில் நுட்ப வடிவிலும் ஒரு குறைவிருத்தி நாடு பெற்றுக் கொள்வனவற்றைக் கூட்டாக வெளிநாட்டு உதவி என அழைக்கலாம். கடன்களும், நன்கொடைகளும் அதிகளவில் வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடுகளிலிருந்து அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதார விருத்திக்கு கொடுக்கப்படும் கொடுப்பனவுகளாகும். இதனை சர்வதேச ரீதியில் அரசாங்கங்களுக்கிடையில் நடைபெறும் மூலதன மாற்றல் எனவும் குறிப்பிட முடியும்.

உதவியானது கொடுக்கப்படுகின்ற முறையினை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு பாகுபடுத்தலாம்.

1) பிணைக்கப்பட்ட உதவி
2) பிணைக்கப்படாத உதவி
3) கடினமான உதவி
4) இலகுவான உதவி

பிணைக்கப்பட்ட உதவி எனும்போது கடனானது அந்நாட்டு ஏற்றுமதியுடன் பிணைக்கப்பட்டதாக இருக்கும். அதாவது, கடன் பெறுகின்ற நாடானது கடனைக் கொடுக்கும் நாட்டுப் பொருளை கட்டாயமாக வாங்கவேண்டும் என்பதாகும். பிணைக்கப்பட்ட உதவியானது மூலகப்

பிணைப்பு, திட்டப் பிணைப்பு, செலாவணிப் பிணைப்பு என மூவகைப்படுத்தப்படலாம். வளர்முக நாடுகளின் அபிவிருத்திக்கு வெளிநாட்டு உதவியை வழங்கும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் அவற்றைத் தமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பண்ட வடிவத்தில் வழங்குவதாக நிபந்தனை குறித்து வழங்கின் அவை மூலகப் பிணைப்பு எனப்படும். வழங்கப்படும் உதவியானது ஒரு அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்படல் வேண்டும் என நிபந்தனை விதித்து வழங்குவதையே திட்டப்பிணைப்பு என்பர். வெளிநாட்டு உதவியானது வழங்கப்படுகையில் அதனை வழங்கும் நாடு அவை மீள செலுத்தப்படுகையில் ஒரு பகுதி உதவி வழங்கும் நாட்டுச் செலாவணி வடிவிலும் மறுபகுதி உதவியினைப் பெறும் வளர்முக நாட்டுச் செலாவணி வடிவிலும் செலுத்தப்படல் வேண்டும் என குறிப்பிடப்படின் அதனை செலாவணிப் பிணைப்பு என்பர் பிணைக்கப்படாத உதவிகள் கடன் கொடுக்கும் நாட்டு ஏற்றுமதியுடன் பிணைக்கப்படாத நிலையினைக் குறிப்பதாகும். கடனை பெறுகின்ற நாடு தான் விரும்பிய நாட்டிடம் பொருட்களை வாங்கும் உரிமை உடையனவாகும்.

கடினமான கடன்கள் இலகுவான கடன் என்பன கடனை திருப்பிச் செலுத்தும் நாணயம், கால இடைவெளி, தயைநாட்கள், வட்டிவீதம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இப்பாகுபாடானது அமைந்துள்ளது கடினமான கடன்களுக்கு எப்போதும் திருப்பிச் செலுத்தும் கால இடைவெளி தயைநாட்கள் என்பன குறைவாகவும், சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப உயர்ந்த வட்டி வீதத்தை கொண்டவாகவும் கடன் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச நாணயங்களின் அடிப்படையில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டியதுமான கடன்களாகும். இலகுவான அல்லது சலுகைக் கடன் என்பது வட்டியற்ற கடன்களாகவோ அன்றி மிகக் குறைந்த வட்டிவீதத்தை உடைய கடன்களாகவோ காணப்படுவதுடன் நீண்ட முதிர்ச்சிக்காலத்தினையும் நீண்ட தயை நாட்களையும் கொண்டிருப்பதுடன் உண்மையில் அபிவிருத்தி நோக்கத்திற்காகவும் வழங்கப்பட்ட கடன்களாகும்.

இன்று அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் எதிர்நோக்கும் பல பொருளாதாரப் பிரச்சினைகள் அந்நாடுகளின் குறைவான பொருளாதார விருத்தியின் விளைவாகும். இக்குறைவான பொருளாதார விருத்தியானது இந்நாடுகளின் இயற்கை வளங்கள் அதிகளவிலும், சிறந்த முறையிலும் பயன்படுத்தப்படாமையினைக் குறித்து நிற்கின்றது இதற்கு முக்கிய தடைகளாக மூலதனவாக்கம் தொழில் நுட்பவளர்ச்சியின்மை செலாவணிப் பற்றாக்குறை ஆகியன அமைந்துள்ளது.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பெருமளவு மூலவளங்களைப் பயன்படுத்துவதற்கு இன்று பெருமளவு மூலதனம் அவசியமானதாக அமைந்துள்ளது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் மொத்தத் தேசிய உற்பத்தி குறைவாய் அமைவதுடன் அதிகரித்த குடித்தொகை காணப்படுவதால் நாட்டு மக்களின் வருமானம் மிகக்குறைவாகவுள்ளது எனவே மக்கள் சேமிப்பற்றவர்களாகவோ அன்றி குறைவான சேமிப்பினை உடையவர்களாகவோ காணப்படுகின்றார்கள். எனவே பெருமளவு மூலதனத்தை உள்நாட்டிலிருந்து பெறுவது கடினமாகும். குறைந்த வருமானத்தினை உடைய மக்கள் மீது கூடிய வரியினை விதித்து நிர்ப்பந்தமாக சமூகத்தின் சேமிப்பினை பெற முயல்வதும் அதிகளவில் நியாயமற்றதாகும். இதனால் உள்நாட்டில் மூலதனவாக்கத்தினை அதிகரிப்பதற்கு வெளிநாட்டிலிருந்து மூலதனத்தை பெறுவது மாற்றுவழியாக அமைந்துள்ளது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளைப் பொறுத்தமட்டில் இன்று சர்வதேச வர்த்தகமானது அதிகளவில் பாதகமானதாகவே காணப்படுகின்றது இந்நாடுகளின் ஏற்றுமதிப் பொருள்களுக்கு புதிய பிரதியீடுகள் கண்டுபிடிக்கப்பட்டமை வாங்கும் நாடுகள் தனி உரிமைச் சக்தியினைப் பயன்படுத்துதல் முதல் விளைவுப் பொருள்களின் விலையில் பெரும் வீழ்ச்சியினை ஏற்படுத்தி

யுள்ளது ஏற்றுமதிப் பொருள்களின் விலை வீழ்ச்சியால் ஏற்பட்ட செலாவணி பற்றாக் குறையானது பொருளாதார விருத்திக்குத் தேவையான இயந்திரங்கள், தளபாடங்கள் போன்ற மூலதனச் சொத்துக்களை மட்டு மன்றி அத்தியாவசிய நுகர்வுப் பொருட் களைக் கூட இறக்குமதி செய்யமுடியாத நிலைக்குள்ளாகியுள்ளது. வெளிநாட்டு உத வியினால் கிடைக்கின்ற வெளிநாட்டுச் செலாவணியானது பொருளாதார விருத்தி என்ற நோக்கில் மட்டுமன்றி இந்நாடுகளில் பஞ்சத்தினால் மக்கள் இறப்பினைத் தவிர்க் கவும் ஓரளவு உதவியுள்ளது. மேலும் பொருள் தட்டுப்பாட்டினை ஓரளவு குறைத்து பணவீக்கத்தினைக் கட்டுப்படுத் தவும் கூட இவ் உதவியானது ஓரளவு பயன் படுத்தப்படுகின்றது. மேலும் தொழில்நுட்ப உதவியாக கிடைக்கப்பெறின் நாட்டின் தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்து நீண்ட காலப்போக்கில் பொருளாதாரமானது. பல முதலீடுகளை ஏற்படுத்திக் கொள்ளும் சக்தி வாய்ந்ததாக வளர்ச்சியடைந்து விடவும் வெளிநாட்டு உதவி அவசியமானதாகக் கருதப்படுகின்றது.

ஒரு நாட்டிற்கு கிடைக்கின்ற உதவி யானது அதிகளவில் அந்நாட்டினது வெளி நாட்டுக் கொள்கையினாலேயே நிர்ணயிக் கப்படுகின்றது. உதவி கிடைப்பதற்கு பரஸ் பர நல்லெண்ணம் அவசியமானதாகும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகட்குக் கிடைக்கின்ற வெளிநாட்டு உதவியினை இரு வகைப்படுத்தலாம்.

1) நிறுவனங்களின் மூலம் கிடைக்கின்ற உதவி
2) தனிப்பட்ட நாடுகளில் இருந்து கிடைக் கும் உதவி

நிறுவனங்களில் இருந்து கிடைக்கும் உதவியானது சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற அமைப்புகளிடமிருந்து கிடைப்ப தாகும். பொதுவாக இச் சர்வதேச நிதி நிறுவனங்களில் அங்கம் வகிக்கும் நாடுகட்கே இவற்றின் உதவியானது கிடைக்கக் கூடிய தாகும். தனிப்பட்ட நாடுகளிலிருந்து கிடைக் கின்ற உதவியினை விட சர்வதேச நிறுவ னங்களிலிருந்து கிடைக்கின்ற உதவியானது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதார விருத்திக்கு கூடியளவு சாத கமானதாகக் காணப்படுகின்றன. ஆனா லும் இந்நிறுவனங்களால் வழங்கப்படும் உதவி அபிவிருத்தி அடைந்துவரும் நாடுக ளுக்கு கிடைக்கும் வெளிநாட்டு உதவியின் மொத்த அளவில் சிறிய பங்கினையே வகிக் கின்றன.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுக ளுக்கு கிடைக்கின்ற பெருமளவு வெளி நாட்டு உதவி தனிப்பட்ட நாடுகளிடமிருந்து கிடைப்பனவாகும். உதவி வழங்கும் நாடு களான ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து ஆகிய வற்றிலிருந்து அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பெற்றுக் கொள்ளும் வெளிநாட்டு உதவியினையே தனிப்பட்ட நாடுகளிடமி ருந்து கிடைக்கும் உதவி எனலாம்.

ஒரு நாடு எவ்வளவு வெளிநாட்டு உத வியினை பெறவேண்டும். என்னவகை உதவி யினைப் பெறவேண்டும் எனபவற்றினை அந்நாட்டுப் பொருளாதார அமைப்பின் தன்மை, தேவை ஆகியனவற்றினை அடிப் படையாகக் கொண்டே நிர்ணயிக்க வேண் டும். ஒரு நாட்டிற்கு வருடமொன்றிற்கு எவ்வளவு மூலதனம் தேவை என்பதனை அந் நாட்டினது மூலவளங்கள், சனத் தொகை அதிகரிப்பு, வருமானமட்டம் ஆகி யவற்றினை அடிப்படையாகக் கொண்டே நிர்ணயிக்கலாம்.

வெளிநாட்டு செலாவணியானது ஒரு நாட்டின் உற்பத்திப் பெருக்கத்திற்கு இன்றியமையாத முதலீட்டு மூலப் பொருட் களுக்கு மட்டுமன்றி நிகழ்கால நுகர்வுக்குத் தேவையான நுகர்வுப் பொருட்களை இறக் குமதி செய்யவும் இது இன்றியமையாத தாகும். ஏற்றுமதி மூலம் கிடைக்கும் செலா வணியின் பங்கு என்ன என்பதனை அறி வதன் மூலம் செலாவணியின் பங்கு அறிந்து கொள்ள முடியும் வெளிநாட்டு மூலதனத் தினை ஏற்றுக் கொள்ளும் சக்தியானது நாட்டினது தொழில்களின் வளர்ச்சிப் பொரு ளாதாரத்தில் ஏற்கனவே உள்ள மூலத

னத்தின் அளவு போன்ற பல காரணிகளை உள்ளடக்கியதாகும்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் வெளிநாட்டு உதவியினைப் பெறுவதன் முக்கிய நோக்கம் எதிர்காலத்தில் உதவியிலிருந்து விடுபட்டு பொருளாதார சுபீட்சத்தினை அடைவதற்கே ஆகும். ஆனால் இன்று அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைப் பொறுத்த மட்டில் வெளிநாட்டு உதவியானது உதவியிலிருந்து விடுபடுவதற்காக அன்றி மேலும் அந் நாடுகள் உதவியினை எதிர்பார்க்கும் நிலையினையே உருவாக்கியுள்ளன. பொதுவாக வெளிநாட்டு உதவியினால் உதவியினைப் பெறும் நாடுகளை விட உதவியினை வழங்கும் நாடுகளே நன்மை அடைகின்றன.

வெளிநாட்டு உதவியின் பாதகமான விளைவுகளாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

1) அபிவிருத்தியடைந்த நாடுகள்தமது மிகை உற்பத்திகளை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு பண்டப்பிணைப்பு உதவி மூலம் வழங்குவதால் இந்நாடுகளின் உள்நாட்டு உற்பத்தியில் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி அவசியம் பெறுவதில்லை. அத்துடன் ஐக்கிய அமெரிக்க பி. எல். 480 உதவியின் பிரகாரம் கோதுமையை வழங்குவதால் அரிசியின் கேள்வியானது குறைந்து அரிசியினை ஏற்றுமதி செய்யும் வளர்முக நாடுகளின் ஏற்றுமதி வருமானத்தில் வீழ்ச்சியினை ஏற்படுத்துவதற்கு இப்பண்ட உதவியின் காரணமாக அமைகின்றன.

2) வெளிநாட்டு உதவியானது வட்டியுடன் மீளச் செலுத்தப்படுகையில் எதிர்காலத்தில் கடன்சுமை அதிகரித்து நாட்டின் ஏற்றுமதி வருமானத்தின் மெய் பெறுமதியில் வீழ்ச்சியினை ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைகின்றன. இதனால் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்தக் கூடிய நிதியின் அளவு குறைந்துவிடுகின்றது.

3) பெறப்படும் வெளிநாட்டு உதவியினை திருப்பிச்செலுத்துவதற்கு நாட்டின் வருவாய்கள் போதாத நிலையில் புதிய கடன்கள் பெறப்படுகையில் நாடு கடன் பொறிக்குள் சிக்கிவிடும் நிலை ஏற்படுகின்றன.

4) இணைக்கப்பட்ட உதவிகள் பெறப்படுகையில் உதவியினை வழங்கும் நாடுகளே கப்பல் கேள்வு, வட்டி என்பனவற்றை தீர்மானிப்பதால் உயர்ந்த விலையில் பொருள்களை வழங்கவேண்டியநிலை உதவியினைப் பெறும் நாட்டிற்கு உருவாகின்றது.

5) திட்டப் பிணைப்பான வெளிநாட்டு உதவிகளால் உள் நாட்டு அபிவிருத்தித் திட்டங்களில் வெளிநாடுகள் தலையிட அவை பொருத்தமற்ற திட்டங்களாக மற்றப்படலாம். இதனால் நாட்டின் வளங்கள் வீணடிக்கப்படுவதுடன் தேவையற்ற கடன் சுமையும் அதிகரித்து விடமுடியும்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகட்கு இது வரை அளிக்கப்பட்ட வெளிநாட்டு உதவியானது உதவிக்கு முடிவாக அன்றி எச்சரிக்கையாகவே அமைந்திருக்கின்றது. வளர்ச்சியடைந்த வல்லரசுகளைப் பொறுத்த மட்டில் தமது வெளிநாட்டு வர்த்தகத்தினை விரிவாக்கும் கொள்கையாகவே வெளிநாட்டு உதவியானது பயன்பட்டுள்ளது. இவ் உதவிகள் நிகழ்கால சமூக நலனை அதிகரிக்க பயன்பட்டுள்ளதேயொழிய பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்த ஏற்றனவாக செயற்படவில்லை. ஆனாலும் மூலதன ஆக்கத்தையும் தொழில்நுட்ப வளர்ச்சியினையும் குறைவாகக் கொண்டுள்ள வளர்முக நாடுகளுக்கு வெளிநாட்டு உதவியானது விரிவடைய வேண்டியது அவசியமாகும்.

**உசாவியவை.**


1) வித்தியோதயம் — 197 — 75

2) வித்தியோதயம் — 1 75 — 76

3) பொருளியலாளன் — 1988 யூன்.

4) பொருளியல் நோக்கு —1981 ஆகஸ்ட்-செப்ரெம்பர்.

## சைனீஸ் டிறகன் றெஸ்ட் ரோறன்ட்

163, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

- கோழிப் புரியாணி
- FRIED RICE
- நூடில்ஸ்
- கோழி சூப்

போன்ற உணவு வகைகளை தரமாகவும் சுவையாகவும்
அன்றும் இன்றும் என்றென்றும் சுவைத்திட
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

---

வணிகநாதம் வாழ்கவென்று வாழ்த்துகிறோம்

**"அழகிய கலர்ப்படம் எடுப்பதிலும் கலர்ப் படச்சுருள்களை
விரைவில் தரமான முறையில் பெற்றுக்கொள்ள"**

## ஜெகன் படப்பிடிப்பாளர்

399, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்,

Our Compliments

# SRI LANKA BOOK DEPOT

234 K. K. S. RODA,
JAFFNA,

சிறந்த வேலைப்பாடுகள்
கொண்ட
தங்க நகைகளை
விரும்பிய டிசைன்களில்
தெரிவு செய்யலாம்.

## ஹப்பி ஜுவல்லறி

*118, கஸ்தூரியார் வீதி,*
**யாழ்ப்பாணம்**

ஓடர்கள்
குறித்த தவணையில்
*சிறந்த முறையில்*
செய்து கொடுக்கப்படும்.

## அர்ச்சனா நகை மாளிகை
## ARCHANA JEWELLERS

★

ஆடர் நகைகள்
22 கரட் தங்கத்தில்
சிறந்த முறையில்
செய்து கொடுக்கப்படும்.

**ORDERS EXECUTED PROMPTLY**

★

120 B, Kasthuriar Road,
JAFFNA.

## SOBANA JEWELLERY

116 A, Kasthuriar Road,
JAFFNA.

★

## சோபனா ஜுவல்லறி

116 A, கஸ்தூரியார் வீதி,
**யாழ்ப்பாணம்.**

★

*அழகிற்கு அழகு செய்யும்
அழகிய தங்கப் பவுண் நகைகளுக்கு
தனி நிறுவனம்.*

புதிய
குகானந்த பவான்
879, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

சைவ உணவு வகைகளை
சுவைத்து களித்திட
ஒரே நிறுவனம் நாடுவீர்.

அசோகா
ஜுவல்லர்ஸ்
275, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.

உங்களது நயம் நம்பிக்கை
நாணயமுள்ள தங்க வைர
நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

ஓடர் நகைகள் குறித்த காலத்தில்
செய்து கொடுக்கப்படும்

நியூ ஆனந்தா
ஜுவல்லர்ஸ்
தங்கப் பவுண் நகை வியாபாரம்

நவீன அழகிய
தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்
22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

நியூ ஆனந்தா
ஜுவல்லர்ஸ்
185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,

வணிக நாதம் வாழ்க வளர்க

சிவகுமார்
ஸ்ரோர்ஸ்
282, ஆஸ்பத்திரி றோட்,
யாழ்ப்பாணம்.

## Save for Better Tomorrow:

**Our New Interest Rates:**

| | | | |
|---|---|---|---|
| ★ Fixed Deposit | — 1 Year | — | 17% |
| ★ Fixed Deposit | — 2 Years | — | 18·5% |
| ★ Fixed Deposit | — Monthly | — | 15·2% |
| ★ Normal Savings | | — | 14% |

**SAVE WITH** — YOUR FAMILY BANK.

# THE NATIONAL SAVINGS BANK
**CHUNNAKAM.**

— WE SERVE WITH INTEREST —

---

THINKING WELL IS WISE
PLANNING WELL WISER
DOING WELL WISEST
AND BEST OF ALL




நன்கு சிந்தித்தல் புத்திசாலித்தனம்
நன்கு திட்டமிடல் மிகு புத்திசாலித்தனம்
நன்கு செயலாற்றல் அதிமிகு புத்திசாலித்தனம்

**உள்ளூர் உற்பத்தியைப் பாவனைக்குக் கொள்ளுவோம்**

மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் 25 அனுப்பி
ஆத்திசூடி அல்லது கொன்றைவேந்தன், நீதிநூல்
அன்பளிப்பாய் பெறுங்கள்;

## மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

# விளம்பரம்

**T. ராஜினி**
*ஆண்டு 13 - வர்த்தகப் பிரிவு*

விற்பனை அபிவிருத்தி நடவடிக்கைக ளில் முதன்மையானதென கொள்ளட்டுவதே விளம்பரமாகும். இது நீண்ட கால விற்ப னையைத் தூண்டும் ஒரு செயற்பாடாகும் முற்காலத்திலே உற்பத்தி செய்யப்பட்ட இடத்திலேயே பொருட்கள் சேவைகள் விற் பனை செய்யப்பட்டன. காலப்போக்கில் ஓரிடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட் கள் சேவைகள் நாட்டின் வெவ்வேறு பாகங் களிலோ, உலகின் பல்வேறு பகுதிகளிலோ விநியோகிக்கப்படுகின்றன இதனால் ஒரு பொருளின் உபயோகம், அது பாவிக்கப்படும் முறை, அதன் விலை என்பவற்றை நுகர் வோருக்குத் தெரியப்படுத்தி விற்பனையை மேற்கொள்ள வேண்டியதாய் உள்ளது. இதன்படி விளம்பரத்தினால் மக்கள் பொருட்களையறிந்து, பின்னர் அவற்றை விளக்குவதற்காக கடையை நோக்கிச் செல் வர். எனவே பொருட்களை பார்ப்பதற்கு முன்பே, பொருட்கள் வாங்கும் விருப்பத்தை ஏற்படுத்துவதாக விளம்பரம் அமைந்திருக் கும்.

விளம்பரத்துக்கென பல ஊடகங்கள் பாவிக்கப்படுவதுண்டு.

சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள்.
சஞ்சிகைகள், புதினப்பத்திரிகைகள்.
வானொலி, தொலைக்காட்சி.
திரைப்படம், விளக்குகள்.

போன்றவற்றைப் பயன்படுத்தி விளம்ப ரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. விளம்ப ரம் தொடர்பாக அண்மையில் அறிமுகப் படுத்தப்பட்டதே "மஞ்சள் பக்கங்கள் கொண்ட விளம்பரங்கள்" என்பதாகும். இதற்கென ஜி. ரீ. ஈ (G. T. E.) விபரக் கொத்துக்கள் லிமிட்டெட் என்ற தனியார் கம்பனி மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. விளம்பர ஊடகங்களை தெரிவு செய்தலில் சில காரணிகளை கருத்தில் கொள்ளவேண்டியுள்ளன அவை,

I. செலவு:-

விளம்பர ஊடகமொன்றைத் தெரிவு செய்யும்போது செலவினைக் கருத்தில் கொள்ள வேண்டும். குறைந்த செலவுடைய ஊடகங்கள் மக்களால் பெரிதும் விரும்பப் படும்.

II. பொருளின் இயல்பு:-

விளம்பர ஊடகமொன்றை தெரிவு செய் யும் போது பொருட்களின் தன்மைக்கேற்ப அமைய வேண்டும். உதாரணமாக பெண்கள் அணியும் அணிகலன்களுக்கு விளம்பரம் செய்யப்படின், பெண்கள் விரும்பிப்படிக்கும் சஞ்சிகைகளில் விளம்பரம் செய்யலாம்.

III. சந்தையின் பருமன்:-

விளம்பர ஊடகமானது சந்தையின் பருமனை அடிப்படையாகக் கொண்டு தீர் மானிக்கப்படும். பாரிய சந்தைகளுக்கு ஓர் ஊடகமும், சிறிய சந்தைகளுக்கு ஓர் ஊட கமும் பயன்படுத்தப்படும்.

IV. நுகர்வோரின் தன்மை:-

இது நுகர்வோன் கொண்டிருக்கும் வய தெல்லை, கல்வி வாழுமிடம், சமயம் ஆகி யவற்றை அடிப்படையில் கொண்டு விளம் பர ஊடகம் தேர்ந்தெடுப்பதைக் குறிக்கும்.

V. போட்டியாளரின் விளம்பரமுறை:-

இது போட்டியாளரால் மேற்கொள் ளப்படும் விளம்பரத்தை குறிக்கும். எப் போதும் போட்டியாளரை விட ஒரு படி உயர்ந்த விளம்பர ஊடகம் தெரிவு செய் யப்படும்.

**விளம்பர வகைகள்:-**

உற்பத்தி வர்த்தக நிறுவனங்கள் மேற்கொள்கின்ற விளம்பரங்களை, அது தொழிற்படும் முறையைக் கொண்டு வகைப்படுத்தியும் கூறமுடியும். நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் விளம்பரங்களையெல்லாம் நான்கு வகைக்குள் அடக்கிவிட முடியும். அவை,

I. **பொருள் பற்றிய விளம்பரம்;-**

பொருளின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு, அவற்றின் சிறப்புத் தன்மையை எடுத்துக் கூறி விளம்பரம் செய்தலை பொருள்பற்றிய விளம்பரம் என்பர். குறிப்பாக C W E லிமிட்டெட் ஆல் விடப்படும் ''நியூ லக்ஸ்பிறே பால் மா'' என்பது பொருள் சார்ந்த விளம்பரமாகும்.

II. **நிறுவனம் பற்றிய விளம்பரம்:-**

ஓர் குறிப்பிட்ட நிறுவனத்தைப் பற்றி, மக்கள் உயர்வாக எண்ணுவதற்காக அந் நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் விளம்பரமானது நிறுவனம் சார்ந்த விளம்பரமாகும். குறிப்பாக கார்கிள்ஸ் லிமிட்டெட் மில்க்வைற் நிறுவனம் ( சுத்தம் சுகம் தரும்) போன்றன, இவ்வகை விளம்பரங்களையே மேற்கொள்கின்றன.

III. **தேவைபற்றிய விளம்பரம்:-**

குறிக்கப்பட்ட பொருள் ஒன்றை OR ஆள் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக விடப்படும் விளம்பரங்களைக் குறிக்கும். பெரும்பாலும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விளம்பரங்களை நிறுவனங்கள் மேற்கொள்வதைக் குறிக்கும். குறிப்பாக நிறுவனப் பொருளொன்றை விற்பனை தொடர்பாக முகவர் ஒருவரை நியமிப்பதற்கான விளம்பரம்.

IV. **ஆலோசனை பற்றியது:-**

இது மக்களுக்குரிய பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்படுவதுடன் சம்பந்தப்பட்டதாகும். பெரும்பாலும் அரசாங்கத்தால் விடப்படும் விளம்பரங்கள் ஆலோசனை பற்றியதாகும்.

குறிப்பாக "நுகர்வோர் சட்டத்திற்கிணங்க வியாபாரிகள் நடக்க வேண்டுமெனக் கூறுவது இவ்வகையினதாகும்."

இலங்கையிலே விளம்பரத்தை மேற்கொள்வதாயின், இவற்றின் மீது சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. பின்வருவன வற்றிற்கு விளம்பரம் செய்தல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

I. 1979 ல் உருவாக்கப்பட்ட நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்படி குழந்தைகளுக்கான பால்மாவிற்கு விளம்பரம் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

eg. கௌவன்கேற், எஸ் எம். ஏ. (S. M. A) லக்ரோஜன் போன்றன.

II. உயர் தொழில் கண்ணியத் தொழில் என்பனவும் விளம்பரம் செய்யப்பட முடியாது. இவ்விளம்பரத்தை தொழில் புரிவோர் சங்கம் தடை செய்கின்றது.
eg. சட்டத்தரணித் தொழில்.

III. மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் படி வைத்தியத் தொழில்கள் பற்றிய விளம்பரங்கள் தடை செய்யப்பட்டுள்ளது
eg வைத்தியசாலை.

IV. பொதுச்சட்டத்தின்படி சட்டமுரண் தொழில்களும் விளம்பரம் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

eg அபின், கஞ்சா, கள்ளக்கடத்தல் பொருட்கள் என்பன.

**விளம்பர முகவர் நிலையங்கள்**

விளம்பரங்களை ஆற்றுவதற்கென நிறுவனங்கள் கொண்டுள்ள சில பிரத்தியேகமான அமைப்புக்களை விளம்பர முகவர் நிலையங்கள் எனப்படும். இந்நிறுவனங்கள் விளம்பரத்தை மேற்கொள்வதற்கு என கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. தற்காலத்தில் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தாமே விளம்பரங்களை மேற்கொள்வதும் சிக்கலானதாகும். எனவே இதற்குப் பதிலாக விளம்பர முகவர் நிலையங்களின் மூலம் விளம்பரம் செய்யப்படுகின்றன.

eg. கிராண்ட் கெயோன் அட்வடைஸ் மென்ற் (சிலோன்) லிமிடெட் என்பது இவ் வகையைச் சார்ந்ததாகும். இவ்வகை நிலையங்கள் கவர்ச்சியாகவும், சிறமையாகவும், விளம்பரம் செய்வதை வளர்க்கவென வருடந்தோறும் "கலைச்சான்றிதழ்" என்ற ஊக்குவிப்பை அரசாங்கம் வழங்கி வருகின்றது. இதன் மூலம் பல நன்மைகள் கிடைப்பதென கருதப்படுகின்றது.

I மிகக் குறைந்த செலவுடன் விளம்பரத்தை மேற்கொள்ள முடிதல்.

II மக்கள் மனதில் பதியக் கூடிய கவர்ச்சிகரமான விளம்பரத்தை மேற் கொள்ள முடிதல்.

III பிரதான நோக்கமான விற்பனையை அதிகரிக்க முடிதல்.

IV முகவர் நிலையத்தால் விளம்பரம் செய்வதால் நிறுவனத்தின் வேலைச் சுமை குறைகின்றது.

விளம்பரத்தை மேற்கொள்வதன் மூலம் விநியோகிப்போர், நுகர்வோர் ஆகியோருக்கிடையே பல நன்மைகள் கிடைக்கின்றன. அவை:

I விளம்பரத்தினால் நுகர்வோன் குறிப்பிட்ட பொருட்கள் சேவையினைப் பற்றிய சிறப்புத் தன்மை பற்றி இலகுவாய் அறிந்து கொள்ளமுடியும்.

II விளம்பரத்தினால் பொருட்களின் விற்பனை அதிகரிக்கக் கூடியதாக உள்ளது. இதனால் உற்பத்தி அதிகரிக்கும். எனவே உற்பத்தி அலகொன்றிற்கு ஆன செலவு குறைகின்றது.

III விளம்பரத்தை மேற்கொள்வதனால் குறிப்பிட்ட பொருளின் தொடர்ச்சியான கேள்வியினைப் பேண முடியும். இதனால் ஸ்தாபனம் தொடர்ந்து உற்பத்தியில் ஈடுபடவும், தொழிலாளர்கள் தொடர்ச்சியாக வேலை புரியமுடியும்.

IV விளம்பரத்தினால் சில வகையான வேலைகளை குறைந்த செலவில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது.
eg. சஞ்சிகைகள், பத்திரிகைகள்.

V தகுதியான பதவிகளில் தகுதிமிக்கோரை தெரிவு செய்வதற்கும் விளம்பரம் பேருதவியாகவுள்ளது.

விளம்பரத்தால் மேற்கண்ட அனுகூலங்கள் காணப்பட்டபோதும் பின்வரும் பிரதிகூலங்களும் காணப்படுகின்றன.

I விளம்பரத்தை மேற்கொள்ளும் போது நுகர்வோர் பொருட்கள் சேவைகளைத் தெரிவு செய்யும்படி தூண்டப்படுவர். இதனால் நுகர்வோர் செலவானது அதிகரித்து, சேமிப்புக் குறைய ஏதுவாகின்றது.

II விளம்பரம் பெருமளவு ஆடம்பர பொருட்களுக்கே மேற்கொள்ளப்படுவதால், அத்தியாவசியமற்றதாகின்றது.

III விளம்பரங்கள் கவர்ச்சிகரமாக மேற்கொள்ளப்படும் போது நுகர்வோர் அவ் விளம்பரத்தில் மயங்கிச் சிலவேளைகளில் போலிப் பொருட்களை கொள்வனவு செய்வர்.

IV விளம்பரத்தினூடாக பொருளுக்கான உற்பத்திச் செலவு கூடி அதன் மூலம், பொருளுக்கான விலை அதிகரித்து விடும்.

இன்றைய நவீன காலத்திற்கேற்ப அதிகரித்து வரும் மக்களின் தேவைக்கேற்ப பொருட்கள் சேவைகள் உற்பத்தி அதிகரித்து வருகின்றன. அப்பொருட்கள் நாட்டின் பல பாகங்களிலும் உலகின் ஒவ்வொரு பாகங்களிலும் விற்பனையை மேற்கொள்ளவும், பொருள் பற்றிய தகவலை நுகர்வோருக்கு வழங்கவும் விளம்பரமானது முக்கியமானதொன்றாக காணப்படுகின்றது.

வணிக நாதம் வாழ்க! வளர்க !!

# ஹரன்

## ரெக்ஸ்ரைல்ஸ் அன் பான்சிகுட்ஸ்

திருநெல்வேலி சந்தி,
திருநெல்வேலி.

வணிகநாதம் வளமுடன் வளர
எமது நல்லாசிகள்

# நீலாம்பரி உணவகம்

தட்டாதெரு : யாழ்ப்பாணம்.

சுவை, சுத்தம் நிறைந்த அசைவ உணவு வகைகளை
சுவைத்து மகிழ்ந்திட வாருங்கள்.

# விஞ்ஞானமும் விஞ்ஞான முறையும்

த. கோமதி,
ஆண்டு '13' வர்த்தகம்.

விஞ்ஞானம் என்றவுடன் ஒரு சில துறைகளை மட்டுமே விஞ்ஞானங்கள் எனக் கருதுபவர்கள் இன்றும் உள்ளனர் ஒவ்வொரு துறைகளையும் இன்று விஞ்ஞானமாக விஞ்ஞானத்திற்கு உரியதாக ஏற்றுக் கொள்ளும் போது, ஒருசில துறைகளை மட்டுமே விஞ்ஞானங்கள் எனக் கருதுபவர்களின் விஞ்ஞான அறிவு எவ்வளவு பின் தங்கியுள்ளது என்பது தெளிவாகிறது. விஞ்ஞானம என்றால் என்ன? எனும் வினாவினை எடுத்துக்கொண்டால், அதற்கு விடையாக தனித்து ஒரு விளக்கத்தை கூற முடியாது. ஏனெனில் ஆரம்பம் முதல் க இன்றுவரையுள்ள பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்து, விஞ்ஞானம் பற்றிய ஆராய்ச்சியிலீடுபட்டவர்கள் விஞ்ஞானம் என்பதற்கு தத்தமது காலங்களுக்கு பொருந்தக்கூடிய வகையில் தத்தமது அறிவுக்கெட்டிய விளக்கங்களை அளித்துள்ளனர். பல்வேறுபட்ட விஞ்ஞானிகளால் விஞ்ஞானம் என்பதற்கு கொடுக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்கள் வருமாறு.

1) அனுபவத்தில் உண்மையோ அல்லது பொய்யோ என நிரூபிக்கப்படக்கூடிய அனுபவ அறிவே விஞ்ஞானம்

2) அனுபவரீதியானதும், காரணகாரியத் தொடர்பு தெளிவுபடுத்தப்பட்ட தர்க்க ரீதியான விளக்கத்தை கொண்டது மான ஓர் அறிவே விஞ்ஞானம்

3) சாள் பொப்பரின் கருத்துப்படி பொய்ப்பிக்கப்படக்கூடியதும், தெளிவான மொழிநடையிலமைந்ததுமான அறிவே விஞ்ஞானம்.

4) தோமஸ் கூன் எஸ்பாரின் கருத்துப்படி இயற்கை பற்றியும், சமூகத்தைப் பற்றியும் திருப்திகரமான விளக்கத்தை தரும் அறிவே விஞ்ஞானம்

5) ரசல் என்ற அறிஞரின் கருத்துப்படி உன்னைப்பற்றியும், உன்னைச் சூழ உள்ள உலகு பற்றிபும் திருப்திகரமான விளக்கத்தைத் தரும் அறிவே விஞ்ஞானம்.

மேற்கூறப்பட்ட வரைவிலக்கணங்களிலிருந்து விஞ்ஞானம் என்பதை சுருக்கமாக ''ஒழுங்குபடுத்தப்பட்ட திருத்தமானதும், திருப்திகரமானதுமான அறிவு'' எனக் கூறலாம். இத்தகைய விஞ்ஞானமானது வரலாற்று ரீதியாக தேல்ஸ். கிரேக்கவிட்டஸ், அனெக்சிமெனிஸ், கிபோகிரட்டீஸ், பைதகரஸ், டெமோகிரட்டீஸ், சீனோ, பிளேற்றோ, அரிஸ்டோட்டில் தொலமி. கொர்ப்பனிக்கஸ் கெப்லர், கலிலியோ, நியூட்டன் என்பவர்களுக்கூடாக வளர்ச்சியடைந்தது. முன்னர் அணுகு முறைகளில் ஏற்பட்ட வளர்ச்சி பின்னர் அனுபவ வழியான அணுகு முறைகளாக வளர்ச்சியடைந்தன இதில் முக்கியத்துவம் செலுத்தியவர் கலிலியோ ஆவார். நவீன விஞ்ஞான முறையின் அபிவிருத்திக்கு வித்திட்ட பெருமை இவரையே சாரும். மேலும் விஞ்ஞான வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தவர்கள் என்ற வகையில் பேகன், டேகாட்,

பாஸ்கல், வில்லியம் கார்வே, ஸ்பினோசா, இவை பினிற்ஸ், லொக் என்பவர்களும் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

புதிய நவீன கருவி உற்பத்தியும், ஆய்வு கூட அமைவு, அளவீடுகள், பதிவுசெய்தல் என்பவற்றிலேற்பட்ட தொழில் நுட்ப வளர்ச்சியுமே விஞ்ஞானம் இன்று பரந்த அறிவாக மலர ஏதுவாகியது. மனிதன் இன்று ஒரு பிரச்சினை சம்பந்தமான ஒழுங்கான அறிவைப் பெறுவதற்கு விஞ்ஞானத்தினூடாகத் திருப்திகரமான விளக்கமொன்றை எதிர்பார்க்கின்றான். திருப்திகரமான விளக்கம் என்பதில் இரு அம்சங்கள் உண்டு.

I விபரித்தல்

II விளக்குதல்

ஒரு குறிப்பிட்ட பிரச்சினை சம்பந்தமான விஞ்ஞான ரீதியான ஆய்வில் என்ன நடந்தது? எனும் வினாவிற்கு விளக்கமாக விபரித்தல்கள் அமையும். எப்படி நடந்தது? எனும் வினாவிற்கு ஆய்வாக விளக்கங்கள் அமையும். எனவே ஒரு செம்மையான விபரிப்பிலிருந்தே திருப்திகரமான விளக்கத்தைப் பெறமுடியும் எனலாம். திருப்தியான விஞ்ஞான அறிவானது தன்னகத்தே பல பண்புகளை உள்ளடக்கி இருக்கும்.

## விஞ்ஞானத்தின் பண்புகள்

I) பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக அமையவேண்டும்

II) பொதுமையாக்கப்பட்ட விளக்கமாக இருக்க வேண்டும்.

III) எதிர்வுகூறும் தன்மையுடையதாக இருக்க வேண்டும்.

IV) கருதுகோள்களையும், கோட்பாடுகளையும் விளக்குவதன் மூலம் புதிய கருதுகோள்களுக்கும், புதிய கோட்பாடுகளுக்கும் இடமளித்து முன்னேறுவதாக இருக்க வேண்டும்.

V) விஞ்ஞான அறிவுகள் கவர்பாடற்ற முறையில் குழப்பமில்லாத தெளிவான பதங்களினால் கூறப்பட்டிருக்க வேண்டும்.

VI) அனுபவச் சோதனைகள் மூலம் பொய்ப்பிக்கப்படக் கூடியதாக இருக்க வேண்டும்.

மேற்கூறப்பட்ட பண்புகளைக் கொண்டமைந்த விஞ்ஞானங்களே மனிதனின் விஞ்ஞான அறிவைப் பரந்த அடிப்படையில் விரிவாக்க உதவுகின்றன எனலாம். விஞ்ஞான அறிவு என்பது விஞ்ஞான உண்மைகளையும், விஞ்ஞான விதிகளையும், விஞ்ஞானக் கொள்கைகளையும் உள்ளடக்கியதாகும், அறிவினை ஒழுங்கு செய்வதற்கு விஞ்ஞானிகளுப் முறையானது தனிப்பட்டது. இந்த முறைகளே சரியான முடிவுகளைத் தரக்கூடியது. மனிதனின் சிந்தனையானது இன்று விரிவடைந்து தேவைக்குத் தக்கவாறு பெருகியுள்ளது. ஆரம்பத்தில் மனிதனின் சிந்தனைக்கு இடமாயிருந்த அறிவுத் துறைகள் அதாவது விஞ்ஞானத் துறைகள் சடப்பொருட்களைப் பற்றிய பௌதிகவியல், இரசாயனவியல் என்பவையும் உயிர்களைப்பற்றிய தாவரவியல், விலங்கியல் என்பவையுமாகும். எனினும் நாளடைவில் மனிதன் வெவ்வேறுபட்ட அறிவுத் துறைகளைப் பற்றியும் ஆராய வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்த வகையில் அவ்வப்போது தோன்றும் தேவைக்குத் தக்கவாறு பலவிதமான அறிவுத் துறைகள் வளர்ச்சியடைந்தன.

இயற்கைத் தோற்றப்பாட்டின் எந்த ஒரு விடயத்தையும் விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து, உண்மைகளைக் கண்டுபிடித்து செம்மையாக ஒழுங்கு செய்தால் அது அத்தோற்றப்பாடு பற்றிய விஞ்ஞானம் ஆகும். விஞ்ஞானத்தினை அதன் விடய இயல்புக்கேற்ப பின்வருமாறு வகையீடு செய்யலாம்.

# விஞ்ஞானம்

- நியம விஞ்ஞானம்
  - அளவையியல்
  - தூயகணிதம்
- நியமம் கூறும் விஞ்ஞானம்
  - அழகியல்
  - ஒழுக்கவியல்
  - அறிவாராய்ச்சியியல்
  - இலக்கணம்
  - மெய்யியல்
- விபரிப்பு விஞ்ஞானம்
  - இயற்கை விஞ்ஞானம்
    - பௌதிக விஞ்ஞானம்
      - பௌதிகவியல்
      - இரசாயனவியல்
      - வானியல்
      - புவியியல்
    - உயிரியல் விஞ்ஞானம்
      - விலங்கியல்
      - தாவரவியல்
      - நுண்பாக உயிரியல்
      - உடலியல்
      - உளவியல்
      - நுண்ணுயிரியல்
      - பிறப்புரிமையியல்
  - சமூக விஞ்ஞானம்
    - பொருளியல்
    - அரசியல்
    - வரலாறு
    - தொல்பொருளியல்
    - சமூகவியல்
    - மானிடவியல்
    - சமூக உளவியல்
    - உளவியல்
    - புவியியல்

மேற்கூறப்பட்ட மாதிரியான வகையீட்டில் புவியியல், உளவியல் என்பன சமூக விஞ்ஞானமாகவும், இயற்கை விஞ்ஞானமாகவும் கருதப்படுகின்றன.

விஞ்ஞானமானது அவதானத்திலிருந்தே ஆரம்பமாகிறது எனலாம். எவ்வாறெனின் ஒரு பொருளை அல்லது நிகழ்வை அவதானிக்கும் போது அது விஞ்ஞானியின் அறிவிற்கு எட்டாததாக அல்லது விஞ்ஞானியின் கருத்திற்கு மாறானதாக அமையும் பட்சத்தில் அங்கு பிரச்சினை ஏற்படுகின்றது அத்தகைய பிரச்சினைக்கான தீர்வினை விஞ்ஞானி விஞ்ஞான முறைகளினூடாகவே பெறமுடியும். விஞ்ஞான முறை என்பது ''விஞ்ஞான அறிவைத் தர்க்க ரீதியாகப் பெறுவதற்கு வழி வகுத்துச் செல்லும் ஒரு படி நிலை விளக்கம்'' ஆகும். காள் பொப்பர் என்ற அறிஞர் தனது நூலான ''Conjectures and Refutations'' என்பதில் விஞ்ஞான முறை என்பதற்கு பின்வருமாறு விளக்கமளித்துள்ளார் எவ்வாறெனின் மனித இயல்பானது ஒன்றைச் செய்து பார்த்துத் திருத்தும் இயல்புடையது. இதில் வெற்றி பெறுவது. எத்தனை முறை ஒன்றைச் செய்கிறோம் என்பதைப் பொறுத்துள்ளது. இந்தச் செய்து பார்த்து பிழையை திருத்தும் முறை எமது அனுபவத்தோடு சேரும் போது அதுவே விஞ்ஞான முறை எனப்படும் விஞ்ஞானத்தில் விஞ்ஞான முறை என்பது முக்கிய பங்கினை வகிக்கின்றது. குறிப்பாக,

I விஞ்ஞானத்தில் உண்மைகளையும், விதிகளையும் கண்டு பிடிப்பதற்கு இம்முறை உதவியாகின்றது

II விஞ்ஞான அறிவைப் பரீட்சித்துப் பார்த்து அவற்றின் செம்மையை மதிப்பீடு செய்வதற்கு விஞ்ஞானமுறை உதவுகிறது. இதனால் தான் விஞ்ஞானிகள் தாம் கண்டு பிடிப்பனவற்றையெல்லாம் விஞ்ஞான முறையினைக் கொண்டு சோதிக்கின்றனர்.

விஞ்ஞான முறையானது பின்வரும் முக்கிய படிமுறைகளைக் கொண்டமைந்ததாகும்.

I) அவதானம்

II) பிரச்சினையை வரையறை செய்தல்

III) தேவையான தரவுகளைச் சேகரித்தல்

IV) கருதுகோள் உருவாக்குதல்

V) கருதுகோளை வாய்ப்புப் பார்த்தல்

VI) கருதுகோளை உறுதிப்படுத்தல் மாற்றியமைத்தல் அல்லது தவிர்த்துவிடல்.

விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு அடிப்படையாக விளங்குபவை இயற்கையிலுள்ள பொருட்களும் நிகழ்வுகளுமே ஆகும். எவ்வாறெனின் இவற்றை குறிக்கோளுடன் பார்க்கும் போது மனதில் அது ஏன் எவ்வாறு இருக்க வேண்டும்? அது ஏன் அவ்வாறு நிகழவேண்டும்? எனும் வினாக்கள் எழும் பட்சத்தில் அங்கு ஆராய்ச்சி ஆரம்பமாகிறது. ஆய்வுக்குட்பட்ட பொருளை அல்லது நிகழ்வினை நன்கு மீள மீள அவதானிப்பதன் மூலம் பிரச்சினையை வரையறை செய்துகொள்ள முடியும். பின்பு சம்பந்தப்பட்ட பிரச்சினை தொடர்பான தரவுகளைச் சேகரிப்பதன் மூலம் அதற்கொரு தற்காலிக விளக்கம் (கருதுகோள்) கொடுக்கப்படும். இதனை தற்காலிகமாக எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். பின்பு அனுபவத்தில் வாய்ப்புப் பார்க்கப்படும்போது அதுபற்றி வேறுபட்ட விமர்சனங்கள் கூறப்படும். அவ் விமர்சனங்களைத் துணையாகக் கொண்டு தவறுகள் களையப்படும். எனினும் அவ்விளக்கமானது வெற்றியடைவதற்குப் பல பரிசோதனைகளுக்கு நின்று பிடிக்கவேண்டும். அவ்வாறு பல கடுமையான பரிசோதனைகளுக்கும் நின்றுபிடிக்குமாயின் அது பொதுமைப்படுத்தப்பட்ட விதியாக அல்லது கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்படும். மேற்கூறப்பட்ட விளக்கத்தினை பின்வரும் உதாரணம் மூலம் மிகச் சுருக்கமாக விளங்கிக் கொள்ளலாம்.

உதாரணம்:-

கெப்லர் எனும் வானியல் அறிஞர் விண்கோள்களை அவதானித்தார். அவற்றுள் வியாழனின் சரியான வட்டவரை என்ன? என அறியமுயன்றார். இப்பிரச்சினை தொடர்பாக கெப்லர் தான்சேகரித்த தரவுகளை ஆதாரமாகக் கொண்டு "வியாழனின் சரியான வட்டவரை கோழிமுட்டை வடிவம் (இலிப்ஸ்)" என கருதுகோள் அமைத்தார். இக்கருதுகோளை வாய்ப்புப் பார்க்கும் பொருட்டு கெப்லர் பல ஆண்டுகளாக அவதானங்களை மேற்கொண்டார். அவதானங்கள் மூலமாக அவர்பெற்ற புதிய தரவுகள் அவரது கருதுகோளுடன் இணங்கியதால் அக்கருதுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

வெவ்வேறுபட்ட விஞ்ஞானங்களில் வெவ்வேறுபட்ட முறைகள் பயன்படுத்தப் படுகின்றன. குறிப்பாக இயற்கை விஞ்ஞானங்களில் அவதானம், பரிசோதனை, தொகுத்தறிமுறை, உய்த்தறிமுறை என்பன பயன்படுத்தப்படுகின்றன. எனினும் இயற்கை விஞ்ஞானத்தில் பரிசோதனை முறையே முக்கிய பங்கினை வகிக்கின்றது. சமூக விஞ்ஞானங்களில் அவதானம், அவதானத்தை அடிப்படையாகக் கொண்ட புள்ளிவிபரமுறை, வினாக்கொத்துமுறை, பேட்டிமுறை, தனியார்ஆய்வுமுறை, கட்டுப்பாட்டுகுழுமுறை, ஏடுகளின்ஆய்வுமுறை, நிகழ்வுமுறை என்பன பயன்படுத்தப்படுகின்றன. இயற்கைவிஞ்ஞானத்தில் பரிசோதனை முறையைப் போன்று சமூக விஞ்ஞானத்தில் புள்ளிவிபரமுறை முக்கிய பங்கினை வகிக்கின்றது. சமூகத்துறைகளின் புறவயத்தன்மையை அதிகரித்து அவற்றை சமூகவிஞ்ஞானங்களாக மாற்றிய பெருமை புள்ளிவிபர முறையினையே சாரும்.

மேற்கூறப்பட்ட முறைகளில் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றை பயன்படுத்தி விஞ்ஞானத்தில் ஆய்வுகள் இடம் பெறலாம்.

# மூலதனக் குறைப்பு
# REDUCTION OF CAPITAL

**A. கோமதி**
ஆண்டு - 13 வர்த்தகப்பிரிவு

வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியானது தனது அனுமதித்த மூலதனத்தினைக் குறைத்தல் அல்லது செலுத்தப்பட்ட மூலதனத்தைக் குறைத்தல் மூலதனக் குறைப்பு எனப்படும். ஒரு பொதுக்கம்பனியானது மூலதனக் குறைப்பினை மேற்கொள்வதன் நோக்கமானது அதிக பெறுமதியுள்ள சொத்துக்கள் புத்தகத்தில் இருப்பின் பெறுமதியை பதிவழிப்பதற்காகவும், கற்பனை அருவச் சொத்துக்களை புத்தகங்களிலிருந்து நீக்கி விடுவதற்காகவும் தேவைக்கு அதிகமான பணம் மீளளிக்கப்பட்டால் அதனைப் பாதுகாப்பதற்கான செலவும் தேவையில்லாமல் இருக்கும் என்பதாலும் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் பொதுக்கம்பனியானது மூலதனக் குறைப்பு மேற்கொள்ளப்படும் போது கடன்கொடுநர் மத்தியில் நிறுவனத்திற்கு எதிர்ப்புக்கள் தோன்றும். அத்துடன் கடன்தாரர் தமது கடனை மீளச் செலுத்தும்படிஅல்லது பிணையளிக்கும்படி கோரலாம்.

## மூலதனக் குறைப்புத் தொடர்பான கொள்கைகள், சட்டங்கள்

1982ம் ஆண்டு கம்பனிச் சட்டம் இலக்கம் - 17, பிரிவு 67 இல் பின்வருவனவற்றை யழிக்காது.

ஒரு கம்பனியானது நீதிமன்ற உறுதிப்பாட்டுடன் அவை அக விதிகளாலும், விசேட தீர்மானங்களாலும் அனுமதிக்கப்பட்டும் அதனுடைய மூலதனத்தை குறைப்பதுடன்

அ) அதன் ஏதாவது பங்குகளின் செலுத்தப்படாத பங்குப் பொறுப்புக்களை அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ முடியும்.

[ உதாரணமாக:- ஒவ்வொன்றும் 10/- பெறுமதியான பங்குகளில் 8/- மாத்திரம் அழைக்கப்பட்டிருந்தால் அவற்றை ஒவ்வொன்றும் 8/- பெறுமதியான முழுமையாக செலுத்திய பங்குகளாக மாற்றம் செய்யலாம் ).

அல்லது

ஆ) கம்பனியின் தேவைக்கு மிஞ்சியதாகக் கருதுமிடத்து செலுத்திய பங்கு மூலதனத்தில் ஏதாவது ஒரு பகுதியை பங்குதாரருக்குத் திரும்பச் செலுத்தலாம்.

அல்லது

இ) செலுத்திய பங்கு மூலதனத்தில் இல்லாததோ அன்றி கிடைக்கக் கூடிய சொத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தாதவிடத்து அவை இல்லாது ஒழிக்கப்படலாம்.

மேற் கூறப்பட்டவற்றை விட கம்பனிச் சட்டமானது பின்வருவனவற்றைக் கூறுகின்றது.

அ) ஒரு கம்பனி அதன் பங்கு மூலதனத்தைக் குறைப்பதற்கு தீர்மானத்தை ஏடுத்திருப்பின் நீதி மன்றத்துக்கு அக்குறைப்பின் உறுதிப்பாட்டினைப் பெறுவதற்காக விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

ஆ) கடன் சென்மதியாளர் மூலதனக் குறைப்பினை எதிர்ப்பதற்கு உரித்து

டையவராவர். அக்கடன்கள் செலுத்து வதன் மூலமோ பிணை மூலமோ தீர்க் கப்படல் வேண்டும்.

இ) கடன் சென்மதியாளரின் உரிமையைப் பாதுகாப்பதில் நீதிமன்றம் திருப்திய டையும் பட்சத்தில் இவை குறைப்பின் உறுதிப்பாட்டுக்காக அதுதான் சரியான தாகக் கருதும் முறைகள் நிபந்தனை களைக் கொண்டு கட்டளையிடும்.

ஈ) நீதிமன்ற கட்டளையையும், நீதிமன்றத் தால் அங்கீகரிக்கப்பட்ட அறிக்கைக ளையும் கம்பனி பதிவுகாரரிடம் பதிவு செய்யும் வரை குறைப்பு ஏற்பட மாட் டாது.

உ) விசேட தீர்மானம் நிறைவேற்றப்படல் வேண்டும்.

## மூலதனக் குறைப்பிற்கான சந்தர்ப்பங்கள்

பின்வரும் சூழ்நிலைகளில் மூலதனக் குறைப்புச் செய்யலாம்.

அ) கம்பனி ஒன்று பல வருடங்களாக நட் டம் அடைந்து இருப்பின் அந்த நட்டங் களை ஏடுகளில் இருந்து நீக்குவதற்கு

ஆ) கம்பனியின் சொத்துக்களை மதிப்பீடு செய்வதினால் ஏற்படும் மூலதன நட்டம் பதிவழிப்பதற்கு.

இ) கம்பனியின் தேவைக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருக்கின்ற மேலதிக மூல தனத்தைக் குறைத்தல். அதாவது மிகை மூலதனம் காணப்படும் போது.

ஈ) ஈடுபடுத்தப்பட்ட மூலதனம் அதன் சொத் துக்களில் பிரதிபலிக்காது இருப்பின்

## மூலதனக் குறைப்புத் தொடர் பான கணக்கீட்டுப் பதிவுகள்

i) அ) அழைக்கப்பட்ட பங்குகளின் பெறு மதியைக் குறைத்தல்

பங்கு மூலதனக் கணக்கு வரவு
மூலதனக் குறைப்புக் கணக்கு செலவு

ஆ) பெறுமதி குறைக்கப்பட்ட பங்கு களை புதிய பெறுமதியில் மாற் றும் போது

பழைய பங்கு முதல் கணக்கு வரவு
புதிய பங்கு முதல் கணக்கு செலவு

ii) மூலதனக் குறைப்பிற்கு ஒதுக்கங்களை பாவித்தல்.

மூலதன, வருமான ஒதுக்கக் கணக்கு வரவு
மூலதனக் குறைப்பு கணக்கு செலவு.

iii) கற்பனைச் சொத்துக்களை பதி வழித்தல்.

மூலதனக் குறைப்பு கணக்கு வரவு
உரிய கற்பனை சொத்துக்கள் கணக்கு செலவு

iv) திரண்ட முன்னுரிமைப் பங்கு இலாப நிலுவைக்கு பங்கு ஒதுக்கப்பட்டு தீர்த்தல்.

மூலதனக் குறைப்புக் கணக்கு வரவு
பங்கு மூலதனக் கணக்கு செலவு

v) அறவிட முடியாக் கடனுக்கு ஏற்பாடுகள்

மூலதனக் குறைப்புக் கணக்கு வரவு
அறவிட முடியாக் கடன் ஏற்பாட்டுக் கணக்கு செலவு

vi) நிகழக் கூடிய பொறுப்புக்களுக்கு ஏற் பாடுகள்.

மூலதனக் குறைப்புக் கணக்கு வரவு
நிகழத்தக்க பொறுப்புக்கணக்கு செலவு

vii) நிகழத்தக்க பொறுப்புக்களை தீர்த்தல் (ஏற்பாடு இல்லாதிருந்து)

மூலதனக்குறைப்புக் கணக்கு வரவு
காசுக் கணக்கு செலவு.

viii) சொத்து விற்பனை இலாபம் ஏற்படின்

சொத்துக் கணக்கு வரவு
மூலதனக் குறைப்புக் கணக்கு செலவு

(விற்றபணம் சொத்துக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருப்பின் இலாபத் தொகைக்கு மட்டும்.)

x) சொத்து விற்பனை நட்டம் எனின் நட்டத் தொகைக்கு மட்டும்

மூலதனக் குறைப்புக் கணக்கு வரவு
சொத்துக் கணக்கு செலவு

(விற்றபணம் சொத்துக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருப்பின்)

**Note:-**

மூலதனக் குறைப்பு திட்டத்திற்கு ஏற்ப கடன்கொடுநர், தொகுதி கடன்தாரர் ஆகியோரை செம்மையாக்க வேண்டும். அத்துடன் மூலதனக் குறைப்பு திட்டத்தின் பிரகாரம் ஏற்படும் எந்த ஒரு இலாப நட்டங்களும் மூலதனக் குறைப்பின் ஊடாக ஈடு செய்யப்படல் வேண்டும் மூலதனக் குறைப்பு கணக்கு மீதி இருப்பின் இறுதியாக மூலதன (செலவு மீதியாக) ஒதுக்க கணக்கிற்கு மாற்றப்படும் அவ்வாறு மாற்றும் போது

மூலதனக் குறைப்புக் கணக்கு வரவு
மூலதன ஒதுக்கக் கணக்கு செலவு.

**உதாரணம்:**

## நீண்டகாலமாக நட்டத்தை அனுபவித்துவரும் விமல் லிமிட்டெட்டின் 31-12-1991இல் உள்ளபடியான ஐந்தொகை வருமாறு :

| விபரம் | கொள்விலை | திரண்ட பெ./தேய்வு | தேறியது |
|---|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | | | |
| குத்தகையாதனம் | 156,000 | 29,000 | 127,000 |
| பொறி விருட்சம் | 253,000 | 91,000 | 162,000 |
| சொந்த ஆதனம் | 80,000 | — | 80,000 |
| | 489,000 | 120,000 | 369,000 |
| நன்மதிப்பு | | | 45,000 |
| வியாபார முதலீடுகள் | | | 65,000 |
| | | | 479,000 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| கையிருப்பு | | 70,000 | |
| கடன்பட்டோர் | | 160,000 | |
| | | 230,000 | |
| நடப்புக் கடன் | | | |
| கடன் கொடுநர் | 122,500 | | |
| வங்கிக் கடன் | 140,000 | | |
| தொகுதிக் கடன் வட்டி நிலுவை | 4,500 | (267,000) | (37,000) |
| | | | 442,000 |
| 9% சபெஞ்சர் | | | (100,000) |
| | | | 342,000 |

பங்கு மூலதனம்

| | |
|---|---|
| அனுமதித்தது | |
| ஒவ்வொன்றும் 1/- பெறுமதியான 8 வீத திரள் முன்னுரிமை பங்குகள் 300 000 | 300,000 |
| ஒவ்வொன்றும் 1/- பெறுமதியான சாதாரண பங்குகள் 300,000 | 300,000 |
| | 600,000 |
| வழங்கி இறுத்தது | |
| ஒவ்வொன்றும் 1/- பெறுமதியான 250,000 திரள் முன்னுரிமை பங்கு | 250,000 |
| ஒவ்வொன்றும் 1/- ,, 300,000 சாதாரண பங்கு | 300.000 |
| ஒதுக்கம் | 550,000 |
| பங்கு வட்டம் | 10,000 |
| | 560 000 |
| இலாப நட்டக் கணக்கு வரவு மீதி | (218,000) |
| | 342,000 |

**குறிப்பு:**

i) முன்னுரிமைப் பங்குலாபம் இரண்டு வருடங்களில் நிலுவையாகவுள்ளது.

ii) 31-12-91 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கின் சுருக்கம் வருமாறு:

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| வியாபார நட்டம் | | 158,000 |
| பெறுமானத் தேய்வுகள் | | |
| குத்தகையாதனம் | 7,000 | |
| பொறி | 26,000 | |
| தொகுதிக் கடன் வட்டி | 9,000 | |
| இயக்குநர் கட்டணம் | 12,000 | 54,000 |
| | | 202,000 |
| (+) சென்ற வருட இலாப நட்டக் கணக்கு மீதி | | 16,009 |
| | | 218,000 |

பின்வரும் மூலதனக் குறைப்புத் திட்டத்திற்கு நீதிமன்ற அனுமதி பெறப்பட்டது.

1. முன்னுரிமைப் பங்குகள் ஒவ்வொன்றும் 75 சதம் பெறுமதியான பங்குகளாகவும் சாதாரண பங்குகள் ஒவ்வொன்றும் 25 சதம் பெறுமதியான பங்குகளாகவும் குறைக்க வேண்டும்.

2. இக்கம்பனியின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ஒவ்வொன்றும் 75 சதம் பெறுமதியான 8வீத 400 000 திரள் முன்னுரிமைப் பங்குகளாகவும் ஒவ்வொன்றும் 25 சதம் பெறுமதியான 1200 000 சாதாரண பங்குகளாகவும் மாற்றியமைக்கப்படல் வேண்டும்.

3. நிலுவையாகவுள்ள முன்னுரிமைப் பங்கிலாபத்திற்கு ஒவ்வொன்றும் ஒரு ரூபாவிற்கு இரண்டு புதிய சாதாரண பங்கு வீதம் வழங்கல்

4. பங்கு வட்டக் கணக்கு மீதி மூலதனக் குறைப்பிற்கு பயன்படுத்த வேண்டும்.

5. வியாபார முதலீடுகள் ரூபா 60 000/- வுக்கு தேறியது.

6. நன்மதிப்பு பதிவழிக்கப்படல் வேண்டும்.

7. தொகுதிக்கடன் பத்திரதாரர் தமக்கு நிலுவையாகவுள்ள தொகைக்காக கம்பனியின் சொந்த ஆதனத்தை ரூபா

110000/- விலையில் பெற்றுக் கொண்டு தாம் கம்பனிக்கு கொடுக்க வேண்டிய தொகையை காசாகக் கொடுக்க இணங்கினார்.

8. பழுதடைந்த சரக்குகள் ரூபா 20 000/-வும் அறவிட முடியாது என கருதப்படும் ரூபா 11,000/- கடன்கள் பதிவழிக்கப்படல் வேண்டும்.

9. ஏற்கனவே ஒதுக்கம் செய்யப்பட்டிராத நிகழத்தக்க கடன் பொறுப்பு ஒன்றுக்காக ரூபா 8500/- கொடுக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட மூலதனக் குறைப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பேரேட்டுக் கணக்குகளையும் மூலதனக் குறைப்பின் ஐந்தொகையையும் தருக.

## காசுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| சொந்த ஆதனம் | 5,500 | நிகழத்தக்க் பொறுப்பு | 8,500 |
| வியார முதலீடு | 60,000 | மீ/கீ/கொ/செ | 57,000 |
| | 65,500 | | 65,500 |
| மீ/கீ/கொ/வ | 57,000 | | |

## மூலதனக் குறைப்புக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| சாதாரண பங்குமுதல் (பங்குலாபம்) | 24,000 | முன்னுரிமைப் பங்கு முதல் | 75000 |
| வியாபார முதலீடு | 5,000 | சாதாரண பங்கு முதல் | 225,000 |
| நன்மதிப்பு | 45,000 | பங்கு வட்டம் | 10,000 |
| பழுதடைந்த சரக்கு | 20 000 | சொந்த ஆதனம் | 30,000 |
| அறவிடமுடியாத கடன் | 11,000 | | |
| நிகழத்தக்க பொறுப்பு | 8,500 | | |
| இலாப நட்டக் கணக்கு | 218,000 | | |
| மூலதன ஒதுக்கக் க/கு மாற்றம் | 8,500 | | |
| | 340,000 | | 340,000 |

## 8 வீத முன்னுரிமைப் பங்குமுதல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மூலதனக் குறைப்பு | 75,000 | மீதி | 250,000 |
| மீ/கீ/கொ/செ | 175,000 | | |
| | 250,000 | | 250,000 |

## சாதாரண பங்குமுதல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மூலதனக் குறைப்பு | 225,000 | மீதி | 300,000 |
| மீ.கீ.கொ.செ. | 99,000 | மூலதனக் குறைப்பு | 24,000 |
| | 324,000 | | 324,000 |
| | | மீ.கீ.கொ.வ. | 99,000 |

## 9 வீதம் தொகுதிக் கடன் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| சொந்த ஆதனக் கணக்கு | 110,000 | மீதி | 100,000 |
| | | வட்டி | 45,00 |
| | | காசு | 5,500 |
| | 110,000 | | 110,000 |

## பங்கு வட்டக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மூலதனக் குறைப்பு | 10,000 | மீதி | 10,000 |
| | 10,000 | | 10,000 |

## இலாப நட்டக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மூலதனக் குறைப்பு | 218,000 | மீதி | 218,000 |
| | 218,000 | | 218,000 |

## வியாபார முதலீட்டுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி | 65,000 | காசு | 60,000 |
| | | மூலதனக் குறைப்பு | 5'000 |
| | 65,000 | | 6,5000 |

## நன்மதிப்புக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி | 45,000 | மூலதனக் குறைப்பு | 45,000 |
| | 45,000 | | 45,000 |

## கடன்பட்டோர் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி | 160,000 | மூலதனக் குறைப்பில் [அ.மு.கடன்] | 11,000 |
| | 160,000 | மீ. கீ, கொ. செ. | 149,000 |
| | | | 160.000 |
| மீ. கீ. கொ. வ. | 149,000 | | |

## சொந்த ஆதனக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி | 80,000 | தொகுதிக் கடன் | 110,000 |
| மூலதனக் குறைப்பு | 30.000 | | |
| | 110,000 | | 110,000 |

## கையிருப்புக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி | 70,000 | மூலதனக் குறைப்பு (பழுதடைந்தவை) | 20,000 |
| | | மீ. கீ. கொ. செ. | 50,000 |
| | 70,000 | | 70,000 |
| மீ கீ. கொ. வ. | 50,000 | | |

## மூலதன ஓதுக்கக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ, கீ. கொ. செ. | 8,500 | மூலதனக் குறைப்பு | 8.500 |
| | 8,500 | | 8,500 |
| | | மீ. கீ. கொ.. வ, | 8,500 |

## விமல் லிமிட்டெட்டின்
## 31-12-1991இல் மூலதனக் குறைப்பின் பின் ஐந்தொகை

| விரம் | கொள்விலை | பெறு/தேய்வு | தேறியது |
|---|---|---|---|
| நிலையான சொத்து | | | |
| குத்தகையாதனம் | 156.000 | 29,000 | 127,000 |
| பொறி விருட்சம் | 253,000 | 91,000 | 162,000 |
| | 409,000 | 120,000 | 289,000 |
| நடப்புச் சொத்து | | | |
| இறுதியிருப்பு | | 50,000 | |
| கடன்பட்டோர் | | 149,000 | |
| காசு | | 57,000 | |
| | | 256,000 | |
| நடப்புக் கடன் | | | |
| கடன் கொடுநர் | 122,500 | | |
| வங்கிக் கடன் (குறுங்காலக் கடன்) | 140,000 | (262,500) | 6,500 |
| | | | 282,500 |

| | |
|---|---|
| *அனுமதித்த மூலதனம்* | |
| *ஒவ்வொன்றும் 75 சதம் பெறுமதியான 8 வீத 400,000 திரள் முன்னுரிமைப் பங்குகள்* | 300,000 |
| *ஒவ்வொன்றும் ௨௫ சதம் பெறுமதியான 1200,000 சாதாரண பங்குகள்* | 300,000 |
| *வழங்கிய மூலதனம்* | 600,000 |
| *ஒவ்வொன்றும் 75 சதம் பெறுமதியான 8 வீத திரள் முன்னுரிமைப் பங்குகள்* | 175,000 |
| *ஒவ்வொன்றும் 25 சதம் பெறுமதியான சாதாரண பங்குகள்* | 99,000 |
| *ஒதுக்கம்* | |
| *மூலதன ஒதுக்கம்* | 8,500 |
| | 282,500 |

**உசாத்துணை நூல்கள்:**

1. கணக்குப் பதிவியலும் கணக்கியலும் : By **ஸ்பைஸர் அன் பேக்கிலர்**
2. நிதிக் கணக்கியல் : By **A. R. ஜேனிங்ஸ்**
3. இலங்கைக் கணக்கியல் நியமங்கள் :
4. கணக்கியல் சுருக்கம் பகுதி III : By **வே. அழகேசன்**
5. கம்பனிக் கணக்குகள் : By **க. தங்கராசா**

HOME NEEDS

Dealers in Furniture

**278, 280** (402) **K. K. S. Road,**

**JAFFNA**

**ஹோம் நீட்ஸ்**

**யாழ்ப்பாணம்.**

# புவியியலில் ஒரு கண்ணோட்டம்

க. பிரியதர்சினி
ஆண்டு - 13 வர்த்தகப்பிரிவு

இலங்கையில் இன்று நடைமுறையிலுள்ள பாடசாலைப் பாடவிதானத்தில் புவியியல், பொதுத்தராதர உயர்தர வகுப்புகளில் ஒரு பாடமாக இடம் பெற்றிருக்கின்றது. இவ் வகுப்புகளில் கலை, வர்த்தகப் பிரிவு மாணவர்களே புவியியலை ஒரு பாடமாக கற்கின்றனர். இதன் பாடவிதானத்தில் சமூக, பொருளாதார விடயங்கள் கூடிய முக்கியத்துவம் பெற்றுள்ளன.

கடந்த சில வருடங்களில் கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புகளில் புவியியல் கற்கும் மாணவர்களின் தொகை எண்ணிக்கையில் அதிகரித்து வந்துள்ளது. ஏனெனில் புவியியல் ஆனது புவியில் உள்ள தரைத்தோற்றம், காலநிலை, மனிதத் துலக்கங்கள் போன்றவற்றை ஆராய்கின்றது. அண்மைக் காலங்களில் இலங்கையில் இருந்து குடியகல்வு நடைபெறுகிறது. இவ் வெளியேற்றத்தின் மூலம் அகல்கின்ற மக்கள் ஓரளவாயினும் புவியைப் பற்றி அறிந்திருக்க வேண்டும் என்று கூறுகின்றேன். ஏனெனில் ஓரளவு புவியின் தன்மைகளைப் பற்றி அறிந்திராவிடின் அவர்கள் பாலைவனத்தில் கூட தமது வாழ்க்கையை வாழ முயன்றிருக்கலாம். மக்கள் ஓரளவாயினும் புவியைப் பற்றி, அதன் தன்மைகளைப் பற்றி அறிந்திருந்தமையினால் தான் தாம் வாழக்கூடிய இடத்தினையும், வாழ்வதற்குரிய உணவினையும், உடையினையும் பெறக்கூடிய இடங்களில் வாழ்கிறார்கள். உதாரணமாக அமெரிக்கா செல்ல விரும்பும் ஒருவரை பயணமுகவர்கள் பாங்கொக்கிற்கு கூட்டிச்சென்று அங்கிருந்து அமெரிக்காவிற்கு அனுப்புவதாக கூறுகிறார்கள். புவியானது கோளவடிவமானது. நாம் சதுரக்கோட்டுப் படத்தில் புவியைத் தட்டையாகப் பார்த்தாலும் அது கோள வடிவமானது. எனவே கோளவடிவத்தில் அமெரிக்காவிற்கு அடுத்து பசுபிக் சமுத்திரம் உள்ளது. எனவே அமெரிக்காவிற்கு அடுத்துள்ள பசுபிக்கின் எதிர்க்கரையை அண்மித்து பாங்கொக் உள்ளது. ஆகவே பசுபிக் சமுத்திரத்தை கடந்தவுடன் வன்கூவரை அடைந்து விடலாம். எனவே புவியியல் கற்றறிந்த ஒருவரால் இவற்றினை தெரிந்து கொண்டு இலகுவாக பிரயாணத்தை மேற்கொள்ள முடியும். எனவே புவியியலை முக்கிய பாடமாக கற்பதனால் ஏனைய நாடுகளைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. இப் புவியியலைப் படிக்கும் போது மாணவர் மத்தியில் ஆர்வம் ஏற்படுகிறது. ஏனெனில் தாம் வாழ்கின்ற புவியைப் பற்றி அறிந்து கொள்ள யாருக்குமே விருப்பமாகத்தான் இருக்கும். எனவே இப் புவியில் எந்தப் பகுதியில் மனிதர்கள் வாழ்கிறார்கள். பாலைவனங்கள் போன்ற பகுதிகளில் ஏன் வாழ்வதில்லை. கனியங்களை எங்கெங்கே கண்டுபிடிக்கிறார்கள். கைத்தொழிற்சாலைகளின் அமைவிடங்கள். இவற்றின் மூலம் எந்த நாடுகள் முன்னேற்றம் அடைந்துள்ளன. அதிகரிக்கின்ற சனத்தொகையினால் என்னென்ன பிரச்சனைகள் தோன்றுகின்றன போன்ற விடயங்களை கற்கும் போது உண்மையிலேயே எம்மை அறியாமலே ஆர்வம் ஏற்படும். மேலும் மேலும் இவை பற்றி அறிய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படும்.

புவியியலில் உயர்தர வகுப்பில் 3 வினாத்தாள்கள் இருக்கின்றன. இவற்றுக்கான அறிவை 6ம் வகுப்பில் இருந்தே அடிப்படைகளைக் கற்றுக்கொண்டு வருகி

றோம். உயர்தர வகுப்பின் ஆரம்ப வகுப்புக்களில் அடிப்படையாக கற்றவற்றை நாம் விரிவாக ஆராய்கிறோம், புவியியல் 3 பகுதிகளில் 1ம் பகுதி புவியில் உள்ள மலைகள், நீர்ப்பாசன குளங்கள், வீதிகள், குடியிருப்புக்கள், பயிர்ச்செய்கை நிலங்கள் போன்றவை எவ்வாறு அமைந்துள்ளன என்பது பற்றி வரைவதாகும். இது மிக இலகுவானதாகும். இதற்கென்றே அளவுத் திட்டம். குறியிடுகள் போன்றன இருப்பதனால் அவற்றைப் பயன்படுத்தி இலகுவாக வரையலாம். மற்றையது ஏறியங்கள் இதன் மூலம் கோளவடிவக் குவியை தட்டையன தாளில் வரையும் முறையை கற்கின்றோம். எனவே இவ்வகையான வரைபடங்களுக்கு அளவுத்திட்டம் இருப்பதனால் நாம் இப் பகுதிக்குரிய புள்ளிகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம். 2ம் பகுதியானது புவிக் கோளவகத்தின் உள்ளே இருக்கின்ற குழம்புகளினால் ஏற்படுகின்ற விசைகள் காரணமாக தோன்றுகின்ற மலைகள்' நிலவுருவங்கள், நீர் ரோட்டத்தினால் ஏற்படும் நிலவுருவங்கள் காற்றரிப்பினால் ஏற்படும் நிலவுருவங்கள் போன்றவற்றை. காலநிலை பற்றியும், பொருளாதார பற்றிய குறிப்புகளை நாம் விளங்கித் தெளிவாகப் படித்துக் கொண்டோமானால் இதுவும் இலகுவான பகுதியே ஆகும் புவியியலில் 3ம் பகுதியானது. நாடுகளின் அபிவிருத்தி நிலைமைகளைப் பற்றியும். சர்வதேச தாபனங்கள் என்னென்ன நோக்கத்திற்கு, எத்தனையாம் ஆண்டு உருவாக்கப்பட்டது என்பது பற்றி அறிவதாகும். இதன் படி குறிப்பிட்ட சில நாடுகளை எடுத்து அவற்றினை தனித்தனியாக பயிர்ச்செய்கை கைத்தொழில், தரைத்தோற்றம், காலநிலை போன்றவற்றை அறிந்து அந்நாட்டின் முன்னேற்றத்துக்கு வேண்டிய காரணிகளை கண்டறிவதாகும். அது மட்டுமன்றி சில நாடுகள் அபிவிருத்தியில் முன்னேறியும் சில நாடுகள் அபிவிருத்தியில் பின்தங்கி இருப்பதற்கான காரணங்களை நாம் தனித்தனியாக நாடுகளை ஆராயும் போது தெளிவாக அறிந்து கொள்ளலாம். சர்வதேச தாபனங்கள் எந்தெந்தநாடுகளுக்கு உதவிபுரிகின்றன அவற்றின் முக்கிய நோக்கங்கள் என்ன, எமது நாட்டுக்கு எந்த தாபனங்கள் உதவி வழங்குகின்றன என்பது பற்றியும் கற்பதாகும். எனவே நாம் இருக்கும் நாடு அபிவிருத்தியில் ஏன் பின்தங்கியுள்ளது. எமது நாட்டின் அபிவிருத்தியினைசமூக பொருளாதார குறிகாட்டிகள் மூலம் அவற்றின் போக்கினை அறிந்து கொள்ளவும் அமெரிக்க ஐக்கியராச்சியம் போன்ற நாடுகள் எவ்வாறு முன்னேறி உள்ளன என்பவை பற்றி நாம் ஆராய்ந்து கற்கும் போது ஆர்வமும் ஊக்கமும் தரக்கூடிய பாடமாக அமைந்துள்ளது. எனவே எந்தப் பாடமுமே விளங்கிப் படிக்காது போனால் கஷ்ரமாகத்தான் இருக்கும். ஆனால் அதனை விளங்கிப் படிப்பதன் மூலம் அதன் அருமையான கருத்துக்களைக் கற்றறிந்து எமது அறிவினை வளப்படுத்தக் கொள்ள முடியும். இவ்வாறு மேற்கூறப்பட்டது போல் புவியியலில் 3 வினாத்தாள்கள் காணப்படுவது பாடத்தின் தரத்தைப் பேணுவதற்கு நல்ல தொரு அம்சமாக காணப்படுகிறது. மேற்கூறிய காரணங்களினால் புவியியல் முக்கிய பாடமாக கருதப்படுகிறது.

புவியியலை ஒரு பாடமாகக் கற்ற ஆசிரியர் ஒருவர் சமூகக்கல்விக்குள் அடங்கும் பகுதிகளை விரிவாகக் கற்பிக்க கூடியவராக இருக்கின்றார். எனவே இதனை தெளிவாக விளங்கிக் கொள்வோமாயின் நாம் அதிக புள்ளிகளைப் பெறக் கூடியதாக இருக்கும். கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் சமூகக் கல்வியில் கிடைக்கும் புள்ளிகளுடன் கணிதம், விஞ்ஞானப் பாடங்களின் புள்ளிகளை ஒப்பிடும் போது கணித, விஞ்ஞான பாடப் புள்ளிகள் சமூகக்கல்விப் பாடப்புள்ளியிலும் பார்க்கக் குறைவாக இருப்பதனைக் காணலாம். பல்கலைக்கழகத்தில் குறிப்பாக கலை, வர்த்தகப் பிரிவில் பொருளியலுக்கு அடுத்து புவியியல் பாடத்திலேயே சிறப்புப் பட்டம் பெறக் கூடுதலான மாணவர்கள் விரும்புகிறார்கள். பாடவிதானம், பயிற்சித் தன்மை போன்றனவும் புவியியலில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் குறைவாக இருப்பதனால் இலகுவில் தொழில்

வாய்ப்பு பெறுதல் போன்றனவும் மாணவர்களின் விருப்பத்திற்குக் காரணங்களாகும்.

புவியியலைக் கற்பதன் மூலம் புவியியற் கலைச்சொற்களை அறிகின்றனர். புவியியற் கல்வியில் வெளிக்கள ஆய்வும் சுற்றுலாவும் முக்கியம் பெறுகின்றன. நிலவுருவங்கள், நிலப்பயன்பாடுகள், கைத்தொழில் இடஅமைவு போன்றவற்றை அறிவதற்கு சுற்றுலாக்கள் அவசியமாகின்றன. இச் சுற்றுலாக்கள் வருடத்திற்கு ஒரு தடவை அல்லது இரு தடவை செயற்படுத்தப்பட வேண்டும். இச் சுற்றுலாக்கள் மூலம் மாணவர்களின் அறிவுத்திறன் விருத்தியடைகிறது. அதாவது மற்றைய பாடங்களைப் போல் அல்லாது தாம் கற்றவற்றை இச் சுற்றுலாக்கள் மூலம் நேரில் பார்த்து தமது சந்தேகங்களை நீக்கித் தெளிவினைப் பெற்று திருப்தியடைகின்றனர். இப் புவியியல் பாடத்தில் நாம் எந்தப் பொய்யான கூற்றையுமே வெளியிட முடியாது. ஏனெனில் புவியின் அம்சங்களை ஆராய்ந்து அதனை நேரில் கண்டு கொள்ளக் கூடியதாகவும் இருப்பது ஆகும். இச் சுற்றுலாவின் போது சிறப்பு நிலவுருவங்களான கீரிமலை, நிலாவரை, பெரிய மண்டபம் இன்னும் பல அம்சங்களை எல்லாம் நேரில் பார்த்து கூடிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்கிறோம். சுற்றுலாக்கள் மூலம் நாம் எமது நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்திகளை அறிந்து கொள்ளலாம்.

எனவே நாம் தொகுத்து நோக்கின் புவியியல் ஆனது ஒரு முக்கிய பாடமாகக் கருதப்படுகிறது. எனவே முக்கிய பாடமாகப் புவியியல் கருதப்பட்டு மாணவர்களது எண்ணிக்கை அதிகரிப்பதற்கு பின்வருவன காரணங்களாகும்:

1.) பாடசாலைகளில் நடைமுறையில் உள்ள சமூகக்கல்விப் பாடத்திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு ஏனைய பாடங்களின் பாடவிதான அளவுக்கு மாற்றியமைக்கப்பட்டமை.

2.) சமூகக்கல்வியில் புவியியல் அறிவு கொண்ட பட்டதாரி ஆசிரியர்கள் கூடியளவு ஈடுபடுத்தப்பட்டமை.

3.) புவியியல் கடினமான பாடம் என்ற கற்பனைப் பயத்தினை மாணவர்கள் மத்தியில் நீக்கப்பட்டு வந்தமை.

4.) பா்டப்பயிற்சி வேளைகளில் மாணவர்களினால் கூடிய கவனங்கள் செலுத்தப்படுகின்றமை.

5.) போட்டிப் பரீட்சையில் புவியியலை பகுதி பகுதியாகப் பிரித்து கற்பதனை இலகுவாக்கியமை.

6.) நாட்டின் அண்மைய கால நடவடிக்கைகளை அறிய வசதியாக இருப்பது.

ஆகவே புவியியல் ஆனது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பாடமாக உள்ளது. எனவே இப்பாடத்தினை அனைவரும் கற்று தமது அறிவினை வளம்படுத்திக் கொள்ள வேண்டும் என நான் விரும்புகின்றேன் தற்கால உலகிற்கு புவியியல் ஓர் வழிகாட்டியாகும்.

★

★ ★

வணிக நாதம் வளர எமது நல்லாசிகள்!

★
★

## ஏ. கே. எஸ்.
## இறைண்டிங் மில்

கே. கே. எஸ். றோட்,
சுன்னாகம்.

வணிக நாதம்
சிறப்புற எமது வாழ்த்துக்கள்

## சுன்னாகம்
## பல. நோ. கூ. சங்கம்

சுன்னாகம்.

## யூனி பெக்ஸ்
## வீடியோ

3 கெமராக்கள் பொருத்தி
'நவீன விஷன் மிக்சர்' மூலம்
வீடியோ படம் பிடித்துக்
கொடுக்கப்படும்

சிவகாமி அம்பாள் அருகாமை
தில்லையம்பதி கோண்டாவில்

கிளை:

குளப்பிட்டிச் சந்தி,

கொக்குவில்.

உரிமையாளர்:

சு. முத்துலிங்கம்

## நியூ பத்மா கபே

29, கே. கே. எஸ். றோட்,

யாழ்ப்பாணம்.

சுத்தமான உணவு வகைகளை
சுவைத்து இன்புற நாடும்
ஒரே நிறுவனம்

# இதிகாசம் கூறும் சமயமரபு

கா. யோகேஸ்வரி
ஆண்டு . 13 கலைப்பிரிவு

இதிகாச புராணங்கள் இந்து சமயத்தின் கருவூலமாக விளங்குகின்றதென்றால் மிகையாகாது. இதிகாச இலக்கியங்களாக இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இதிகாசம் இதி - ஹ - அச எனப்பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள் ''முன்பு இப்படியிருந்தது'' என்பதாகும். இதிகாசமானது முன்பு மக்கள், தேவர், அரசர் முதலியவர்களிடையே நடந்த நிகழ்ச்சிகள் அவர்களைப் பற்றிய கதைகள் முதலியவற்றைக் கூறுவதாய் அமைந்துள்ளது.

இது பொதுவாக சூரியவம்ச, சந்திர வம்ச அரசமரபுகளின் வீரச்செயல்களையும் எடுத்துக்கூறி அக்கதையினூடே அறப்பண்புகள், தவம், தீர்த்தம், விரதம், மந்திரம், யோகம், பக்தி, ஞானம், அர்ச்சனைக்குரிய அஷ்டோத்திர நாமங்கள் ஆகியவற்றைக் கூறுவதோடு அத்துடன் அறிவியல், சமூகவியல், வரலாறு, அரசியல் கல்விமுறை போன்ற பல்துறை சார்ந்த விடயங்களைக் கூறுவதனால் இந்நூல்களை அறிவுசார்ந்த ''கதைக்களஞ்சியம்'' என அறிஞர்கள் போற்றுகின்றனர்.

இராமாயணக்கதை அயோத்தியை ஆண்ட இராமனது கதையை ஒரு பக்திச் சுவை சார்ந்த காப்பியமாக எழுதப்பட்டுள்ளது. தெய்வ அம்சங்களைப் பிரதிபலிப்பதாயும் காணப்படுகிறது. எனவே தான் இந்துக்கள் இராமனைத் தெய்வமாக மதித்து மக்களைக் காப்பாற்றுவதாக இராம அவதாரம் உணர்த்துகின்றது. இராமாயணத்தில் இராமபிரான் அஸ்வமேத யாகம் செய்துசக்கரவர்த்தியாகிய நிலைமை எடுத்துக்கூறப்படுகிறது. அக்காலத்தில் வர்ண ஆச்சிரம நிலைமைகள் சிறப்புற்றிருந்தமையும், அந்தணர்களின் கடமைகளும், அவர்களுக்குத் தானம் கொடுக்கும் வழமை முறைகளில் இராமனது உயர்ந்த பண்பினைக் காட்டுகிறது. இராவணனோடு போர் புரிந்து இராமன் அயோத்திக்குத் திரும்பும்போது சிவலிங்கங்களைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டதாக இராமாணக்கதை கூறுகின்றது.

மகாபாரதம் வேதவியாசரால் இயற்றப்பட்டதென்றும் அதாவது வேதவியாசர் பாட விநாயகர் எழுதியதாக மரபு வழிக் கதைகள் கூறுகின்றன. இதில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் ஏற்பட்ட குடும்ப அரசியல் பிரச்சினைகளைக் கதைக் கருவூலமாக வைத்து மக்களை நல்வழிப் படுத்தும் ஒரு காவியமாக எழுதப்பட்டிருப்பதைக் காணலாம்.

உதிஷ்டிரன் இயமனின் மைந்தனாகவும், வீமன் வாயுபகவானின் மைந்தனாகவும், அருச்சுனன் இந்திரனின் மகனாகவும், நகுலன் சகாதேவன் அஸ்வினித் தேவர்களின் புதல்வராகவும் கருதப்பட்டனர். இத்தகைய தொடர்பு அவர்களிடம் தெய்வீகத்தன்மை இருப்பது என்றும் அவர்களுடைய குணவியல்பு நடைமுறைகள் மக்களால் போற்றப்பட்டு வணங்கப்படும் தரத்திற்கு உயர்த்திக் கூறப்படுகிறது.

பாண்டவர்களுக்குக் கிருஷ்ணனுடைய உதவியும், ஆலோசனைகளும் நல்லோரிடத்தில் இறைவன் பக்கத்துணையாகவும் ஆபத்தில் பாதுகாவலனாகவும் துணைபுரிவான் என்பதும் எடுத்துக்காட்டப்படுகின்றது. கிருஷ்ணபகவான், திரௌபதி மானபங்கப்படும்பொழுது அவளைக் காப்

பாற்றுபவனாகவும் "திக்கற்றவருக்குத் தெய்வம் துணை" என்பதனையும் அக்கதை மக்களுக்கு உணர்த்துகின்றது.

துரோணருக்கும் அருச்சுனனுக்கும் உள்ள ஈடுபாடு, குருபக்தி மகத்துவத்தை எடுத்துக் கூறுகிறது. அத்துடன் பீஷ்மர் துரோணர், கிருபாச்சாரியார் போன்றவர்களிடம் கௌரவர்களும், பாண்டவர்களும் குருகுலக்கல்வி கற்றமுறையும் அருச்சுனன் தவம், தீர்த்தயாத்திரை, விரதம், சிவனிடம் பாசுபதம் பெற்றமையும், மும்மூர்த்திகளின் முதல்வரான சிவபெருமானின் பெருமையும், சிவ வழிபாட்டின் மகிமையும் கூறப்படுவதைக் காணலாம்.

மகாபாரதம் தந்த பெரும் பொக்கிஷமான பகவத்கீதை உலகம் போற்றும் மறையாகவும், பிரஸ்தானத் திரையங்களில் ஒன்றாகவும் போற்றப்படுகிறது. இதில் பிரமம் பிரமத்தின் தோற்றம், ஆத்மாவின் நிலை, ஆத்மாவின் செயற்பாடு, முத்தியடைவதற்கான வழிமுறைகள் போன்றன உரையாடல் மூலம் விளக்கப்படுகின்றன.

இறைவனை அடைவதற்குரிய வழிகளான பக்தியோகம் ஞானயோகம், கர்மயோகம் ஆகியவற்றை எடுத்துக்கூறி அவற்றில் கர்மயோகம் எல்லோராலும் கடைப்பிடிக்க முடியும் என்பதைத் துல்லியமாகக் கூறுகின்றது. அத்துடன் அக்காலத்தில் சூரியவழிபாடு, சிவவழிபாடு, பிதிர்க்கடன் அக்கினி வழிபாடு போன்றவற்றின் முக்கியத்துவம் முதலியன பாண்டவர்களின் கதைகளினூடே சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

இங்கு தருமர் இராஜசூய யாகம் செய்யும்முறை அதனால் ஏற்படும் பிரதிபலன்கள் அத்தோடு புரோகிதரின் சமயச்சடங்குகள் கிரியைகள் தானதருமம் பற்றியவிதிகளும் கிளைக்கதைகள் மூலம் அதன் முக்கியத்துவத்தைக் காணலாம். கிருஷ்ணபரமாத்மா அருச்சுனனுக்கு உபதேசம் செய்யும் வேளையில் கன்ம மறுபிறப்புப் பற்றியும், மரணத்திற்குப் பின் உயிர் வாழ்தல் பற்றியும், வீரர்கள் தாம் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்ப மறுஉலகத்தில் இன்ப துன்பங்களை அனுபவிப்பர் எனவும், யுத்த வீரன் நியாயமுறையில் போர் செய்து இறந்தால் அவன் இந்திர உலகத்திற்குச் சென்று இன்பமாக வாழ்வான் என்றும் குறிப்பிடப்படுவதைக் காணலாம்.

எனவே இதிகாசக்கதைகள் மக்களிடையே சமய உணர்வையும் நல்லொழுக்கத்தையும் கடைப்பிடிப்பதற்கு வழிகாட்டியாக அமைந்திருப்பதைக் குறிப்பிடலாம். இதில் அடங்கும் நூல்களாவன இராமாயணமும், மகாபாரதமும். இது மக்களுக்கு ஒழுக்கம், சமயம், தெய்வீகவரலாறு, தெய்வச்சிறப்பம்சங்களின் தோற்றப் பொலிவின் விளக்கம், வழிபாட்டு மரபுபோன்ற சமயமரபுகளை விளக்கி நிற்பதால் பண்டையமக்கள் இக்கதைகளைப் படித்துப் பொருளுணர்ந்து சமயாசார வழிகளில் ஒழுகி இன்புற்று வாழ்ந்தனர் எனக் கூறுவது மிகையாகாது.



போசாக்குமிக்க உணவைக்
கொடுத்து
நல்ல சமுதாயத்தை
உருவாக்குவோம்.

இன்றே!
குழந்தைகள், பிள்ளைகள்.
கர்ப்பிணி,
பாலூட்டும் தாய்மார்களுக்கும்
போஷாக்குமிக்க

**ஜீவாகாரத்தை**
பாவித்து
பயன்பெறுங்கள்!

## அண்ணா
## தொழிலகம்

இணுவில் தெற்கு,
இணுவில்.

## ஞானம் புத்தக நிலையம்

கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

★

*சகலவிதமான பாடசாலை*
*உபகரணங்களையும். காரியாலய*
*காகிதாதிகளையும்*
*— பெற்றுக்கொள்ளலாம். —*

★

## G. S. Linganathan & Co.,

**TEXTILES MERCHANTS**
13, 14, Grand Bazaar.
**JAFFNA.**

இந்திய முத்துக்கள்
விற்பனையாளர்

## சிவசம்பு
## களஞ்சியம்

No. 3, *மின்சார நிலைய வீதி.*
*யாழ்ப்பாணம்.*

# பாரதிதாசன் கல்வி நிலையம்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,

கலை வர்த்தக வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. S. வரதராஜன் |
| அளவையியல் | — | திரு. S. S. மனோகரன் |
| வர்த்தகம் | — | திரு. பசில் |
| கணக்கியல் | — | திரு. யோகராஜா. திரு. சௌந்தி |
| தமிழ் | — | திருமதி மீரா |
| இந்து நாகரீகம் | — | திரு. பாலா |

பகல் நேர வகுப்புகள் நடைபெறுகின்றன.

## Jaffna Technical Institute

52/1, Stanley Road,
**JAFFNA.**

★ Radio, T. V. and Video Deck Technology.

★ Electrical Wiring

★ Rewinding

★ Motor Mechnism

## பிறைற் ஒக்ஷன் சென்ரர்

275, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

★ பழைய புதிய தளபாடங்கள் மற்றும்

★ வீட்டுப் பாவனைப் பொருட்கள் வாங்கவும், விற்கவும் தனித்துவமான நிறுவனம்.

உங்கள் தேவையே
எங்கள் சேவை!

வணிக நாதம் தொடர்ந்து வெளிவர எமது வாழ்த்துக்கள்!

நமது பாரம்பரிய வளத்திலிருந்து

★ சுவை மிகு உணவு வகைகள்
★ இனிப்பு சிற்றுண்டி வகைகள்
★ வீட்டுப் பாவனைப் பொருள்கள்
★ பனந்தும்பு தூரிகைகள்
★ மென்பான வகைகள்
★ கால்நடைகளின் உணவுகள்
★ அலங்காரப் பொருள்கள்

# கற்பகம்

ஆகிய உற்பத்திகளை பனை அபிவிருத்திச் சபையின் விற்பனை நிலையங்களில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு;- சந்தைப்படுத்தும் பகுதி

## பனை அபிவிருத்திச் சபை

**53, கண்டி வீதி,**

**யாழ்ப்பாணம்.**

---

★ கறுப்பு - வெள்ளை

1. அடையாள அட்டை 2. கடவுச் சீட்டு (P P.) 3. போஸ்கார்ட் அளவு படம்

★ கலர்ப் படம் பிடித்தல்

திருமண, பிறந்தநாள், மற்றும் விசேட வைபவங்கள்

★ கலர் பிலிம் சுருள் கழுவுதல்

அவசர தேவைக்கு படம் பிடித்தல்

மற்றும்

சகல புகைப்படத் துறையில் அன்றும், இன்றும், என்றும்

சிறந்த படப்பிடிப்பாளர்

## பாரத் ஸ்ரூடியோ

**விற்பனைக்கு :-**

1. பிலிம் சுருள்கள் (Film Rolls) 2. போட்டோ அல்பம்

**82/1, கஸ்தூரியார் வீதி,**

**யாழ்ப்பாணம்.**

வணிக நாதத்திற்கு எமது வாழ்த்துக்கள்!

செல்லையா சிவபாதலிங்கம்

**வைரக்கல் நகை வியாபாரம்**

**191 H, 28 H, கஸ்தூரியார் வீதி,**

**யாழ்ப்பாணம்.**

சிறந்த வேலைப்பாடுள்ள தங்க வைர நகைகளை
விரும்பிய டிசைன்களில் தெரிவு செய்யலாம்.

ஓடர்கள் குறித்த தவணையில்
சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

ECALOM

**மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்.**

**A/L 93 - 94**

*பொருளியல்* — திரு. உதயன்
*கணக்கியல்* — திரு. சௌந்தி
*வர்த்தகம்* — திரு. சாம்ராஜ்
*அளவையியல்* — திரு. பிரபாகரன்

**வர்த்தக வகுப்புகளின் தனித்துவம் வாய்ந்த நிறுவனம்**

# போஸ்கோ

# BOSECO

★ பாடசாலை உபகரணங்கள்.
★ காகிதாதிகள்
விற்பனையாளர்கள்

3, நவீனசந்தைக் கட்டிடம்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் தேவைகளுக்கு
எங்களிடம் வாருங்கள்

## பிருந்தா ஜுவல்லர்ஸ்

301, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

புதுப் புது டிசைன்களில் தங்க நகைகள் உற்பத்தி செய்பவர்கள்.

ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

**Birunthaa Jewellers**
301, Kasthuriar Road,
JAFFNA.

22 கரட் தங்க
நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

# நித்தியா

## ஜுவல்லர்ஸ்

177/4 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# லிங்கம்

# கூல்பார்

# LINGAM

# *Cool Bar*

51, வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## ஜெகா தையல் அகம்

729, கே கே. எஸ். றோட்,
யாழ்நகர்

ஆண்-பெண் இருபாலாருக்குமான ஆடைகள் அவர்கள் விரும்பத்தக்க முறையில் குறித்த தவணையில் தைத்துக் கொடுக்கப்படும்.

உரிமையாளர்:
**பொ. சின்னராசா**
(ரெயிலர்)

வணிக நாதம் வாழ்க, வளர்க!

## வசந்தா பாமஸி

280, ஆஸ்பத்திரி வீதி,
சத்திரச்சந்தி, யாழ்ப்பாணம்

எங்களிடம் ஆங்கில மருந்துகள் பெற்றுக்கொள்ளலாம்.

மக்களின் நலன் கருதி
சனி, ஞாயிறு ஆகிய நாட்களில்
இவ் ஸ்தாபனம் திறந்து இருக்கும்

வர்த்தக மாணவர் மன்றம்
வாழ்க, வளர்க!

## ஆசீர்வாதம் ஸ்ரோர்ஸ்

61, பெரியகடை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

★ பாடசாலை உபகரணங்கள்
★ காரியாலய காகிதாதிகள்

**மொத்த-சில்லறை வியாபாரிகள்**

## அருள் முருகன்
### ஜுவல்லர்ஸ்

96/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உறுதியும், உத்தரவாதமும் உள்ள தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள சிறந்த தாபனம்.

22 கரட் நகைகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.

# றாஷேஸ்

## தையல் மாளிகை

ஆண், பெண் இருபாலாரது உடைகளும்
சிறந்த முறையில் தைத்துக் கொடுக்கப்படும்

இல. 559, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

---



# விக்ரம் தையல் மாளிகை

215, அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

Vikram

# VIKRAM TAILORING PALACE

215, Arsuna (Stanley) Road, Jaffna.

★ LONDON DIPLOMA HOLDER ★

வணிக நாதம்
சிறப்புற எமது நல்வாழ்த்துக்கள்

**தாசன் அச்சகம்**

மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

தாசன் அச்சகம், யாழ்ப்பாணம்.